நவக்கிரக தோஷ பரிகாரம் என்னும்

# ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி

இஃது

சி. ஜி. ராஜன் போதித்தபடி,

சேந்தமங்கலம் ஜோதிடர், கோமடம். ஸ்ரீனிவாச அய்யங்கார்

அவர்களால் எழுதப்பட்டு

"நாமகள் திருக்கணித பஞ்சாங்கம்" "தென்னாட்டு வாக்கிய பஞ்சாங்கம்" இவைகளின் கணிதரும், பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியரும், ஜாதக கணிதத்தின் ஆசிரியரும், இராஜ ஜோதிட கணிதம் என்னும் நவக்கிரக ஸ்புட கணிதத்தின் ஆசிரியருமாகிய

C. கோவிந்த ராஜன், என்னும்

C. G. *ராஜன்*, *B. A.*, (MATHEMATICS)

அவர்களால் பார்வையிடப்பட்டு,

சென்னை, சௌகார்பேட்டை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்திற்கு அடுத்த ஆயலூர் முத்தையா முதலி தெருவு, 36-வது நெம்பர் வீடு

C. சுப்பிரமணியம் அண்டு பிரதர்ஸ்,

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

அவர்களால் தமது

" சி. ஜி. யூரேனியா" அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

All Rights Reserved] 1946 [விலை ரூ. 1—0—0.

# தென்னாட்டு பஞ்சாங்கம்

## வாக்கியம்.

இது தென்னாட்டிற்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட தமிழ் வாக்கிய பஞ்சாங்கம். இதைத் தென்னாட்டு ஆஸ்திகர்களும், வைதீகர்களும், தங்கள் வீடுகளிலும், கோயில்களிலும் தங்கள் தங்கள் பூர்வீக தர்ம சாஸ்திரம், நிபந்தனக் கிரந்தம், பரம்பரை வழக்கம் முதலிய கொள்கைகளைக் கைவிடாமல் அனுஷ்டிக்க வேண்டும் என்ற ஆசையை உடையவர்களும் அனுஷ்டிக்கு மாறு தயார் செய்திருக்கிறது. இது பூர்வீக கணித முறைப்படி தயார் செய்யப்பட்ட (பஞ்சாங்கத்தின் பஞ்ச அங்கங்களாகிய) 1-வாரம், 2-திதி, 3 நட்சத்திரம், 4-யோகம், 5-கரணம் ஆகிய இந்த ஐந்து அங்கங்களை அநுசரித்து இப்பஞ்சாங்கத்தில் விரதாதி, உற்சவாதி, ஸ்ராத்தாதி, விஷயங்கள் வைஷ்ணவ, சைவ, ஸ்மார்த்த, மத்வ, மதாச்சார பரம்பரை வழக்கம் பிரகாரம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் இது ஆஸ்தீகர்களுக்கும், வைதீகர்களுக்கும், தங்கள் குடும்ப தர்ம சாஸ்திரங்களையும், ஆச்சாரங்களையும் அனுசரித்து வருபவர்களுக்கும், கோயில்களிலுள்ளவர்களுக்கும் மிகவும் உபயோகமானது. இதில் அனேக பொது விஷயங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நாமகள் திருக்கணித பஞ்சரங்கத்தின் ஆசிரியர்களாகிய (1) C. கோவிந்த ராஜன், B.A., (Mathematics), (2) C. S. மணியம் என்னும் C சுப்பிரமணியம், B.A. (Honours) இவர்களால் கணிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டனவாகும். இப் பஞ்சாங்கத்தில் கிரகஸ்புடங்களும், கிரஹணங்களும் தற்காலத்திற்குச் சரியாயும், துல்லியமாயும் இருக்கும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இப் பஞ்சாங்கத்தை உபயோகப்படுத்தி நன்மையை அடையுமாறு கோரப்படுகின்றது.



பஞ்சாங்க ஆசிரியர்
C. G ராஜன் B.A., என்னும்
C. கோவிந்த ராஜன், B.A.,
(Mathematics)

உ

கடவுள் துணை.

# ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி

## நவக்கிரக தெசாகாலங்களில் சரீர ரோகோற்பத்தி நிர்ணயம்

சூரியன் சிரசு, சந்திரன் முகம், அங்காரகன் காது, புதன் தொப்புள், குரு நாபிக்கமலம், சுக்கிரன் நேத்திரங்கள், சனி பாதம், ராகு, கேதுக்கள் வயிறு இந்தப் பிரகாரமாக கிரக உற்பத்தி ஸ்தானங்களாகும்.

மேஷம் சிரசு, ரிஷபம் முகம், மிதுனம் கழுத்து, கடகம் மார்பு, சிங்கம் மூக்கு, கன்னி ஆசனஸ்தானம், துலாம் பக்கபாரிசங்கள், விருச்சிகம் நேத்திரம், தனுசு பாதம், மகரம் முழங்கால், கும்பம் வயிறு, மீனம் குதிக்கால் என்பன.

ரண ரோகங்கள்:—ஆறுக்குடையவன் குரூர கிரகங்களுடன் சேர்ந்து லக்கினத்திலாகிலும், 8-மிடத்திலாகிலும் இருந்தால் சரீரத்தில் ரணபாதை உண்டாகும். 6-க்குடையவன் 10-மிடத்தில் இருந்தாலும் அல்லது 10-ம் இடத்துக் குடையவனுலாவது, அல்லது சுப கிரகங்களினுலேயாவது பார்க்கப்பட்டால் ரண பாதைகள் நிவர்த்தியாகும்.

6-க்குடையவன் பாபக்கிரகங்களுடன் கூடினுலும், அல்லது லக்னுதிபதியுடனும், அஷ்டமாதிபதியுடனும் கூடியிருக்க சரீரத்தில் ரணபாதையும், பாப செய்கையும் சம்பவிக்கும் என்பது.

க்ஷய ரோகம்:—7, 8-மிடங்களில் சனி, குரு இருவரும் கூடி இருந்தால் ரத்தகாச ரோகம் உண்டாகும். இவர்களுடன் சூரியன் கூடி இருந்தால் சந்தேகமில்லாமல் க்ஷயரோகம் சம்பவிக்கும்.

புதன் செவ்வாயுடன் கூடி, 6-மிடத்தில் இருக்க, சுக்கிரனுலும், சந்திரனுலும் பார்வை பெற்று, பாப அம்சைகளில் இருந்தால் க்ஷய ரோகம் உண்டாகும். ராகு 6-மிடத்தில் இருந்து மாந்திகம் கேந்திரத்தில் இருந்து, லக்னுதிபதி 12-மிடத்தில் இருந்தால் 26-வது வயதில் க்ஷயரோகம் உண்டாகும்.

தேய்பிறைச் சந்திரன் பாபருடன் கூடி ஜல ராசியிலாவது அல்லது 6, 8-மிடங்களிலாவது, லக்னத்திலாவது இருந்தால் க்ஷய ரோகம் உண்டாகும்.

மூத்திர துவாரத்தில் கல்லடைப்பு ரோகங்கள் :—புதன் 3-மிடத்திற்கு அதிபதியாகி லக்கினத்தில் செவ்வாயோடே கூடியாவது, பார்வை பெற்ருவது இருந்தால் மூத்திர துவாரம் இரண்டாக ஏற்படும் இவர்களுடன் சனி கூடிஞல் மூத்திர துவாரத்தில் கல்லடைப்பு நேரும்.

மூத்திர கிரிச்ச ரோகம் :—6, 7-க்குடைய அதிபதிகளில் ஒருவர் 12-மிடத்தானுடன் கூடி சனியால் பார்வை பெற்று இருந்தால் மூத்திர கிருச்ச ரோகம் சம்பவிக்கும். 4, 7-மிடங்களுக்கு அதிபர்கள் 6, 8, 12-மிடக்களில் சத்ருக் கிரகங்களோடேயாவது, குரூர கிரகங்களோடேயாவது சேர்ந்து இருந்தால் மேல் சொன்ன வியாதி சம்பவிக்கும்.

6—மிடம் ஜலராசியாக வந்து அதில் சந்திரன் இருக்க 6-க்குடையவன் ஜல ராசிகளில் இருக்க, புதனல் பார்க்கப்பட்டால் அந்த ஜாதகனுக்கு மூத்திர கிருச்ச ரோகம் சம்பவிக்கும்.

அண்ட ரோகம் :—6-மிடத்தில் செவ்வாய், சனி, ராகு இவர்களிருந்தாலும் அல்லது குரு, ராகு, லக்கினத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு அண்ட ரோகமுண்டாகும். செவவாயும், ராகுவுங்கூடி லக்கினத்திலிருந்தால் குப்ஜ ரோகம் என்பதாம். சூரியன், செவ்வாய், ராகு இம் மூவருங் கூடி 3-மிடத்திலிருந்தால் அண்டரோகம் உண்டாகும்.

பிருஹத்பீஜம் குஸுமரோகம்:—6-மிடத்தில் செவ்வாயும், ராகுவும் இருந்தால் பிருகத் பீஜமுண்டாகும். மேல் சொன்ன கிரகங்கள் 7-மிடத்திலிருந்தால் இவன் சமுசாரத்திற்கு குஸும ரோகம் உண்டாகும்.

ஆசனத்தில் ரோகம்:—இலக்னுதிபதியுடன் செவ்வாயும், புதனும் சேர்ந்து கன்னியிலாவது, மிதுனத்திலாவது இருந்தாலும் அல்லது புதனிட பார்வையை பெற்ருலும் மூலவியாதி உண்டாகும்.

அபான ரோகம் பவித்திர ரோகம்:—இலக்கினுதிபதி செவ்வாய், புதன் இவர்கள் ஒன்ருய் கூடி சுப ஸ்தானங்களிலிருந்தாலும் 6-மிடத்திலிருந்தாலும் அபான ரோகமாவது, பவித்திர ரோகமாவது சம்பவிக்கும்.

பிடகாதி ரோகம்:—இலக்கினத்திற்கு 8-மிடத்தில் சனியும்' 8, 12-மிடங்களில் செவ்வாயுமிருந்தால் 15-வது வயதிலேயாவது அல்லது 30-வது வயதிலேயாவது பிடகாதி ரோகமுமுண்டாகும்.

கிரந்தி மேக ரோகம்:—8-மிடத்தில் ராகுயிருக்க அந்த அமிசாநாதன் 8-மிடத்திற்குக் திரிகோணங்களிலிருக்க 18-வது வயதிலேயாகிலும் அல்லது 22-வது வயது காலங்களில் கிரந்தி ரோகம் சம்பவிக்கும்.

வெள்ளை குஷ்ட ரோகம்:—சந்திரனாவது, புதனாவது லக்கினாதிபதியாகி ராகு, கேதுக்களுடன் கூடி, சனி பார்வையைப் பெற்றிருந்தால் வெள்ளை குஷ்ட ரோகம் வரும்

சந்திரன், புதன், லக்கினாதிபதி இவர்கள் ராகு, சூரியனுடன் கூடி எந்த ராசியிலிருக்கிறார்களோ அந்த ராசி சரீரத்தில் எந்த அங்கமாகுமோ அந்த அங்கத்தில் வெள்ளை குஷ்டம் வரும். சுபர் பார்வை யுண்டானால் வியாதி நிவர்த்தியாகு மென்பது.

லக்னாதிபதி, சஷ்டமாதிபதி, அட்டமாதிபதி இவர்கள் ஒன்றாய்க் கூடி 6-மிடத்திலிருந்தால் குஷ்டரோகம் சம்பவிக்கும். இவ்விதமாக பிதுர்வர்க்கத்தாருக்கும் அந்தந்த காரகர்களாலும், பாவாதிபதிகளாலும், சுபா சுபங்களை அனுசரித்து யூகித்துச் சொல்லவும்.

லக்னாதிபதி, சஷ்டமாதிபதிகள் செவ்வாயுடன் கூடினால் வெள்ளை குஷ்டம் வரும். சனியுடன் கூடினால் நீல குஷ்டமும், சூரியனுடன் கூடினால் ரத்த குஷ்டமுமுண்டாகும்.

சந்திரன், சனி இவர்கள் கூடி 6-மிடத்திலிருந்தால் 55-வது வயதில் ரத்த குஷ்டம் வரும்.

குஷ்டத்தில் 3-வகையாவது:—லக்னாதிபதியைச் சந்திரன், செவ்வாய், புதன், ராகு, கேது இவர்கள் கூடியிருந்தால் இவர்கள் தெசையில் வெள்ளை குஷ்டமும் வரும் சூரியனால் ரத்த குஷ்டமும், சனியால் நீல குஷ்டமும் உண்டாகும்.

நேத்திர ரோகம்:—லக்னாதிபதி 2-மிடத்ததிபதி, 7-ம் இடத்ததிபதி சந்திரனுடன் கூடி, துர்ஸ்தானங்களிலிருந்தால் நேத்திர ரோக முண்டாகும்.

லக்னாதிபதியுடன் தனாதிபதி கூடினால் வலது கண்ணுக்கு ரோக முண்டாகும்.

லக்கினம், 2-மிடத்துக் கதிபர்கள் சனியுடன் கூடினுல் பிரவிக் குருடனுவன். சத்துரு வீட்டில் சனி இருந்தால் இடக்கண்ணும், செவ்வாயிருந்தால் வலது நேத்திரமும் குருடாகும்.

ரத்தகாச ரோகம்:—6, 7-க்கு அதிபர்களைக் கேது கூடினுலும், பார்த்தாலும் ரத்த காச ரோகமுண்டாகும்.

சுவாச காச ரோகம்:—6-மிடத்தில் சனி குளிகனுடன் கூடியிருக்க சூரியன், செவ்வாய், ராகு இவர்கள் பார்க்க, சுபர்களிட பார்வையில்லாதிருக்க, சுவாசகாச ரோகங்களும், க்ஷயபாதையும் உண்டாகும்.

அம்மை போடுவதும் குஷ்டமும்:—6-மிடத்திற்குடையவன் 7-ல் இருக்க செவ்வாய் பார்க்க அம்மை வகையராக்களினுல் பாதைப்பட நேரும். ராகுவினுல் அங்க விகாரமும், கேதுவினுல் குஷ்டமும் சந்தேகமில்லாமல் உண்டாகும்.

மசூரிகா சர்ப்ப விஷாதிகள் ரோக பீடிதம்:—லக்னுதிபதியும் 6-மிடத்தானும் கூடியிருக்க, சனி, ராகு, கேது இவர்களால் பார்வை பெற மசூரிகாதி சர்ப்ப விஷாதி ரோகங்கள் எப்போதும் ஜாதகனைப் பீடிக்கும்.

வயிற்று வலி அல்லது சூலை ரோகம்:—5-மிடத்திலும் 7-மிடத்திலும், குரூர கிரகங்களிருந்து 5, 7-க்கு அதிபதிகள் சத்துரு ராசியிலாவது, குரூர கிரகங்களிட ராசிகளிலாவது யிருந்தால் ஹிருதயத்தில் வியாதியும், வயிற்றில் சூலை வியாதியும் உண்டாகும்.

பைத்தியம் பிடிக்கிற வியாதி:—சூரியன் 6-மிடத்திலிருக்க அந்த பாவத்திற்குப் பாபசம்மந்தங்களிருக்க சூரியன் பாபிகள் பார்வை பெற்றிருக்க பைத்திய ரோக முண்டாகும்.

1, 8-மிடங்களில் சூரியன் லக்னுதிபதியுடன் கூடியிருக்க இவர்களைச் சுபர்கள் பாராதிருக்க பித்த ரோகமுண்டாகும்.

லக்கினுதிபதி சஷ்டமாதிபதிகள் குரூர சட்வர்க்கத்திலிருந்தால் இவர்கள் தெசா புக்தியில் பைத்தியம் பிடிக்கும் என்பது

முக ரோகம்:—லக்னுதிபதி குசனுடன் கூடி புதன் வீட்டிலிருந்தாலும் அல்லது புதனுல் பார்க்க பெற்றுலும் முகரோகம் சம்பவிக்கும்.

பீனச ரோகம்:—6-மிடத்தில் சந்திரனும், 8-மிடத்தில் சனியும், லக்கினத்தில் பாப கிரகங்களுமிருந்து பாபாமிசத்தில் ஜனித்தால் பீனச ரோகம் வரும்.

அஜீரணம் குன்மம்:—6-மிடத்தான் பலஹீனனானாலும் அல்லது லக்கினத்தில் செவ்வாயிருந்தாலும் இப்படியான ஜாதகனுக்கு அக்னி மந்த ரோகமாவது அல்லது குன்ம ரோகமாவது சம்பவிக்கும்.

அஜீரணம் ஜலதோஷம்:—லக்னாதிபதியும், 6-மிடத்தானும் கூடி சந்திரனிட சட்வர்க்கத்தில் இருந்தால் அந்த புக்திகளில் அஜீர்ணமாவது, ஜல தோஷமாவது சம்பவிக்கும்.

வாத ரோகம்:—லக்னாதிபதி 8-மிடத்திலும், சனி சத்துரு வீட்டிலும் இருந்தால் 59-வது வயதில் வாத ரோகம் சம்பவிக்கும்.

லக்னாதிபதி சனியுடன் கூடி லக்கினம் 2, 8-மிடங்களிலிருந்தாலும் சந்திரன் பாப சம்பந்தப்பட்டிருந்தாலும் வாதரோகம் உண்டாகும்.

லக்னாதிபதி 6-மிடத்தானுடன் கூடி புத ஷட்வர்க்கத்திலிருந்தால் அந்த புக்தியில் வாயு ரோக முண்டாகும்.

வாத ரோகம் ஸன்னிபாத ரோகம்:—லக்கினாதிபதி 6-ம் இடத்தானுடன் கூடி சனி சட்வர்க்கத்திலிருந்தால் அந்த புக்தியில் வாத ரோகமுண்டாகும். சன்னிபாத ரோகமும் வரும்.

உஷ்ண ரோகம்:—லக்னாதிபதி தானிருந்த ராசியாதிபதியுடன் கூடி சுக்கிர சட்வர்க்கத்தில் இருந்தால் அந்த புக்தியில் ஸத்ரீ மூலத்தினால் உஷ்ண வியாதி சம்பவிக்கும்.

ஜுர ரோகம்:—லக்னாதிபதியும், 6-மிடத்தானும் கூடி செவ்வாய் சட்வர்க்கத்தில் இருந்தால் அவர்களிட புக்தியில் ஜுர ரோக முண்டாகும்.

லக்னாதிபதியும், சட்டமாதிபதியும் கூடி சூரிய சட்வர்க்கத்திலிருந்தால் இவர்கள் புக்தி காலங்களில் ராகு அந்திரத்தில் ஜுரம் காணும்.

செவ்வாய் சட்டமத்திலும், சட்டமாதிபதி அட்டமத்திலும் இருந்தால் 6-வயது அல்லது 12-வது வயதிலே ஜுர கெண்டம் வரும்.

சதா ரோகியாகிறது:—சட்டமத்தில் பாபி யிருந்து, சட்டமாதிபதியுடன் பாபிகள் சேர்ந்து அல்லது ராகுவுடன் சனி கூடியிருந்தால் ஜாதகன் சதாகாலமும் ரோகபாதை அனுபவிப்பான்.

சனி செவ்வாயுங்கூடி 6-மிடத்திலிருக்க சூரியனாவது, ராகுவாவது பார்க்க லக்னாதிபதி பலஹீனமாக யிருக்க சதா ரோகி.

குன்ம ரோகம்:—விரைய ஸ்தானாதிபதி சட்டமத்திலும், சட்டமாதிபதி விரையத்திலும், இருந்தால் 3-வது அல்லது 5-வது வயதுகளில் கட்டிரோகம் காணும்

வாத ரோகம், ரத்த பயித்யம், சிலேத்தும வாதம், அதிஸாரம், குன்மம்:—6-மிடத்தில் சந்திரன் இருந்து குரூர கிரகங்களால் பார்வை பெற்று குரூர நவாமிசத்தில் இருந்தால் வாத நோய் அனுபவிப்பான்.

6-மிடத்தில் செவ்வாயிருந்து பாப கிரகங்கள் பார்வைபெற்று பாபாமிசையை அடைந்திருந்தால் ரத்த பித்த வியாதி வரும்.

6-மிடத்தில் புதனிருந்து பாபிகளால் பார்வை பெற்று பாப நவாமிசையிலிருந்தால் சிலேத்தும வியாதியினால் பீடிக்கச்செய்யும்.

6-மிடத்தில் குரு யிருந்து பாபர்களால் பார்வை படைந்து பாப நவாமிசையி லிருந்தாலும், ரோகபாதைகள் இல்லை என்பது.

6-மிடத்தில் சுக்கிரனிருந்து பாபர்களால் பார்வை பெற்று பாப நவாம்சையிலிருந்தால் மூலரோகம், அதிசாராதிபேதி வியாதிகளால் மரணம் நேரு மென்பது.

6-மிடத்தில் சனியிருந்து பாபிகளால் பார்வைபடைந்து இருக்க கட்டி ரோகங்கள் உண்டாகும்.

6-மிடத்தில் ராகு, கேதுக்களிருந்து பாபர்களினால் பார்வை பெற்று பாப நவாமிசையிலிருந்தால் பேய், பிசாசுகளினால் பீடிக்கப்படும்.

பாண்டு, விஸர்ப்ப சூல ரோகங்கள்:—6-மிடத்தில் சந்திரனும், செவ்வாயுங் கூடியிருந்தால் புத்தி பிரமையுண்டாகும். பாண்டு வியாதியும் சம்பவிக்கும். 8-மிடம் சரராசியாய் அதில் சந்திர, சூரியாள் கூடியிருந்தால் சர்ப்ப ரோகமும், சூலை வியாதியும் சம்பவிக்கும்.

கிரக சம்பந்த ரோகங்கள்:—லக்னத்திற்கும், 6-க்கும் உடையவர்கள் சூரியனால் பார்க்கப்பட்டால் ஜுர கெண்டம் வரும். சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜல கெண்டம், செவ்வாயால் பார்வை பெற்றால் கிரந்தி ரோக முண்டாகும். அஸ்திர சஸ்திரங்களிட பாதை நேரும், விரணங்களும் வரும். புதனால் பார்வை பெற்றால் பித்த ரோகம் உண்டாகும். குருவால் பார்வை பெற்றால் தேகத்திற்கு ஆரோக்யமாகும். சுக்கிரனால் பார்வை படைந்தால் ஸ்திரீகளால் கெண்டம் நேரும். சனியால் பார்வை பெற்றால் சண்டாள

ஜாதிகளாலும், சோரராலும் அபாயம் நேரும். ராகு, கேதுக்கள் பார்வை பெற்றால் ஸர்ப கண்டம் நேரும். 6, 8, 12-மிடங்களிட அதிபதிகள் தெசை காலங்களில் அதிக கஷ்ட பலன்கள் நடக்கும். இவர்கள் புக்திகள் நடக்கிறபோதும் கஷ்டபலமே சம்பவிக்கும், மாரகமும் செய்யும். லக்னாதிபதி 6-மிடத்தானுடனும், மாரகாதிபர்களுடனும் கூடியிருந்தால் அந்த புக்தியில் சந்தேகமில்லாமல் ரோக பாதைகளையும், அதிக கஷ்டங்களையும் அனுபவிக்கச் செய்யுமென்பது.

**வியாதியை நிவர்த்திக்க:**—புருஷனாவது, ஸ்திரீயாவது கர்ம ஜாட்டியத்தினால் பீடிக்கப்பட்டாலும் அல்லது புத்திரர்கள் உற்பத்தியாகி பிரசவித்தவுடனே குழந்தை பருவத்திலேயே மரணமடைகிறதும், அல்லது தாய், தகப்பன், புத்திரர்கள் இவர்கள் எல்லோரும் தீராத வியாதியை அனுபவிக்கிறதுமாயிருந்தால் அப்படிப்பட்ட மனுஷர்களுக்குச் செய்யவேண்டிய கர்ம விபாக சாந்தி கிரமமெப்படி என்றால்.

**சாந்தி:**—சாமானியமாக ஞாயிற்றுக் கிழமையிலும், ஸங்கிராந்தி சுப யோகங்களிலும், வியதீபாத நாம யோகத்திலும், வைதுருதியோகத்திலும் இப்படிக்கொத்த காலங்களில் பிராம்மணர், கிருஹங்கள், கோவில், நதிக்கரை, நதி சமீப க்ஷேத்திரம் இப்படிக்கொத்த இடங்களிலாவது அல்லது சொந்த வீட்டில் பரிசுத்தமான இடத்தில் தெவஸ்தாபனம் செய்து, பகவானைத் தியானித்து, ஔஷத ஸ்நானம் செய்யவேணும். அது எப்படி என்றால் நெல்லிக்காய், பசுவின் கோமயம், எள், பரிசுத்தமான மண், பச்சைக்கர்ப்பூரம், பயற்றம் பருப்பின் மாவு இவைகள் எல்லாவற்றையும் சமபாகமாகச் சேர்த்து ஜலத்தில் கலந்து, இந்த நீரினால் சரீரமெல்லாம் தேய்த்து ஸ்நானம் செய்யவேணும். செய்தபின் தெய்வ பிதுர்க்களுக்கு, தர்ப்பணம் செய்து சூரிய பகவானுக்கு அர்க்யம் கொடுத்து, விதிப்படி சங்கல்பித்து கொண்டு அத்வைதாதி ப்ராசீன சஞ்சித சர்ம நிவர்த்தியின் பொருட்டும், தர்மார்த்த காம்ய மோட்ச பல புருடார்த்த சித்தியின் பொருட்டும், விஷ்ணு பகவானையும், கர்ம விபாக புஸ்தக பூஜையும் செய்யவேணும், அது எப்படி என்றால் அங்கன்னியாச பூர்வமாக சோடச பூஜை செய்து, சங்கல்பித்து, வைசிய தேவ சிரார்த்தம்செய்து அதன்பின் சரீர சுத்திசெய்து, புறசரணாகதி செய்து, கோ, மிதுன தானமும், நெய் பாத்திர தானமும், பிரம்மாவுக்குச் சந்தோஷமாகச் செய்து 16-பிராம்மணர்களுக்கு அன்ன

மளித்து, பின் தாம்பூல, தக்ஷிணைதி சமர்ப்பித்து, அவர்களால் ஆசிர்வாதம் பெற்று பின் ஆசாரிய பூஜை செய்து, சர்வ பிராயச் சித்தங்களேயும் செய்துகொள்ள வேணும். குருபூஜை செய்கிறதற்காக திரிமூர்த்தியை பூஜை செய்து அதற்குப்பின் சூரிய பகவானை அதிகமாகப் பிரார்த்தித்துக் கொள்ளவும். அதன் பிற்பாடு பிராம்மணர்களை ஒவ்வொருவரையும் தனித்தனி 3-பிர தக்ஷணஞ் செய்து, தன் பாபத்தை தானே கூசித்து தெரிந்துக் கொண்டு வெட்கமில்லாமல் அவர்களிடத்தில் தெரிவித்து தகுதி யான பிராயச்சித்தம் செய்யவேண்டு மென்று பிரார்த்திக்க பிராம் மணர்கள் இந்த வித பாபத்தை தெரிவித்தவனிட ஜாதகத்தைப் பார்த்து கிரகங்களுக்கு தகுதியாப் பிராயச்சித்தம் செய்யவேணும். இவ்விதமாக பார்வதிதேவியால் பக்தியாக பூஜித்து, பிரத்திபக்ஷ மான கைலாச பர்வதத்தின் சிகரத்தில் சுகாசீனராயிருக்கிற மஹே சுவரனல் சொல்லப்பட்டது.

சகல பிராணிகளும் சம்சாரத்தில் கர்ம பலமே அனுபவிக்கப் பட்டாலும், மனுஷ ஜன்மத்திற்கு மாத்திரம் அந்த ஜன்மத்தில் செய்த புண்ய பாபங்கள் அந்த ஜன்மத்திலேயே அனுபவிக்க நேரும்.

கர்ம பலானுபவத்தில் கர்மகர்த்துத்வம் மனுஷர்களுக்கே தவிர இதர பிராணிகளுக்கு லோபமில்லை.

பிராப்த ஆகாமிய சஞ்சித கர்மங்களில் சஞ்சித கர்மம் மாத் திரம் பிராயச்சித்தத்தினல் பரிகாரமாகும். இஷ்டானிஷ்ட மிகிரம கர்மத்தில் அநிஷ்ட கர்மத்திற்கு கேவலம் நிவர்த்தி கர்மத்தில் அநிஷ்ட்டாம்சத்திற்கு நிவர்த்தி வேண்டியது.

1. இந்த ஜன்மத்தில் க்ஷயரோகத்தை அனுபவிப்பவர்கள் பூர்வ ஜன்மத்தில் பிரம்மஹத்தி பாபம் செய்தவராகும்.

2. இந்த ஜன்மத்தில் புத்திரர்கள் இல்லாதவர்கள் குரு ஹத்தி, கோத்திர ஹத்தி செய்தவராகும்.

3. தேவபூஜை செய்யாதவன், பாண்டு ரோகி யாவ னென்பது.

4. வேதங்களை நிந்திக்கப்பட்டவன், பெண்களையே பெறுவன்.

5. கோ ஹத்தி செய்தவன், தரித்திரமும், சதா ரோகமும் அநுபவிப்பான்.

6. மணிகள், வாத்யங்கள் இவைகளை அபகரித்தவனுக்கு குட்ட ரோகம் வரும்.

7. சகோதரியைக் கெட்ட எண்ணத்துடன் நினைத்தவன் கால் நொண்டியாவன்.

8. மித்திரத் துரோகம், பசு ஹத்தி, சிசு ஹத்தி இவைகளை செய்தவனுக்குச் சிசுக்கள் நசிக்கும், சரீரத்தில் வியாதிகள் சம்பவிக்கும்.

9. கர்ப்பத்தைக் கரைக்கிறவர்களும், புஸ்தகங்களை அபகரித்தவர்களும் ஜன்ம குருடராவார்கள்.

10. வஸ்திரத்தை அபகரித்தல், பூமியை அபகரித்தல், பிறரை நிந்தித்தல் பிறருக்குப் பீடையை விளைவித்தல் இவைகளைச் செய்பவர்களுக்கு விசேஷ தரித்திரம் சம்பவிக்கும்.

11. இதர ஸ்த்ரீயை அபகரிக்கப்பட்டவர்களுக்குத் தீர்க்க ரோகமுண்டாகும்.

12. எருமைக்கிடாவை அபகரித்தவன் கப ரோகியாவான்.

13. எருதுகளுக்கு விரையை எடுக்கிறவன், கால் பிடிக்கிறவன் மூத்திர கிருச்சா ரோகியாவான்.

14. மாதா பிதாக்களை ஹத்தி செய்ய நினைத்தவன் அதிக குஷ்ட ரோகியாவன்.

15. கோ ஹத்தி செய்தவன் வெள்ளை குஷ்டம் அடைவான்.

16. பலாத்காரமாக ஒரு கன்னியைக் கெடுத்தால் ஏழ்மை தனமும், சிசுக்களுக்கு ரோகமும் உண்டாகும்.

17. புஷ்பம், சந்தனம் இவைகளை அபகரித்தால் சரீரத்தில் நாற்றம் உண்டாகும்.

18. நெய் திருடினவனைப் பூச்சி வியாதி பீடிக்கும்.

19. செடிகளைத் திருடினவனுக்கு புழு புழுத்துவிடும்.

20. குளம், கிணர் இவைகளிலிருந்து நீரை அபகரித்தவனுக்குப் பல் நோய் காணும்.

21. தேவ பூஜா பாத்திரங்களை அபகரித்தவனுக்குக்கழுத்து பாகத்தில் ரோகம் உண்டாகும்.

22. வாத்தியங்களை அபகரித்தவனுக்கு நடு காட்டில் அக்கினி பயம் நேரும்.

23. எண்ணெயைத் திருடினவனுக்கு நேத்திர ரோகமும், மூக்கில் பூச்சி பிடித்து பாதைப்படுதலுமாம்.

24. வெல்லம் திருடினவனுக்கு ஜுர பீடை யுண்டாம்.

25. வெள்ளி, பொன் திருடினுல் புத்திர ஹானி யுண்டாம்.

26. தாஸ தாஸிகளை அபகரித்தால் காதுக்கு நோயுண்டாம்.

27. பால், மோர் இவைகளைத் திருடினுல் வயிற்று நோய் உண்டாகும்.

28. வழியில் பிரயாணம் செய்கிறவர்களை மடக்கி வஸ்திர முதலியதை அபகரித்தவன் அனேகவித ரோகபாதைகளை அனுபவிப்பான்.

29. பக்ஷிகளை அபகரித்தவனுக்குக் காச ரோகங்கள் உண்டாகும்.

30. மது மாமிசாதிகளை அபகரித்தவர்களுக்கும் அல்லது மத்திய போஜனம் செய்பவர்களுக்கும் சர்மம் வியாதி உண்டாகும்.

31. அன்னம், குடி தண்ணீர் இவைகளை அபகரித்தவனுக்கு பல் நோய் காணும்.

32. பிராம்மணரிட சொத்தை அபகரித்தால் அதாவது அவர்களிட வீடு, தனம், தானிய சம்பத்து இவைகளை அபகரித்தால் அதிக ரோகங்களுண்டாகும்.

இந்தப்படிக்கு அபரிமிதமான பாப விசேஷங்களினுல் சில விதவிதமான ரோகங்கள் உண்டாகி, எந்த ஔஷதங்களினுலும் குணமாகாமல் பிடித்துக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட ரோகங்கள் நாசமாகும் பொருட்டு பூர்வோக்த மகிரமாக சொல்லப்படுகிற சாஸ்திராதிகார பிராம்மணாகளைப் பிரார்த்தித்து வந்தன வினயமாக கேட்குமளவில் மஹா வேதபாடிகளான பிராம்மணர்கள் சொல்லியபடி பிராயச்சித்தாதிகளைச் செய்கிற பக்ஷத்தில் பாபங்கள் பரிகாரமாகி ரோக நிவர்த்தியாகும்.

## சூரிய பிரீதி சாந்தி

சூரியன் ஜன்மம் 8, 12 இவை முதலான துர்ஸ்தானங்களிலிருந்தால் தன் தெசாபுக்தி காலங்களில் குரூரபலத்தைக் கொடுப்பர். ஆனுல் ஆயுர்விருத்தியின் பொருட்டு சூரியனுக்குப் பிரீதியாக ஜன்ம நக்ஷத்திரனுளிலாவது, நாம நக்ஷத்திர நாளிலாகிலும், ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 10-வது நக்ஷத்திரத்திலாவது ஞாயிறு வாரத்திலாகிலும் சகல தானங்கள் செய்ய உத்தமமான

தால் இவைகளில் ஒரு நாளில் தானங்களுக்கெல்லாம் அதிக விசேஷமான சுவர்ன, பத்ம தானம், ஆயுர் விருத்தியையும், புத்திர சம்பத்தையும், ஆரோக்யத்தையும் உத்தேசித்து செய்ய வேண்டியது. இவைகளை தேவஸ்தானங்களிலாவது அல்லது சொந்த வீட்டிலாவது சுசியான இடமேற்படுத்தி 4-மரக்கால் நெல், 2-மரக்கால் கோதுமை கீழே ராஸியாகக் கொட்டி அதன் பேரில் தாமிர பாத்திரத்தினால் கலசம்வைத்து அதற்குள் பொன்னால் சூரிய பிரதிமை ஒன்றைச் செய்து 8-தினுசு பத்திரங்கள், சிகப்பு வஸ்த்திரம் இவைகளை சமர்ப்பித்து யதா விதிப்படி சாந்தி கிரமத்தில் சொல்லியபடி சிகப்பு சந்தினக்ஷதை புஷ்பங்கள் சமர்பித்து பாயஸம் நைவேத்தியம் செய்து, சூர்யஹ திவாகரஹ-தேஜோமூர்த்திஹி, ஜெகத்பதிஹி, சங்கரஹ, வரதஹ, சாந்தஹ, ஹம்ஸஹ என்கிற அஷ்டவித நாமங்களினால் பூஜீத்து அர்க்கியம் கொடுத்து விதிப்படி மந்திரங்களினால் ஹோமம் செய்து பிராம்மண பூஜை செய்து கலச ஜலத்தினால் எஜமானனுக்குப் புரோக்ஷித்து, கலச வஸ்த்திர பிரதிமையை தானம் செய்து துஷ்டஸ்தானத்திலிருக்கிற சூரியனால் உண்டாகிய அரிஷ்டதோஷ நிவாரணத்திற்காக ராஜ உபத்திரவங்கள், பொருள் விரையங்கள், சகலவித கஷ்டங்களும் தொலைந்து இகத்தில் சகலவித போகங்களுமுண்டாகி சர்வாபீஷ்ட பல சித்தியார்த்தமாகும்படி பக்தியுடன் சூரிய பகவானைப் பிரார்த்தித்து, சூரிய பிரீதிகரமாகச் சிகப்பு பசுவையும், தக்ஷிணையுடன் தானம் செய்யவேணும். இந்தப்படி சுவான பத்மதானம் செய்தால் சூரியனுக்குப் பிரீதியாகும.

## சூரிய தெசை சூரிய புக்திக்குத் தானம்

சூரிய தெசையில் சூரிய புக்திக்குப் பிரீதியாக சிகப்பு பசு பால் கரவல் உள்ளதாக, கன்றுடனே, செதுக்கின கொம்புகளுடன், கால்களுக்கும், வால் இவைகளுக்கும் வெள்ளி, பொன்னாபரணங்களினால் சிங்காரித்து பால் கறக்கிறதற்காக வெண்கல பாத்திரம், சிகப்பு வஸ்திரங்களுடன் நெய்கும்ப சகிதமாக நைவேத்தியாதியுடன் பூஜித்து பிராம்மணரை காவோபகேதி என்கிற மந்திரத்தினால் அர்ச்சித்து சுப வஸ்த்திர ஆபரணங்களுடனே பிராம்மணனுக்கு பிரத்தியக்ஷ கோதானம் செய்யவேணும். அப்படிச் செய்தால் பீடைகள் நிவாரணங்களாகும். சிகப்பு பசுவை தானம் கொடுப்பதினால் சிரோ ரோக முதலான சகல தோஷங்களும் பரிகாரமாகும். இந்த பசு தானத்திற்குத் தகுந்தாப்போல் தக்ஷிணை சமர்ப்பித்தால் ஆரோக்யத்துடன் சகல பாக்யமும் அனுபவிப்பதுமல்லாமல் ஆயுர் விர்த்தியும் உண்டா

கும். இந்தப்படி சூரிய பிரீதிகரமாக சிகப்பு பசு தான விதி சொல்லப்பட்டிருக்கிறது.

## சூரிய தெசையில் சந்திர புக்திக்குக் கோதான விதி

சந்திர புத்தியில் சந்திரனுக்குப் பிரீதிகரமாக வெள்ளை கோதானம் செய்கிறது எப்படி என்றால் இந்த தானம் கொடுக்க ஆசையுள்ள மனிதன் சூரிய, சந்திராள் கிரகண புண்ணிய காலங் களிலும் அல்லது பன்னிரண்டாமிடம், 8-மிடம் ஜன்மம் இந்த ராசிகளில் சந்திரன் சஞ்சரிக்கும் காலங்களிலும், தேவாலயாதி புண்ணியஸ்தலங்களில் ஓரிடத்தில் பசுவின் சாணத்தினால் தரை யை மெழுகி சுத்தி செய்து கோலமிட்டு பூமியில் நல்ல அவயவங் களுள்ள பரிசிலமுள்ளதும், பால்காவலுள்ளதும், இளங்கன்றுள் ளதும், வெள்ளை நிறமுள்ளதும், எடுப்பான முகமுள்ளதுமாகிய பசுவிற்கு பொன்னால் கொம்புகளுக்கு ஆபரணம் பூட்டியதும், வாலில் கருத்த மயிர் உள்ளதுமான தாமரைப்பூ வர்ணமான பிரஷ்டபாகமுள்ள வெள்ளைப் பசுவை வஸ்திராலங்கார சகித மாக தானம் கொடுக்கும் பொருட்டு சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

இந்தப் பிரகாரமாக இச்சென்மத்திலும், ஜன்மாந்திரத்திலும் தான்ஞான அஞ்ஞானங்களினால் செய்திருக்கிற மகா பாதகாதி சகல பாபமும் க்ஷீணமாகி சர்வ மங்களமும் உண்டாகும் பொருட்டும், வாதபித்த கபங்களினால் நேர்ந்த அனேக ரோகங் களும் நிவர்த்தியாகி பூர்ணாயுளை அடையும் பொருட்டு சந்திரகிரக பிரீதியாக வெள்ளை கோதானம் செய்ய பசுவிற்கு பூசை செய்ய வேண்டியது.

கன்றுடன் கூடின வெள்ளைப் பசுவை ஆவாகனம் செய்து அர்க்கிய பாத்தியாதி ஸ்நானம் செய்வித்து வஸ்திராலங்கார ஆப ரணங்களால் அலங்கரித்து சந்தன அட்சதை புஷ்பங்களால் அங்க பூஜை செய்து, பசுவிற்கும், கன்றுக்கும் பாதங்கள், வால் கள் கொம்புகள் இவை முதலான சர்வாங்கங்களுக்கும் அலங்கா ரம் செய்து தூபதீப நைவேத்திய தாம்பூலம் சமர்ப்பித்து நீராஞ் சனம் செய்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து கொண்டு மந்திர பூர்வமாக பூசை செய்து, சந்திரன் ரூபமுள்ள பிராமணனுக்கு வஸ்திரம், மோதிரம், காதிற்கு கடுக்கன் இவைகளால் அலங் கரித்து பூஜை செய்து பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு 3-விரா கன் பொன்னுடன் தக்ஷிணை தாம்பூலத்துடன் சந்திரகிரக பிரீதி யாகச் சத்பிராம்மணனுக்கு கோதானம் செய்யவேண்டும்.

அப்படிச் செய்வதினுல் முன்சொன்னப் பிரகாரமாக இஷ்ட காம்மியார்த்த சித்தியை அடைகிறதுடன் கிரஹசார பீடைகளும் நிவர்த்தியாகும்.

## செவ்வாய் புக்திக்கு செவ்வாய் பிரீதி ரிஷபதானம்

எல்லா தானங்களிலும் ரிஷப தானம் உத்தமம். அங்காரக பிரீதிக்காக தானங்கள் அனேகங்களில் ரிஷப தானம் அதிக உத்தமமானது. செவ்வாய் 12-மிடம், 8-மிடம், 7-மிடம், 9-மிடம் அல்லது துஷ்ட ஸ்தானங்களில் இருந்தால் குரூரமான ரண பாதைகளை அனுபவிக்கச் செய்யும், மான ஹானி, திரவியஹானி ஸ்தான நாசம், ராஜ பயம், தரித்திர துக்கங்களும் அனுபவிக்கச் செய்யும். இவைகள் எல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டும் ஆயுர் ஆரோக்ய ஐஸ்வரியாதிகள் விருத்தியாகும்படிக்கும் இந்த தானத்தை கொடுக்க உத்தமம் என்பது.

## தானம் செய்யும் நாள்

ஜன்ம நக்ஷத்திர நாளிலும், கிரக யோகங்களிலும், அல்லது ரிக்த திதிகளிலும், கிருஷ்ண பக்ஷத்தில், சதுர்த்தசி திதியிலும், சங்கராந்தி தினங்களிலும், தரிசன தினங்களிலும், செவ்வாய்கிழமையிலும், தன் வீட்டிலாவது அல்லது தேவாலயத்திலாவது செய்யவும்.

## சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்கு சாந்தி

கோமயத்தினுல் பூமியை சுத்தி செய்து கோலமிட்டு சிவப்பு நிறமுள்ளதாயும், திடமானதாயும், 2-அல்லது 3-வயதுள்ளதாயும் காது மற்றைய அவயவங்களில் காய வடுவு இல்லாததாயும், ரிஷபத்தை கொண்டுவந்து ஸ்தானம் செய்வித்து சுவர்ணத்தினுல் கொம்புகளுக்கு அலங்காரம் செய்து வால் முதலான அவயவங்களை சிங்காரித்து, சிவனை பிரார்த்தித்துக் கொண்டு துவரை மூட்டையுடன் விதிப்படி ஆவாகனம் செய்து மந்திரபூர்வமாக சிவப்பு நிறமான சந்தனம் அட்சதை புஷ்பம் இவைகளை சமர்ப்பித்து அங்காரக பகவானை தியானித்து தூபதீப நைவேத்திய அர்க்யங் கொடுத்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து அநேகமாக பிரார்த்தித்து வேத சாஸ்திர அப்பியாசாதிகளில் பயிற்சியுள்ள பிராம்மணருக்கு சிவப்பு நிறமான வஸ்திர, புஷ்ப, பூஷணுலங்காரங்கள் செய்து, சுவர்ணதக்ஷணை சகிதமாக சிகப்பு நிற விருஷபத்தை விதிப்பிரகாரமாக தானம் கொடுக்கும் பக்ஷத்தில் சகல தோஷமும் துலைந்து புத்திர, பௌத்திர சகிதமாக சுகம் அனுபவிப்பார்

கள். இந்தப் பிரகாரம் செவ்வாய் பிரீதிக்காக ரிஷபதான விதியைச் சொல்லி இருக்கிறது.

## சூரிய திசையில் இராகு புக்திக்கு சாந்தி

அகால மரணத்தை நிவர்த்திக்கும் பொருட்டும், அசாத்திய மான க்ஷய ரோகத்தையும், அதிக ஜுரம், மகா வாதம், பித்த குன்ம ரோகங்கள் நிவாரணமாகும்படிக்கும், சத்துரு பாதை, ராஜ பயம், சோர பாதை, மஹா மாரி, அம்மை, வைசூரி, பில்லி, ஏவல் சூனிய முதலான க்ஷுத்திர தேவதைகளிட பாதைகளேயும், மஹா பயத்தையும் நிவர்த்திக்கும் பொருட்டு எருமை தானம் செய்வது உத்தமம்.

குரூர கிரகங்கள் 12, 8, ஜன்மம் இந்த ஸ்தானங்களிலிருந்து கொடுக்கும் அரிஷ்ட பயங்களேயும் நிவர்த்திக்க சாக்ஷாத்கரமான எமனுக்கு பிரீதிகரமாக தாபத்திரய நிவாரணத்திற்காக சங்கிராந்தி காலம், அயன விஷுவத் புண்ய காலங்களில் ஜன்ம நக்ஷத்திரத்திலும் அசாத்யமாக ரோகம் சம்பவித்திருக்கிறபோதும், துஷ்ட சுவப்பன காலங்களிலும், பூமியை சுத்தி செய்து கருப்பு எருமையை கன்றுடனே கொண்டு வந்து உடம்பெல்லாம் எண்ணெயிட்டு, சிகப்பு வஸ்திரம் உடுத்தி தெற்கு திசையை நோக்கி நிறுத்தி, தர்ப்பாஸனத்தின்பேரில் செக்கிலிருந்து புதிதாக எடுக்கிற எள்ளு பிண்ணுக்கு கொண்டுவந்து கும்பலாகக் கொட்டி எருமை வாலுக்கு மணி கட்டி, கொம்புகளுக்கு குச்சிட்டு. வெள்ளி ஆபரணங்களினல் கொம்பிற்கும், கழுத்திற்கும் அலங்கரித்து பொன் பூஷணுதி அலங்கிருதமாக விதிப்படி மந்திரங்களினல் மிருத்யு தேவதையை ஆவாகனம் செய்து பூஜித்து, சிகப்பு சந்தனம், சிகப்பு அட்சதை, சிகப்பு புஷ்பங்கள் முதலானவைகளால் மஹா பூஜை செய்து, கிருஸாரன்ன நைவேத்யம் சமர்ப்பித்து அந்தப்படியே ஆதிவ்தியாதி மஹாமிருத்யு விதியும், மகாபயத்தை போக்கடித்து சுகாரோக்கியத்தை கொடுக்கிறதற்காக மிருத்யு தேவதையை பிரார்த்தித்து சங்கல்பித்துக் கொண்டு குடும்பியுமாய், நல்ல குலத்தில் பிறந்தவனுமாக வேதாப்யாசியாக இருக்கிற பிராம்மணனுக்கு நீலநிறமான சந்தன, அட்சதை, புஷ்பங்களாலும், நீல வஸ்திர பூஷணுதிகளாலும் பூஜித்து எறுமைதானம் கொடுக்கும் பொருட்டு தர்ப்பை, புஷ்ப அட்சதை சகிதமாக ஸாகதானம் கொடுத்து இதன்கீழ் சொல்கிற பிரகாரம் மந்திரத்தை உச்சரித்து இந்திராதி லோகங்களே பாலனம் செய்யும் எமதர்ம ராஜனுக்கு வாகனமான எருமையை சகல இஷ்ட காம மோக்ஷபல புருஷார்த்தங்களே அனுபவிக்கும் பொருட்டு

100 விராகன் அல்லது அதில் பாதி, யல்லது அதில் பாதியாகிலும் சக்திக்கு சகுந்தபடி தக்ஷிணை கொடுத்து பிராம்மணனுக்கு வஸ்தி ரலங்கிருதம் செய்து பூஜித்து மந்திரபூர்வமாக தானம் கொடுத்து அனுப்பி, அதை மறுபடியும் பாராமலே யதாசக்தியாக மற்ற பிராம்மணருக்கு கோதான, பூதான, வஸ்திரதான, காஞ்சன தானங்களை கொடுத்து விதிப்படி பரிசுத்தனுக வேணும். அப்படி மஹிஷீதானம் செய்தால் மஹா அபமிருத்யு தோஷம் பரிகாரமாகும். அதுவுமல்லாமல் விஷ சம்பந்தமான வியாதி பயங்களெல்லாம் நாசமாகும். வேதோக்த பிரகாரப்படி ஆயுராரோக்யமுள்ள ஸ்ரீமந்தர்களாகவும், திடகாத்திரர்களாகவும், திடசித்தமுடையவர்களாகவும், தீரபராக்கிரமர்களாகவுமான புத்ர, பௌத்ர ஸஹிதமாக போக பாக்கியங்களை பாரம்பரியமாக அநுபவிக்க நேருமென்பது.

தேஹாந்தியத்தில் திவ்ய விமானமேறி சூரிய ஸான்னித்தியத்தை யடைந்து திவ்விய மால்யாம்பரதராளான ஸ்த்ரீகளுடன் பிரகாசித்து பிரம்ம லோகத்தை அடைகிறனுவன். இந்தப் பிரகாரமாக சாஸ்திர கிரந்தத்தில் ராகு பிரீதிகரமாக எருமை தான விதியை சொல்லப்பட்டிருக்கிறது.

## சூரிய தெசையில் குரு புக்திக்கு சாந்தி

குருவுக்கு பிரீதிகரமாக சுவர்ண தானம் செய்ய வேண்டியது. குரு பலயீனனுகயிருந்தால் ரோக பயமும், அதிக துக்கமும் சம்பவிக்கும். குரு ஜன்ம ராசியிலிருந்தால் மரணத்திற்கு சமான ரோகபாதை யுண்டாம். மூன்றுமிடத்திலிருந்தால் அதிக பயமும், மான ஹானியும் நேரும். நாலாமிடத்திலிருந்தால் பந்து பீடை, ஸ்வய கோத்திர வர்க்கத்தாருடன் கலகம் விளையும் அஷ்டமத்தில் குருவிருக்க ராஜ்ய ஹானியும், ஸ்தான நாசமும், மனோ துக்கமும் உண்டாகும். கன்று காலி வாகனுதி, கிருஷி. வியாபாரங்கள் நஷ்டமாகும். பத்தாமிடததில் குருவிருந்தால் பொருள் நாசமும், தாரப்பகையும், சர்வஜன விரோதமும் நேரும். பன்னிரண்டாமிடத்தில் குருயிருக்க சகல வஸ்துவும் விரையமாய் சதா பீடையும் உண்டாகும். ராசி சக்கிரத்தில் துர்ஸ்தானங்களில் குரு சஞ்சரிக்கிற காலங்களில் குரு பிரீதி செய்யவேணும். பிரீதி செய்யும்விதம் குருவாரம் புண்ணிய காலங்களில் விதிப்படி ஸ்வர்ணதானம் கொடுக்கவேண்டும். எப்படி என்றல் பூமியை கோமயத்தினல் மெழுகி, கோலமிட்டு, மஞ்சள் நீரால் எட்டுதளமுள்ள தாமரைப் புஷ்பம்போல் எழுதி, அதை மஞ்சள் வஸ்திரத்தால் மூடி, வெள்ளி தொன்னை வைத்து

அதற்குள் ஒரு வராகனிடையுள்ள பொன்னால் குருவைப்போல் பிரதிமை செய்து, விஷ்ணு பிரதிமை சகிதமாக பூஜை செய்து, பிராம்மணருக்கு சோடசோபசாரம் செய்து மந்திர பூர்வமாக எதாசக்தி தக்ஷிணையுடன் ஸ்வர்ணதானம் செய்தால் அரிஷ்ட பரிகாரமாவதுடன் விசேஷ போகபாக்ய சவுக்கியங்களும், தாரா புத்திரசுகமும், ஆயுர்விருத்தியும் உண்டாகும். இன்னும் அதிக சம்பத்துடனே நிர்ப்பயத்தோடு உபத்திரவமின்றி சுகஜீவியாக வாழ்ந்திருந்து அனந்தரத்தில் விஷ்ணு லோகபதியை அடைபவனுவான். இந்தப் பிரகாரமாக சுவர்ண தான விதியை சொல்லப் பட்டிருக்கிறது.

## சூரிய தெசையில் சனி புக்திக்கு சாந்தி

சதாபயம், துஷ்டகிரக பயம், துஷ்ட கிரகங்களிட பயம், உத்பாதம், உத்பாத தோஷம் இவை முதலான சர்வபாபங்களும் நிவர்த்தி செய்து க்ஷேமத்தை அடையும் பொருட்டு சாகதானம் (ஆடுதானம்) சொல்லப்பட்டு இருக்கிறது. கிலேச காலத்திலேயும், கிருஷ்ண பக்ஷத்தில் அஷ்டமி, சதுர்த்தசி, துவாதசி, ஜன்ம நக்ஷத்திரத்தில், குரூர காலத்தில், பர்வதினத்தில், ஞாயிறு, செவ்வாய், வெள்ளி இவ்வாரங்களிலே சாந்தி செய்கிறவன் தாராபலம் பார்த்துக் கொண்டு சந்திரபலமுள்ள நாளாக கூடின நக்ஷத்திரத்தில் தன் வீட்டிலாவது அல்லது ஆலயத்திலாவது, நதி தீரக்கரையிலாவது, சுத்தியான பூமியிலே பரிசுத்தனாக 3-முழம் சதுரமாக இடத்தை மெழுகி, ரோகமில்லாததாய், திடமானதாய், கருப்பு நிறமான ஆட்டுக்கிடாவை கொண்டுவந்து அந்த இடத்தில் நிறுத்தி அதன் வலப்பாகத்தில் கோதுமை தானியத்தையும், இடப்பாகத்தில் உளுந்து தானியத்தையும், வால்பக்கத்தின் வல பாசததில் நெல்லு தானியமும், இடப்பக்கத்தில் எள் தானியத்தையும் ராசியாகக் கொட்டி நீல வஸ்திரத்தை போர்வையிட்டு சிகப்பு சந்தண அக்ஷதை, புஷ்பங்களாலலங்கரித்து விதிப்படி மந்திரத்தினால் பூஜை செய்து, எள் நைவேத்தியம் செய்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து, மிருத்யுஞ்சயேஸ்வரனை பூஜித்து, எதாவிதி பாக தக்ஷிணை, தாம்பூலசகிதமாக தெற்குமுகமாக திரும்பியிருக்கிறபடி குடும்பஸ்த்தனுமாக சற்குலத்தில் பிறந்தவனுமாக இருக்கிற பிராம்மணோத்தமனை கந்த புஷ்பாட்சதாதி பூஷணங்களால் அலங்கரித்து தான் கிழக்குமுகமாக இருந்து கொண்டு ஆடு தானம் செய்து பிராம்மணனை அனுப்பின பிற்பாடு 1-மீ வரையில் தானம் வாங்கின விப்பிரரை தரிசிக்கக்கூடாது. அதன்பிற்பாடு சிவனுக்கு அபிஷேகம் செய்து சாலிக்கிராம தானம், பிராம்மணருக்கு போஜனம், பலதானம் முதலிய தான சாந்திகளை

பக்தி பூர்வமாக செய்கிற பக்ஷத்தில் அகால மிருத்யு பரிகார மாகும். இதற்குச் சந்தேகமில்லை. இதல்லாமலும் தேகாரோக்ய மும், திடசரீரமும், ஆயுர் விருத்தியும், சுகமும் உண்டாகும்.

## சூரிய தெசையில் புதன் புக்திக்குச் சாந்தி

புதனுக்குப் பிரீதியாக 11:பலம் வெள்ளியினல் பிரதிமை யொன்று செய்து தானம் கொடுக்கவேண்டும். அது எப்படி என்றல் துஷ்ட ஸ்தானங்களிலிருக்கிற புதன், சகல விதங்களில் பயமும், பித்த ரோகமும், மிருத்யு பயமும், பொருள் நாசமும், பந்து பகையும், காரிய நாசனமும், புத்தி பிரமையையும் உண் டாக்கச் செய்யும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாகும்படிக்கும், ஆயுராரோக்யங்கள் சித்தியாகும் பொருட்டு இந்த தானம் செய் கிறது உத்தமம். விசேஷமாக புதன்கிழமையிலும், தன் வீட்டி லாவது, தேவாலயத்திலாவது சுத்தியாயிருக்கிற இடத்தில் கோம யத்தினல் பூமியை சுத்தி செய்து, கோலமிட்டு, புத பிரதிமையை சிம்ம வாகனத்தின்பேரில் நிறுத்தி மல்லிகை, ஜாதி முதலாகிய புஷ்பங்களால் பூஜித்து, பச்சை வஸ்திரத்தைத் தரித்து பூஷணங் களால் அலங்கரித்து புத பகவானை தியானித்து மந்திர விதிப்படி உபசரித்து தூபதீப நைவேத்தியம் சமர்ப்பித்து உத்தமமான பிராமணனுக்கு யதாசக்தி தக்ஷிணை தாம்பூலம் சகிதமாக தானம் செய்யும்பக்ஷத்தில் சர்வ தோஷமும் பரிகாரமாகி சகலவித கஷ் டமும் நீங்கும். இந்தப் பிரகாரமாக புத பிரீதிகரமாக ரஜித தான விதி சொல்லி இருக்கிறது.

## சூரிய தெசையில் கேது புக்திக்குச் சாந்தி

கேது, 2, 7-மிடங்களிலிருந்தாலும் அல்லது அந்த ஸ்தானதி பதிகளுடன் சேர்ந்து இருந்தாலும் அகால மரண பயமும், சூனி யாதி க்ஷுத்திர தேவதா பீடையும சம்பவிக்கும். அதற்காக துர்க்கை ஜெபம் செய்து ஆடு தானம் செய்யவேண்டியது. அதன் பிறகு மஹா மிருத்யுஞ்ஜய ஜபம் செய்தால் தோஷம் சாந்தப் படும்.

சூரிய தெசையில் சனி புக்திக்கு சொன்ன விதிப்படி ஆடு தானம் செய்யவும்.

## சூரிய தெசையில் சுக்கிர புக்திக்குச் சாந்தி

துஷ்ட ஸ்தானங்களிலிருக்கிற சுக்கிரன் தன நாசமும் விசேஷ பயமும, தேக பாதையும், தாரா, புத்திராதி நாசனமும்,

ஸ்த்ரீகளால் கலகமும், ஸ்தான நாசமும் செய்வன், இந்த தோஷ நிவர்த்திக்கு சூரிய தெசையில் சந்திர புக்திக்கு சொன்ன விதியைப்போல் வெள்ளைப் பசு தானம், மிருத்யுஞ் ஜயஜெபம், ருத்திரஜெபம் முன் சொன்ன ரீதியாக சாந்தி செய்ய சர்வ தோஷமும் நிலைந்து ஆயுராரோக்கிய ஐஸ்வரியங்களை அனுபவிப்பான் என்பது.

## சந்திர தெசை சந்திர பிரீதி தானம்

சந்திரன் குரூரகாலமாவது, சந்திரன் பலயீனனாகி 12-மிடம், 8-மிடம், ஜன்மம் இந்த ராசிகளில் சஞ்சரிக்கிற காலங்களில் வெள்ளி தாமிர தானம் செய்ய வேணும். அது எப்படி எனில் திங்கட்கிழமை தினம் வீட்டிலாகிலும், அல்லது தேவாலயத்திலாகிலும் நல்ல இடத்தில் கோமயத்தினால் மெழுகி கோலமிட்டு பச்சரிசையை அம்பாரமாக கொட்டி அதன்பேரில் வெள்ளி தாமரைப்பூ வைத்து வெள்ளை வஸ்திரத்தைச் சுற்றி பிராம்மணனுக்கு வெள்ளை வஸ்திரமாக கொடுத்து தக்ஷிணை சகிதமாக எதாவிதியாக மந்திர யுக்தத்தோடு பிராம்மணருக்குத் தானம் செய்ய வேண்டியது. இப்படி செய்தால் சந்திரனால் உண்டான தோஷங்கள் நிவர்த்தியாகும். அதுவுமல்லாமல் ரூபமுள்ளவனும், தனவந்தனும், புத்திர, பௌத்திர விருத்தியுடையவனாக வாழ்வன், இக லோகத்தில் சுகபோகங்களை அனுபவித்து பிறகு சந்திர லோகத்தையும் சேருவான் இப்படி சந்திரப் பிரீதிக்காக வெள்ளி தாமரைப்பூ தான விதியை சொல்லி இருக்கிறது.

இதுவும் சந்திர கிரகப் பிரீதிக்காக வெள்ளை பசு த்தானம் செய்யும் விதி :—

சந்திரன் 6, 8, 12-மிடங்களிலாவது அல்லது 2, 7-ம் இடங்களிலாவது இருந்தால் அந்த காலத்தில் தன நாசமும், ஸ்தான பேதமும், மனோ விசனமும், சரீராயாசமும், மனஸ்தாபமும், சீதள சுர பயமும், நேத்திர ரோகமும், மூத்திர கிருச்சர வியாதியும், ஜல கண்டமும் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாகிறதற்கு வெள்ளைப் பசுவை கன்றுடனே காவல் உள்ளதாக விதிப்படி பிராம்மணருக்குத் தானம் கொடுக்கவேண்டும். அல்லது எருமை தானமும் செய்யலாம். இந்த தானங்களை செய்த பிறகு மிருத்யுஞ் ஜய ஜபமும் செய்தால் அதன் பிறகு ஸௌக்யம் உண்டாகும். முன் சூரிய தெசையில் சந்திர புக்திக்கு சொன்ன விதிப்படி தான விதியை அநுசரிக்க வேண்டியது.

## சந்திர தெசையில் செவ்வாய் புக்திக்குச் சாந்தி

சந்திர தெசையில் அங்காரக புக்தி காலத்தில் செவ்வாய் 6, 8, 12-மிடங்களிலாவது அல்லது ஜன்ம லக்கினத்திலாவது, அல்லது, சந்திர லக்கினத்திலாவது, 2, 7-மிடங்களிலாவது, அல்லது பாபகிரக சம்மந்தம், அல்லது பாபர் பார்வையாவது, பெற்றிருந்தால் அந்த காலத்தில் மனோவியாகூலம், சரீர பீடை, ஜுர பாதை, அதிஸாரபேதி முதலான ரோக பாதையும், தன நாசமும், சகோதர மரணமும், அகால மரணமும், அதிக பயங்கரமான ஆபத்தும் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு நாக தானம் செய்ய வேண்டியது அது எப்படி என்றால் :—

## நாக தான விதி

அயனாதி புண்ய காலங்களிலும், செவ்வாய் குரூர ஸ்தானங்களிலிருந்து உபத்திரவம் செய்கிற காலங்களிலும், ஆலயத்திலாவது, அல்லது தன் சொந்த வீட்டிலாவது, பூமியை கோமயத்தினால் மெழுகி கோலம் போட்டு, தானியத்தை ராசியாகக் கொட்டி 8-பலம் எடையுள்ள தாம்பரத்தினால் கலசம் ஒன்றை தானியத்தின் மீது வைத்து அந்த கலசத்துள் 1-பலம் எடையுள்ள பொன்னால் நாக பிரதிமை யொன்றை சேர்த்து ரத்னாதிகளால் அலங்கரித்து சிகப்பு வஸ்திரத்தைச் சுற்றி எதா விதிப்படி சங்கல்பம் செய்து கொண்டு சர்வ தேவதை பிரீதியின் பொருட்டு போதாயனோக்த பிரகாரமாக சர்ப்ப பூஜை செய்து கலச ஸ்தாபனம் பண்ணி ஆசாரிய பூசை செய்து, சிகப்பு சந்தனாக்ஷதை புஷ்பாலங்கார பூஜா விதிகளை முடித்து தில ஹோமம் செய்து, கலச தீர்த்தத்தை எஜமானனுக்கு புரோக்ஷித்து தக்ஷிணை சகிதமாக கலச வஸ்த்திர பிரதிமையை தானம் செய்து தன் சக்திக்கு தகுந்தபடி பிராமணருக்கு அன்னமளித்து ஆசீர்வாதத்தை பெற்றால் சகல பீடையும் நாசமாய் விடுமென்று போதாயன சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது.

## சந்திர தெசையில் இராகு புக்திக்குப் பிரீதியாக ஆடு தான விதி

சந்திர தெசையில் இராகு புக்தியில் இராகு 2, 7-மிடங்களிலிருந்தாலும் 7, 8-மிடங்களிலும், 3, 9, 12-மிடங்களிலிருந்தாலும் தன் நீச ராசியிலிருந்தாலும், பாபகிரகங்களுடன் கூடியிருந்தாலும் அந்த காலத்தில் புத்திர மரணம், ஸ்தான நாசமும், பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்களிட பீடிதமும், ரத்த பேதி காச வியாதி,

மூத்திர ரோகம், பேய், பிசாசு, பில்லி, சூனியங்களிட பாதை, மிலேச்சராலும், சண்டாளராலும், திருடராலும், தன நாசம், ஸ்த்ரீயினால் வியாஜ்ஜியமும் உண்டாகும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு விதிப்படி ஆடுதானம் செய்யவேண்டியது. இப்படி செய்வதனால் சர்வ பாபமும் நாசமாய் சுப பலன்கள் உண்டாகும். சகலவிதமாக ஐஸ்வரியாதிகள் அநுபவிக்கச் செய்யும். சாந்தி செய்கிற விதத்தை சூரிய தெசையில் சனி புக்திக்கு சொல்லி இருக்கிற சாந்தி விதிப்படி இந்த ஆடுதானத்திற்கு அனுசரிக்க வேண்டியது.

## சந்திர தெசையில் குரு புக்திக்குக் குரு பிரீதி சாந்தி

சந்திர தெசையில் குரு புக்தியில் குரு துஷ்ட ஸ்தானங்களிலிருந்தால் அந்த காலத்தில் கிருஹ நாசமும், தன நாசமும், மனோ விசனமும், தாயாதி ஜனங்களால் கலகமும், ஸ்த்ரீக்கு கெர்ப்பம் கெட்டுப்போவதும், சீதள சுரமடித்து அகால மரண மேற்படுவதும், சத்துரு பயமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கா தேவி தானம் செய்வது உத்தமம், இது செய்கிற விதம் :—துர்க்காதேவி பிரதிமை யொன்றை பொன்னால் கிருஷ்ண பக்ஷம், செவ்வாய் முதலான பாபர் வாரங்களில், அல்லது குரு குரூரராசி சஞ்சார காலத்தில் கலச ஸ்தாபனம் செய்து, சிகப்பு கெந்தாக்ஷதை புஷ்ப வஸ்திரங்களினாலலங்கரித்து கத்தி, சூல, அபயாஸ்தங்களுள்ள 3-பலம் எடையுள்ள பொன்னால் பிரதிமை செய்து எருமை வாகனம் உடையதான பிரதிமையை சண்டீவிதான பிரகாரமாக பூஜித்து நூறு விராகன் அதிக தக்ஷிணையை கொடுத்து யோக்யனான பிராமணருக்கு சிகப்பு வஸ்திர சந்தனாக்ஷதையுடன் பூஜை செய்து அதன் பிறகு மேல் சொன்னபடி மந்திர பூர்வமாக துர்க்கா பிரதிமையை தானம் கொடுக்கும் பக்ஷத்தில் பய நிவாரணமும், யுத்தத்தில் சர்வசத்துரு ஜயமும், ரூப சௌபாக்ய செல்வந்தர்களான புத்திர பௌத்திரர்களும் மிதம் இல்லாமல் ஐசுவரிய லாபங்களும், விசேஷமான போக பாக்யங்களையும் அனுபவிக்கச் செய்வதுடன் அபமிருத்யு தோஷ நிவர்த்தியாகி, சர்வ ரோக நிவாரணமுமாகும். இந்த விதமாக துர்க்கா தேவி தான விதி சொல்லப்பட்டிருக்கிறது.

## சந்திர தெசையில் சனி புக்தியில் சனி பிரீதியாக எருமை தான விதி

சந்திர தெசையில் சனி புக்தி நடக்கிற காலத்தில் சனி துஸ்தானங்களி லிருந்தாலும், துர்ஸ்த்தானாதிபதிகளுடன் கூடின

னும், நீசனுகயிருந்தாலும், அஸ்தங்கதனுயிருந்தாலும், அந்த காலத்தில் சமானஜன நாசமும், நாற்கால் ஜீவன்கள் நாசமும், கலகமும், ராஜ நிஷ்டூரமும், தேக பீடையும், தன விரையமும் உண்டாகும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு எருமை தானம் கொடுக்க வேண்டியது. அப்படி செய்த பிறகு சௌக்யங்கள் உண்டாகும். இந்த சாந்தி வகை முன் சூரிய தெசையில் ராகு புக்திக்கு சொன்ன பிரகாரம் எருமை தான விதியை அனுசரித்து செய்யவும்.

## சந்திர தெசையில் புதன் புக்தி புதன் பிரீதியாக லக்ஷிமி நாராயண தானம்

சந்திர தெசை புத புக்தியில் துஷ்ட ராசிகளிலிருந்தால் அந்த காலத்தில் பந்து நாசமும், மித்திர விரோதமும், தன் வாரத்தில் ராஜ கோபமும், தாரா, புத்திராதி பீடையும், பைத்தியம் பிடித்தலும், ஜுரமடிக்கிறதும், அபமிருத்யு பயமுமுண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்காக லக்ஷிமி நாராயண தானம் செய்ய வேண்டும். இப்படி செய்தால் ஆயுர் விருத்தியும் இஷ்டகாம மோக்ஷ பல புருஷார்த்த சித்தியும், எந்த திசைகளிலும், ஜயமும் உண்டாகி, சத்துரு நாசமும், யமபாதை நிவாரணமும், விஷ்ணு லோக பிராப்தியும் உண்டாகும். சுத்த கால தேசங்களில் பரி சுத்தனுக 10-பலம் பொன்னுல் லக்ஷிமி நாராயண பிரதிமையை செய்து 10-மரக்கால் பயிறை ராசியாகக் கொட்டி அதன் பேரில் 8-மரக்கால் பால் நிறைந்த கும்பத்தை வைத்து, அதற்குள் இந்த லக்ஷிமிநாராயண பிரதிமையை ஆவாகனம் செய்து, மஹா விதான பிரகாரமாக துளஸி பூஜை செய்து, ஹோமம் செய்த பிறகு பக்தியாக வைஷ்ணவ பிராமணருக்கு தானம் கொடுத்து பிராமணர்களுக்கு சந்தர்பணேயும் செய்தால் விஷ்னுவினுடைய அனுக்கிரகத்தினுலே நிச்சயமாக சகலவித தோர்ஷங்களும் நாசமாகும். இன்னும் இஷ்ட சித்தியும் உண்டாகும். இந்தப் பிரகாரமாக லக்ஷிமி நாராயண தான விதியை சொல்லி இருக்கிறது.

## சந்திர தெசையில் கேது புக்தி; கேது பிரீதியாக ஆடு தான விதி

சந்திர தெசையில் கேது துஷ்ட ஸ்தானங்களிலிருந்தால் அந்த காலத்தில் சத்துரு பயமும், தன நாசமும், காராகிரக பிரவேசமும், நிச்சயமாக மரணமும் உண்டாகும். அந்த தோஷம் நிவாரணத்திற்காக ஆடு தானம் செய்யும் பக்ஷத்தில் சகலவித சம்

சத்தும் உண்டாகும். ரோக நிவாரணமாகும். சரீராரோக்யம் உண்டாகுமென்பது நிச்சயம். சூரிய தெசையில் சனி புக்திக்கு சொல்லி யிருக்கிற விதம் பிரகாரமாக ஆடு தானம் செய்ய வேண்டியது.

## சந்திர தெசையில் சுக்கிர புக்தி, சுக்கிர பிரீதியாக எருமை தானம்

சந்திர தெசையில் சுக்கிர புக்தியில் சுக்கிரன் 6, 8, 12-ம் இடங்களிலிருந்தால் அந்த காலத்தில் சரீரத்திற்கு தாபமான வியாதியும், சத்துரு பாதையும் உண்டாகும். அந்த தோஷம் பரிகாரமாவதற்கு ருத்திர ஜெபம் செய்ய வேண்டும். வெள்ளை நிறமான எருமை தானம் செய்த பிறகு சந்தேகமில்லாமல் சாந்தியாகும். சூரிய தெசையில் ராகு புக்திக்கு சொன்ன விதிப்படி எருமை தான விதியை அனுசரிக்கவும்.

## சந்திர தெசையில் சூரிய புக்தி பிரீதியாக துர்க்கா தானம்

சந்திர தெசையில் சூரிய புக்தியில் சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தாலும், சத்துருக்களுடனேயாவது, பாபக்கிரகங்களுடனேயாவது, அல்லது பலயீனனாலும் அந்த காலத்தில் கட்டி பாதையும், க்ஷய காச ரோகமும், அதிஸார பேதி, ராஜ பாதையும், அக்னி பயமும், சோர பீடை, தாபச்சுர முதலிய பாதையை அனுபவிக்க நேரும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கா தானம் செய்ய வேண்டும். சந்திர தெசையில் குரு புக்தியில் சொன்ன படிக்கு துர்க்காதான விதியை அனுசரித்து செய்ய வேண்டியது.

## செவ்வாய் தெசை, செவ்வாய் பிரீதியாக தாம்பிரபத்ம தானம்

எல்லா தானங்களிலும் தாம்பிர பத்ம தானம் சிறந்ததும் அதிக உத்தமமானதுமாம். அங்காரகன் துஷ்ட ஸ்தானங்களிலிருந்தாலும், பாபிகளுடன் கூடினாலும், சரீரத்தில் ரணபாதையும், மான ஹானியும், திரவிய ஹானியும், ஸ்தான பேதம், ராஜ பீதியும், மந்திரி துவேஷமும், உபத்திரவமும், தரித்திர துக்கமும் சம்பவிக்கும். அந்த தோஷங்கள் நிவர்த்திக்கும் பொருட்டும், ஆயுராரோக்ய அயிசுவரியங்களை அனுபவிக்கும் பொருட்டும் உத்

தம தானத்தை செய்ய வேண்டியது அவசியம். சாந்தி செய்கிற விதமாவது:—

ஜன்ம நக்ஷத்திரத்தில் கிரக யோகத்திலேயாவது, ரிக்ததிதியிலாவது, செவ்வாய் கிழமையுடன் கூடியிருக்கிற நாளில் வீட்டிலாகிலும், தேவாலயத்திலாகிலும், பூமியை சுத்தி செய்து கோமயத்தினல் மெழுகி கோலமிட்டு, துவரையை ராசியாகக் கொட்டி, 21-தளமுள்ள தாமிரத்தினல் புஷ்பம் செய்து, 3-துலாம் எடையுள்ள பொன்னல் சக்தி, சூலம், கதை, பாசதர சதுர்புஜமான பிரதிமையை ஆடு வாகனமுள்ளதாக ரக்தமால்யாம்பரமுள்ள அங்காரக பிரதிமை யொன்றை செய்து வைத்து தியானம் செய்ய வேணும். அது எப்படி என்றல்:—

இந்தப் பிரகாரமாக தியானம் செய்து மந்திர விதியாக பூஜித்து சிகப்பு சந்தன புஷ்ப அக்ஷதைகளால் நாம பூஜை செய்த பிறகு தூபதீப நைவேத்யாதி அர்க்ய பாத்யம் சமர்ப்பித்து யதா சக்தி தக்ஷிணையுடன் தானம் கொடுக்கும் பக்ஷத்தில் செவ்வாய் தோஷம் சாந்தியாகும். இந்தப் பிரகாரமாக செவ்வாய் பிரீதிகரமாக தாமிரபத்ம விதிசொல்லி யிருக்கிறது.

## செவ்வாய் தெசையில் செவ்வாய் புக்தியில்
## செவ்வாய் பிரீதிக்காக அனட்வாஹ தானம் செய்யவும்

செவ்வாய் தன் தெசையில் தன் புக்தி நடக்கிற காலத்தில் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், பாபிகளுடன் கூடி யிருந்தாலும், நீச்சகிரக சம்பந்தம் பெற்றிருந்தாலும் அல்லது 2, 7-மிடங்களி லிருந்தாலும், அந்த புக்தி காலத்தில் விசேஷ வியாதி பயமும், ராஜ பாதை, அக்னி பயம், தாரா, புத்திராதிகளுக்கு அரிஷ்டங்கள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமணியருடைய ஜெபம் செய்ய வேண்டும். சிகப்பு நிறமான ரிஷபத்தை தானம் கொடுக்க வேண்டியது. அதன் பிறகு ஆரோக்ய பாக்யங்கள் உண்டாகும். சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்குச் சொன்ன விதிப்படி சாந்தி செய்ய வேண்டியது.

## செவ்வாய் தெசையில் ராகு புக்தி, ராகு பிரீதியாக
## எருமை, கருப்பு பசு தானம்

செவ்வாய் தெசையில் ராகு 6, 8, 12-மிடங்களிலாவது, 2, 7-மிடங்களிட அதிபர்களுடன் கூடியாவது இருந்தால் அந்த காலத்தில் திருடர் பயமும், அக்னி பாதை, ரண பீடை, பூத,

பிசாசு அபஸ்மாரகதி பீடை, சரீராலஸ்யமும் உண்டாகும். அந்த தோஷம் பரிகாரத்திற்கு எருமை தானம் கொடுப்பது உத்தமம். சூரிய தெசையில் ராகு புக்திக்கு எருமை தானம் செய்கிற விதியில் சொல்லியபடி அனுசரிக்கவும்.

## செவ்வாய் தெசையில் குரு புக்தி, குரு பிரீதி சொர்ன தானம்

செவ்வாய் தெசையில் குரு புக்தி காலத்தில் குரு 2, 7-மிடங்களிலும் பலயீனமாக 6, 8, 12-மிடங்களிட அதிபதிகளுடன் கூடியிருந்தாலும், இந்த புக்தியில் பித்த சம்பந்தமான வியாதியும், மூத்திர கிருச்சாதி ரோகமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சிவ சஹஸ்ர நாம ஜெபம் செய்ய வேண்டியது. பிரீதியாக சுவர்னதானம் செய்ய வேண்டும். அப்படி தானம் கொடுத்த பிறகு சகலவித பயமும் நிவர்த்தியாகி இகத்தில் வெகு பாக்கியங்கள் அனுபவித்த பிறகு இந்திர லோக பதவியும் அடைபவனுவான். சூரிய தெசையில் குரு புக்திக்கு சொன்ன சாந்தி பிரகாரம் தான விதியை செய்ய வேண்டியது.

## செவ்வாய் தெசையில் சனி புக்தி, சனி பிரீதியாக திலாதி தானம்

செவ்வாய் தெசையில் சனி புக்தி நடக்கிற காலத்தில் சனி நீச்சமடைந்தாயினும், சத்துரு வீட்டிலாயினும், 6, 8, 12-மிடங்களுக்கு அதிபதியுடன் கூடி பாபர் வீடுகளில் இருந்தாலும், அல்லது 2, 7-மிடங்களுக்கு அதிபர்களுடன் சேர்ந்தாலும் இந்த புக்தியில் சரீர தாபமும், சிரோ ரோகமும், கலகமும், மனோ வியாகூலமும், வியாதி பயமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மிருத்தியுஞ் ஜய ஜெபம் செய்யவேண்டியது. அபமிருத்யு நாசமாகும் பொருட்டு எள்ளு தானம் கொடுக்க வேண்டியது. இந்த தான விதி எப்படியென்றால் மாசி மாதத்தில் வரும் பருவத்திலாவது, ரோக பாதை பீடிதராயிருக்கும் போதாவது, சனி பீடை சம்பவத்திருக்கும் காலத்திலாவது, உட்பாத தரிசனம் காணும் காலத்திலாவது, வீட்டிலாகிலும், தேவாலயங்களிலாகிலும், சுத்தமான இடத்தில் கோமயத்தினால் பூமியை சுத்தி செய்து, சிகப்பு வஸ்திரத்தை பரப்பி அதன்பேரில் எள்ளு கலந்த மாவினால் மிருத்தியு பிரதிமை ஒன்று நிருமித்து வைத்து சிவப்பு நிற வஸ்திரத்தால் அலங்கரித்து விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு மந்திர பூர்வமாக பூஜை செய்து, சிகப்பு கந்தாக்ஷத புஷ்பங்களை

சமர்ப்பித்து தூபதீப நைவெத்தியங்களுடனே வேதபயிற்சியுள்ள பிராமணரை தெற்கு திசையாக இருக்க செய்து, விதிப்படி தானம் கொடுக்கும் பக்ஷத்தில் சர்வ அரிஷ்டங்கள் துலைந்து இக வாழ்க்கை அனுபவித்த பிறகு எமபுரம் சென்று ஒரு கல்பகாலமிருந்து பிறகு விஷ்னு லோகம் சேருவான்.

## செவ்வாய் தெசையில் புதன் புக்தி புதன் பிரீதியாக அசுவ தானம்

செவ்வாய் தெசையில் புத புக்தியில் புதன் 6, 8, 12-ம் இடங்களி லிருந்தாலும், அல்லது நீச ராசியிலிருந்தாலும் தெசா னதனுகிய செவ்வாயுடனே கூடியிருந்தாலும் அந்த காலத்தில் சத்ரு விருத்தியும், அதிக பயமும், வெளிதேச யாத்ரா கமனமும், நானுவித ரோக பாதையும், இருதயத்தில் வியாதியும், மான ஹானியும், புத்தி விகல்பமும், பசு முதலான வாகன நாசமும் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரார்த்தணையை செய்ய வேணும். குதிரை தானமும் விதிப்படி தானம் செய்த பிறகு சர்வ தோஷமும் நிவர்த்தியாகும்.

புத பிரீதியாக குதிரை தானம் செய்ய இச்சையுள்ள புருஷன் சூரிய, சந்திர கிரஹண புண்ய காலங்களிலாகிலும், உபத்திரவ காலங்களிலாகிலும், தேவாலய புண்ய பிரதேசத்தில் பூமியை மெழுகி கோலம் இட்டு அந்த சுத்தமான இடத்தில் சர்வ லக்ஷணமுள்ள சிவப்பு வர்னமான அசுவத்தை கிழக்கு முகமாக நிறுத்தி, சிவப்பு வஸதிரம் உடுத்தி 5-பலம் எடையுள்ள பொன் வெள்ளிகளிட ஆபரணங்களினுல் அலங்கரித்து தான சங்கல்பம் செய்து அசுவதான நிமித்தமாக அசுவ பூஜை செய்து மந்திரத்துடனே சோடச உபசார பூஜை செய்து, சூரிய நாராயண ரூபமான பிராமணனுக்கு விதிப்படி பூஜை செய்து 100-விராகனுகிலும், அல்லது 25-விராகனுவது தக்ஷிணை கொடுத்து குதிரைதானம் கொடுக்கும் பக்ஷத்தில் சகலாரிஷ்டங்களும் நிவர்த்தியாகி இகபரலோக சுகானுபவத்தை அடைவரென்பது.

## செவ்வாய் தெசையில் கேது புக்தி கேது பிரீதி ஆடு தானம்

கேது 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியும், மாரக ஸ்தானங்களிலாவதிருந்தால் அந்த காலத்தில் விஷபீதியும், திருடரால் பயம், சத்துரு பீடை, நித்திரை ஆலஸ்யம், தாரா, புத்திரர்களுக்கு பீடையும், சினேகித பந்து விரோதமும்,

அன்னியர் வீட்டில் வாசமும், அகால மிருத்யு பயமும் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர ஜெபம் செய்ய வேண்டியது. ஆடு தானமும் சூரிய தெசையில் சனி புக்தியில் சொன்ன விதிப்படி செய்ய தோஷ நிவர்த்தியாகும்.

## செவ்வாய் தெசையில் சுக்கிர புக்திக்கு துர்க்கா தானம்

செவ்வாய் தெசையில் சுக்கிர புக்தி நடக்கிற காலத்தில் சுக்கிரன் 6, 8, 12-மிடங்களிலிருந்தால் இந்த புக்தியில் வியாதி பயமும், துக்கமும், கலகமும், பிராண ஆபத்துமாம். அந்த தோஷம் நிவர்த்தியாகும்படிக்கு துர்க்கை ஜெபம் செய்ய வேணும். துர்க்கா தானம் செய்த பிறகு ஆரோக்யமுண்டாகும். சந்திர தெசையில் குரு புக்திக்கு சொன்ன சாந்தி பிரகாரம் தான விதியை செய்ய வேண்டியது.

## செவ்வாய் தெசையில் சூரிய புக்திக்கு பத்ம தானம்

செவ்வாய் தெசையில் சூரிய புக்தி நடக்கிற காலத்தில் சூரியன் 1, 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், பாபர் வீட்டிலிருந்தாலும், அல்லது மாரகாதிபதிகளுடன் சேர்ந்தாலும் அந்த காலத்தில் பைத்திய ரோகமும், தாபச்சுர பீடையும், ரண பாதையும் உண்டாகும். அந்த தோஷம் நிவாரணத்திற்கு பத்ம தானம் செய்ய வேணும்.

### பத்ம தான விதி

சூரிய பிரீதிக்காக எப்போதும் ஆயுராரோக்யத்தை கொடுக்கப்பட்டதும், பைத்தியம், கபம் முதலிய ரோகங்களை நிவர்த்திக்கப்பட்டதும், அதிஸாரம, குன்மம், கிராணி ரோக முதலியதும், மாந்தம், விஷ பீதி முதலியவைகள். அது நிவர்த்தியாவதற்கு உப சாந்தி செய்கிறதும், துஷ்ட ஸ்தானங்களிலிருக்கிற கிரகங்கள் மூலமாக உண்டாகும் அரிஷ்டத்தை நாசம் செய்வதுமான தானங்களில் உத்தமதானமாகிய பத்ம தானத்தை ஜீவ தெசையுள்ள புருஷன் செய்கிற பக்ஷத்தில் சரீர காந்தியும், புஷ்டியும், பலமும் உண்டாகும்.

ஜன்ம நட்சத்திரத்திலாகிலும், வி்யதீபாதத்திலும், ஞாயிறு, செவ்வாய், சனி வாரங்களிலும், அஷ்டமி, சதுர்த்தசி திதிகளிலும், க்ஷேத்திரகாலத்திலும், துர்சொப்பனம் காணுங் காலங்களிலும், தன் வீட்டில் சுத்தமான இடத்தில் கோமயத்தினுல் மெழுகி கோலம் போட்டு விதிப்பிரகாரம் பொன்னுல் செய்த

பத்மத்தை, பச்சரிசையை ராசியாகக் கொட்டுவித்து, அதின் மீதில் வைத்து, சோடசோபசார பூஜை செய்து சௌராஷ்ட்ர மந்திரத்தினுல் பூஜை பண்ணி திலஹோமம் செய்து, ஆசாரியரை சிகப்பு கந்த புஷ்ப அக்ஷதைகளாலும், பூஷணங்களாலும் அலங்கரித்து கிழக்குமுகமாக இருக்கும் பிராமணருக்கு வடக்குமுகமாக யிருந்து பக்தியாக தான மந்திரத்தைச் சொல்லி யதா சக்தி தக்ஷிணை சகிதமாக பத்மதானம கொடுக்கும் பக்ஷத்தில் நிச்சயமாக ரோகமில்லாதவனும், அருசியில்லாதவனும், கிராணி ரோகமில்லாதவனும், பலவானும், தேக காந்தியுடையவனும், எப்போதும் சுகம் அனுபவிக்கப்பட்டவனுமாவான்.

## செவ்வாய் தெசையில் சந்திர புக்திக்குச் துர்க்கா தானம்

செவ்வாய் தெசையில் சந்திர புக்தியில் சந்திரன் நீசராசியிலாகிலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், பாபக் கிரகங்களுடனே கூடி யிருந்தாலும், அல்லது க்ஷீணனுனுலும், மாரகாதிபதியுடன் கூடினுலும் இந்த புக்தியில் நிச்சயமாக அந்த புக்தியில் மாரகம சம்பவிக்கும். அல்லது சிலேத்தும ரோகமும், பாண்டு வியாதியும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கை தானம் செய்யவேணும். சந்திர தெசையில் குரு புக்தியில் சொல்லி இருக்கிற தான விதிப்பிரகாரம் செய்ய வேண்டியது.

## ராகு தெசையில் ராகு பிரீதியாக சொர்ன லோக தானம்

துஷ்ட ஸ்தானங்களிலிருக்கிற ராகு அனேகவித கஷ்டங்களையும், சுயதேச விடுதலையும், சுய ஜனங்களை பகைக்கிறதும், மித்திர பேதமும், சத்துரு பயமும், மானஹாணியும், திரவிய நாசமும், அஸ்திரங்களினுல் பீதியும், ஆயுத பயமும், சர்ப்ப கெண்டமும், விஷ பீதியும், துஷ்டர்களால் பயமும், சந்தேகமில்லாமல் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்காக தானங்களெல்லாவற்றிலும் உத்தமமான சொர்ண லோஹதானம் ராகு பிரீதிக்காக செய்ய வேண்டியது.

சனிவாரத்திலும், செவ்வாய்க்கிழமையிலும், பஞ்சபர்வ காலங்களிலும், தேவாலயத்திலாவது, தன் வீட்டிலாவது நல்ல தான இடத்தில் பூமியை கோமயத்தினுல் மெழுகி எள் தானியத்தை ராசியாகக் கொட்டி அதன்பேரில் இரும்பினுல் செய்த ராகு பிரதிமையை வைத்து சுப வஸ்திராபரணுதிகளால் அலங்கரித்து, தியானித்து பூஜை செய்ய வேண்டியது. சிம்மாசன, கட்க, சூலம் இவைகளுடனே சுவர்ன பிரதிமை செய்து, சக்திக்குத் தகுந்த தக்ஷிணை சகிதமாக பிராம்மணனுக்கு தானம்

கொடுக்கவேண்டும். அப்படி செய்த பிற்பாடு சமஸ்த தோஷங்களும் நிவர்த்தியாகி சர்வ காமியார்த்த சித்தியாகும்.

## ராகு தெசையில் ராகு புக்தி பிரீதியாக நாக தானம்

இராகு தெசையில் சுய புக்தியில் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடியிருந்தாலும், மாரக ஸ்தானங்களிலிருந்தாலும், அந்த காலத்தில் ஹிருதய சம்பந்தமான ரோகமும், மூர்ச்சையாகி விழுகிறது, பேய், பிசாசு பிடித்தல், சர்வ காரியங்களிலும் சர்வ காலங்களிலும் ராகுவினுல் விக்னம். சூத்திர ஸ்த்ரீ அல்லது விதவைகளால் ஹதம், பிரம்ம துவேஷம் இவைகள் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு நாக தானம் செய்து தூர்க்கா தானமும் செய்தால் ராகு பிரீதியாகும். இவை செய்யும் விதமாவது சந்திர தெசையில் செவ்வாய் புக்தியில் சொன்ன விதிப்படி தானத்தை அவசியம் செய்ய வேண்டியது.

## இராகு தெசையில் குரு புக்திக்கு சாந்தி தானம்

இராகு தெசையில் குரு புக்தியில் குரு 6, 8, 12-மிடங்களிலும், அல்லது நீசருடன் கூடியும், குரூர ராசிகளிலும், பாப கிரகங்களுடன் சேர்ந்துமிருக்கிற காலத்தில் புத்தி வைகல்யமும், தாரா, புத்திர பீடையும், ஹிருதய சம்மந்தமான ரோக பாதையும், பைத்தியம் பிடித்தல், உயர்ந்த ஸதானங்களிலிருந்து கீழ் விழுதல் இவைகள் சம்பவிக்கும். இந்த தோஷங்கள் பரிகாரமாவதற்கு சதருத்திர ஜெபம் செய்ய வேணும். சொர்ன தானமும் கொடுத்த பிறகு அபமிருத்யு பயம் நிவாரணமாகும். சூரிய தெசையில் குரு புக்திக்குச் செ-ன்ன விதிப்படி தானம் செய்ய வேண்டியது.

## இராகு தெசையில் சனி புக்தி சனி பிரீதிகர செம்மறியாடு தானம்

இராகு தெசையில் சனி புக்தியில் சனி நீசனுக இருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், மாரகாளுடன் கூடியிருந்தாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும் கலகமும், ராஜ துவேஷமும், பந்து நாசமும், சமான ஜன சோகமும், நாற்கால் ஜீவராசிகள் நஷ்டமும், பிரமேகம், சூலே வியாதி க்ஷயம், குன்மம், துரோகம் முதலான ரோக பாதைகள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு விஷ்ணு சஹஸ்ர ஜெபம் செய்யவேணும்.

சாகதானம் செய்த பிறகு சந்தேகமில்லாமல் சாந்தியாகும். சூரிய தெசையில் சனி புக்தியில் சொன்னபடிக்கு சாகதான விதியை அனுஷ்டிக்க வேண்டியது.

## இராகு தெசையில் புத புக்தி புத பிரீதியாக ஸ்ரீமூர்த்தி தானம்

இராகு தெசையில் புக்தினுதனுகிய புதன் நீச ராசியிலிருந்தாலும், அஸ்தங்கதனுக இருந்தாலும், சூரியன், ராகு, சனி, செவ்வாய் இவர்களுடன் கூடி துஷ்ட ராசிகளிலிருந்தாலும் அந்த காலத்தில் மிருத்யு பயமும், ஹிம்சையும், தரித்திர பீடையும் உண்டாகும். அந்த தோஷம் பரிகாரமாவதற்கு விஷ்ணு சகஸ்ர நாம ஜெபம் செய்யவேணும். ஸ்ரீமூர்த்தி தானம் செய்த பிறகு சந்தேகமில்லாமல் சாந்தியாகும்.

ஸ்ரீ மூர்த்தி என்பது சாளக்கிராமம், இது தானம் செய்யும் விதமாவது :—

எந்த தேசத்தில் சாளக்கிராம மிருக்குமோ அதன் சமீபமாக வாசம் செய்கிற ஜனங்களுக்கு கொஞ்சமாகிலும் பாப மணுகாது. சாளக் கிராமத்தின் தீர்த்தமானது எவன் சரீரத்தின் பேரில் படுமோ ஓ ராஜா அந்த மனுஷ்யன் கோஹத்தி செய்தவனுகவோ, அல்லது சோரனுகவோ, சமஸ்த பாபங்களையும் செய்தவனுக இருந்தாலும், இந்த பாபங்களிலிருந்து விடுவிக்கப் பட்டவனுகிரான. புனர் ஜன்மமில்லாததும், பாபிகளுக்கு எட்டாததும், யோகீஸ்வரர்களுக்கும் கூட துல்லபமானதுமான விஷ்ணு லோகத்தை சேருவன. இந்த விஷயத்தில் எவ்வளவு மாத்திரமும் சந்தேகமில்லை அல்லாமலும் சக்கரத்துடன் கூடின சாளக்கிராம சிலையானது எவன் வீட்டிலிருக்குமோ அந்த வீடு வைகுண்டமென்று வித்வான்கள் சொல்லுவார்கள். சாளக்கிராம சிலை, துளசி செடி, கமல வனம் எவ்விடத்திலிருக்குமோ அவ்விடத்தில் விஷ்ணு சான்னித்தியமாக இருக்கும். அது அல்லாமலும் சமஸ்த தீர்த்தமும் அவ்விடத்தில் வசிக்கும் தவிற ஓ மகாராஜாவே நதி தீரங்களிலாவது, அல்லது தன் சொந்த வீட்டிலாவது, இந்த மகிமையுள்ள சாளக் கிராம தானம் செய்ய வேணுமென்று எவனுக்கு இச்சையுண்டாகிறதோ அவன் அந்த புண்ய பிரதேசத்தில் பூமியை ஜலத்துடன் கூடின கோமயத்தினுல் மெழுகி பஞ்சவர்னமுள்ள மாவினுல், தாமரை கமலம்போல் எழுதி அதன் பேரில் மரத்தினுல் செய்த மணையாவது, தாமிர மணையாவது போட்டு, புது பட்டு வஸ்திரத்தை பரப்பிபோட்டு அதன்மீது மஸ்ச்சிய, கூர்மாதி, சக்கிரமுள்ள சுபமான கேசவாதி 24-ரூப

முள்ள அத்யந்த மனோஹரமான சக்ரசுத்தி, கல்சுத்தி வர்னசுத்தி யுள்ள இந்த சாளக்கிராம மூர்த்தியை வைத்து யதாவிதியாக தியானுதி சோட சோபசார பூஜைகளால் பூஜிக்க வேணும். பாபத்தை ஹரிக்கும்படியான ராமாஷ்டோத்ர நாமங்களினால் நரசிம்மாஷ்டோத்திர நாமங்களினாலாவது, கிருஷ்ணஷ்டோத்திர நாமங்களினாலாவது சிரத்தை பக்தியோடு நன்றாக பூஜை செய்து, தூபதீப நைவேத்தியங்களால் சந்தோஷிக்க செய்து, முன்னால் சொல்லியிருக்கிற சாளக்கிராம தான மந்திரத்தினால் சதாசாரியான பிராமணோத்தமருக்கு உதக பூர்வகமாக தானம் கொடுக்க வேணும். தன் சக்திக்கு அனுகுணமாக நிஷ்கமாவது, நிஷ்க்கார்த்தம் அதில் பாதியாவது தக்ஷிணை கொடுக்க வேணும். நிஷ்கம் என்பது முக்கால் துலாம். இந்தப் பிறகாரமாக இந்த சாளக்கிராமத்தை எந்த மனிதன் அயன காலங்களிலாவது, விஷுவத் காலங்களிலாவது, கிரஹணம் பர்வங்களிலாவது, துவாதசி, சங்கிராந்திகளிலாவது, விவாஹாதி கர்மங்களிலாவது, யக்ஞோச்சவங்களிலாவது, கிரக பிரவேசம், கிராம பிரவேசங்களிலாவது கொடுப்பனோ அந்த மனிதன் பிரம்மஹத்யாதி தோஷங்களிலிருந்தும் அதிபாதகம், அனுபாதகம், உபபாதகம், ஸங்கிலீகரணம், முலிநீகரணம், அபாத்ரீகரணம், ஜாதிப் பிரம்சம், பிரகீர்ன்னம் இவை முதலான பாபங்களிலிருந்து பரிகரிக்சப்பட்டவனாய் இகலோகத்தில் இருக்கப்பட்ட சமஸ்த போக பாக்யங்களையும், பத்திர, பௌத்திரர்களுடன் அனுபவித்து, தேஹாந்தத்தில் சூரிய காந்தியோடும், திவ்விய விமான ரூடனாகவும், திவ்விய மால்யாம்பரதரனாகவும், திவ்விய கெந்தானுலேபனனாகவும், திவ்விய சாமரங்களால் வீசுகிற திவ்விய ஸ்த்ரீ சமூகத்தோடு கூடினவனும், தேவ கெந்தர்வ சித்தர்களால் எப்போதும் துதித்து கொண்டாடப்பட்ட விஷ்ணு புரத்தை சேர்ந்து அவ்விடத்தில் சிலகாலம் வசிக்கப்பட்டவனாகி அங்கே தேவதா சம்மந்தமான போக பாக்யங்களையும், இஷ்டானுசாரமாக அனுபவித்து கர்மம் க்ஷயமான பிறகு ஹத சத்துருவான ஸப்தத்வீபாதிபதியான ராஜாவாக ஜனிப்பான்.

## இராகு தெசையில் கேது புக்தி கேது பிரீதியாக

### நாக தானம்

இராகு தெசையில் கேது புக்தியில் புத்தி விகாரம், ராஜ பாதையும், வாத ஜுர சம்பவமும், மாரி, பிடாரி முதலிய க்ஷுத்திர தேவதைகளாலும், சூன்யாதி ரோகபயமும், தாரா புத்திராதி பீடையும், இவ்வாறு பலன்கள் துஷ்டஸ்தான பாப

கிரக சம்பந்தாதி பார்வைகளில் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சந்திர தெசையில் செவ்வாய் புக்தியில் சொன்னபடிக்கு நாக தானம் செய்யவும்.

## இராகு தெசையில் சுக்கிர புக்தி சுக்கிர பிரீதி துர்க்கா தானம்

இராகு தெசையில் சுக்கிர புக்தியில் சுக்கிரன் 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும், பாபர்களால் பார்வையாவது, சம்பந்தமாவது பெற்றிருந்தாலும், அந்த காலத்தில் வயிற்று வலி, தலை நோய், நேத்ர மந்தம், மனோ விஸனம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கா தானம் செய்ய சாந்தியாகும். இந்த சாந்தி செய்யும் விதம் சந்திர தெசையில் குரு புக்திக்கு சொன்ன சாந்தி விதிப்படி சாந்தி செய்தால் தோஷ நிவர்த்தியாகி ஆயுரா ரோக்ய ஐஸ்வரிய விருத்தியாகும்.

## இராகு தெசையில் சூரிய புக்தி சூரிய பிரீதியாக திலபத்ம தானம்

இராகு தெசையில் சூரிய புக்தி நடக்கிற காலத்தில் சூரியன் 3, 6, 11-மிடத்திற்கு அதிபதிகளுடன் கூடினாலும், மாரகாதிபதிகளோடே கூடியிருக்கவும், பார்க்கவுமிருந்தாலும் அந்த புக்தியில் பிதுருவுக்கு கெண்டமும், திரவிய நாசமும், பசு மாடுகள் நஷ்டமும், தேகத்தில் ரோக பாதையும், இஷ்ட ஜன நாசனமும் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரார்த்தனைகள் செய்யவேணும். திலபத்ம தானமும் கொடுப்பதால் சகலவித அரிஷ்டங்களும் நாசமாகும்.

## தில பத்ம தானம் செய்யும் விதம்

சூரிய பிரீதியாக தில பத்ம தானம் கொடுக்கிற புருஷன் கிரஹண புண்ய காலங்களில் தன் வீட்டில் கோமயத்தினால் மெழுகி ரங்கவல்லியை நேர்த்தியாக இட்டு அந்த இடத்தில் எள்ளை பலாசனையாகப் பரப்பி அதன் பேரில் 8 தளமுள்ள தான பத்மத்தை எழுதி அதன்மீது எள் நிறைந்த தாமிர பாத்திரத்தை வைத்து அந்த எள் நிறைந்த பாத்திரத்திற்குள் 1 துலாம் நிறையுள்ள தான பொன்னால் செய்யப்பட்ட 8 தளமுள்ள பத்மத்தை வைத்து குங்குமம் வைத்த இரண்டு வஸ்திரத்தை தரித்து தானம் கொடுக்கிற எஜமானன் தான சங்கல்பம் செய்து கொண்டு

எனக்கு இந்த ஜன்மத்திலும், ஜன்மாந்திரத்திலும் சம்பவித்த குரு, பத்தினி கமன தோஷத்தினுலும், பசு யோனியில் ரேதஸை விட்டவனுடைய தோஷத்திற்கும், குருவுக்கு சமர்ப்பித்த திரவியத்தை அபகரித்த தோஷத்தாலேயும் உண்டாகிய மூத்திர கிருச்சாதி ரோகங்களையும், சகலவித பாபங்களையும் நிவர்த்திக்கும் பொருட்டும், சரீரததில் இந்த காலத்தில் உண்டாயிருக்கிற நானுவித ரோகபாதைகளுந் துலைந்து திட சரீரமாவதற்காகவும், பூரணுயுளைப் பெறும் பொருட்டும், கோரின கோரிக்கைகள் சித்திக்கும்படியாயும், சூரிய நாராயண பிரீதியாக தில பத்ம தானம் செய்கிறதற்கு சங்கல்பம் செய்து கொள்ள வேண்டியது.

அந்த பத்மத்தில் சூரிய நாராயணரை ஆவாகனம் செய்து சூரியாய நம: என்ற மந்திராதிகளால் ரக்த கந்தாக்ஷத புஷ்பங்களால் பூஜித்து, பரமான்ன நைவேத்தியங்களுடனே சோடசோபசார பூஜைகள் செய்து அஹிதாக்னியை பிராம்மணரிட வஸ்திராதிகளால் அப்பியர்ச்சித்து

## மந்திரம்

அஸ்மை பிராம்மணுய, ஸ்ரீஸூரிய நாராணஸ்வரூபாய ஸ்ரீஸூரிய நாராயண பிரீத்யர்த்தம் பூபாகோ பரிகோமயா நுலேபித ரங்கவல்யாதி ரசித துரோணபரிமித திலதிர்மிதம் தில பூரித தாம்பரபாத்ரோ பரிஸ்கித பலபரிமான ஸ்வர்ன்ன நிர்ம்மித வஸ்த்திர வேஷ்டித ஸ்வர்ச்சிதம் பத்மாதிஷ்டிதம் சர்வ லக்ஷண லக்ஷிதம் ஸ்வர்ச்சிதம் திலபத்மம் பூர்வோக்த பலகாமயமான.

மேல் விவரித்து சொன்ன தான மந்திரத்தை சொல்லி ஸ்ரீ சூரிய நாராயண ஸ்வரூபரான பிராமணரை பூமியை கோமயத்தினுல் மெழுகி ரங்கவல்லி யிழைத்து மூன்று மரக்கால் எள் நிறைந்த தாமிர பாத்திரத்தின் பேரில் 3 துலாம் எடையுள்ள பொன்னுல் செய்து வஸ்திரங்களாலங்கரித்து பக்தியோடும் பூஜிக்கப்பட்டு சர்வ லக்ஷணங்களோடுங் கூடின தில பத்மத்தை பூர்வோக்த பலன் சித்தியாகும் பொருட்டு தான பத்மத்திலே 3-ல் 1-பாகமான தக்ஷிணைச் சகிதமாக பிராமணனுக்கு தானம் கொடுக்க வேணும்.

## இராகு தெசையில் சந்திர புக்தி சந்திர பிரீதியாக வன்னி தானம்

இராகு தெசையில் சந்திர புக்தி நடக்கிற காலத்தில் சந்திரன் நீச ராசியிலிருந்தாலும், 6, 8-ராசிகளிலிருந்தாலும், குரூர

கிரகங்களுடன் கூடியிருந்தாலும், மாரகாதிபர் சம்பந்தமா யிருந்தாலும் அந்த காலத்தில் அதிசாராதி பேதியும், க்ஷய ரோகமும் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு அக்னி பிரதிமை தானம் செய்ய வேணும்.

அக்கினி பிரதிமை தானம் செய்யவேணுமென்கிற புருஷன் அயனாதி புண்ய காலங்களிலும், கிரகண புண்ய காலங்களிலும் தேவாலயாதி, புண்ய தேசங்களில் சுத்தமான யிடத்தில் சிகப்பு வஸ்திரத்தை பரப்பி அதற்கொத்தபடி மகா வைபவமான பொன்னால் தீப பிரதிமை செய்து வைத்து சிகப்பு வஸ்திரத்தை தரித்து தான சங்கற்பம் செய்ய வேண்டும்.

சங்கல்பம் செய்த பிறகு பிரம்ம வித்யாபாரங்கதனான பிராம்மணனுக்கு வஸ்த்திரங்களும், கடுக்கனும், மோதிர முதலான ஆபரணங்களும் கொடுத்து பிறகு பக்தியாக பூஜித்து பூபாகத்தில் வைத்திருக்கிற சிகப்பு வஸ்திரத்தை கொடுத்து, பொன்னால் லக்ஷணமாகச் செய்து பிரகாசிக்கிறதும், பூஜிக்கப்பட்டதுமான அக்னி பிரதிமையை பூர்வோக்த பிரகாரமாக பலன்கள் சித்தியாகும் பொருட்டும், யதாசக்தி தக்ஷிணையுடன் பிராம்மணருக்கு தானம் கொடுக்க வேணும்.

## இராகு தெசையில் செவ்வாய் புக்தி செவ்வாய் பிரீதியாக நாக தானம்

இராகு தெசையில் செவ்வாய் புக்தியில் செவ்வாய் 6, 8, 12-மிடங்களில் நீசராசி, மாரகஸ்த்தான மிவைகளிலிருந்தாலும், பாப சம்பந்தம் பெற்றிருந்தாலும் இந்த புக்தியில் ராஜ துவேஷம், அதிக பயம், ரண பாதை, சோர பயம், அக்னி வாதை, வைசூரிகாதி ஜ்வர சம்பந்தங்கள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமணிய ஜெபம் செய்து, நாக தானமும் கொடுத்த பிற்பாடு சகலவித அரிஷ்ட தோஷங்கள் நிவர்த்தியாகும். சந்திர தெசையில் செவ்வாய் புக்திக்கு சொன்ன சாந்தி வித பிரகாரம் செய்யவேண்டியது.

## குரு மகா தெசையில் குரு பிரீதியாக சுவர்ன பத்ம தானம்

தானங்கள் எல்லாவற்றிலும் முக்யமாகியதும் உத்தமமானதுமாக இருக்கிற சுவர்ன பத்மதான விதியை சொல்லுகிறது. பிரகஸ்பதி துர்ஸ்த்தானங்களிலிருந்தால் ராஜ பயம், சத்துரு

பீடையும், மிருத்யு பயமும், கார்யாரம்பத்தில் விக்னமும், காரியங்களில் நஷ்டமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுவர்ன பத்ம தானம் செய்தால் சௌபாக்ய விருத்தி யுண்டாகும். ஜனன நக்ஷத்திரத்திலாவது, கிரகயோகத்திலாவது, குருவாரத்திலாகிலும், தேவாலயத்திலாகிலும், தன் வீட்டிலாகிலும், கோமயத்தினால் சுத்தி செய்திருக்கிற சுத்தமான இடத்தில் 3-மரக்கால் நெல் ராசியாகக் கொட்டி அவ்விடத்தில் பொன்னால் செய்த பத்மத்தை நாலு ரூபா எடையுள்ளதாயும், 8-மூலைகளுள்ளதாக கர்னிகாதி பத்ம விசேஷத்துடன் கூடிய பீத வஸ்திரத்தை தரிப்பித்து, தியானித்து யதாவிதியாக பூஜிக்கவேணும். ஏவாபித்ரேதி மந்திரத்தினால் பூஜித்து பீத கெந்தாக்ஷத புஷ்பங்களை சமர்ப்பித்து நாம பூஜை செய்ய வேணும். இதன் பிறகு

## மந்திர விதி

தேவாசார்ய: வாக்பதி: கீர்வாணமதிகாயக: ருக்வேதாப்தி: சிக்ருமாத்ய: குருஹ ஜீவ: அங்கிரஸஹ என்று இந்த பிரகாரம் அஷ்ட நாமாக்ஷர பூஜை செய்து தூபதீபாதி நைவேத்யத்தை சமர்ப்பித்து அதன் பிறகு பிராமணனை பூஜித்து பீத வஸ்திரத்தை கொடுத்து ஜல பூர்வகமாக பத்மத்தை தானம் செய்யும் பொருட்டு தான மந்திரத்தை சொல்லி சகலவித காமியார்த்தங்கள் எப்போதும் உண்டாகும் பொருட்டும், தானியத்தின் பேரிலுள்ள பொன் பத்மத்தை யதாசக்தி தக்ஷிணை சகிதமாக விதிப்படி பிராமணனுக்கு தானம் கொடுக்கும் பக்ஷத்தில் சகல பாபங்களும் தொலைந்து, சகலவித பீடையும் நிவர்த்தியாகி, அதிக பிரதாபியாய், புத்தியும், நீதியும், உண்டாகி மனிதன் விசேஷ சுகங்களை அனுபவிப்பான்.

## குரு தெசையில் குரு சுய புக்தி குரு பிரீதியாக சுவர்ன பிரதிமை தானம்

குரு தெசையில் ஸ்வய புக்தியில் குரு நீசமாயிருந்தாலும், அஸ்தங்கதனாக யிருந்தாலும், 2, 7, மிடங்களிலிருந்தாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், பாப கிரக சம்பந்தம் உண்டாயிருந்தாலும், அந்த புக்தியில் ஜ்வர பயமும், பாண்டு ரோகாதி பீடிதமும, தன நாசனமும், மான ஹானியும், அபமிருத்யு பயமும் உண்டாகும். அந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ஸ்ரீ ருத்திர ஜெபம் செய்து பொன் பிரதிமையை தானம் செய்த பிறகு சாந்தியாகும்.

## சுவர்ன பிரதிமை தான விதி

ஜென்ம நக்ஷத்திரத்திலாகிலும், கிரக யோகத்திலாகிலும் அல்லது விசேஷமாக குரு வாரத்திலாகிலும், தேவாலய மல்லது, தன் வீட்டில் கோமயத்தினுல் மெழுகி சுத்தியான இடத்தில் 1-மரக்கால் கடலே தானியத்தை கொட்டி, பீத வஸ்திரமும், யதா சக்தி தக்ஷிணே சகிதமாக, சர்வ லக்ஷணமுள்ள சுவர்ண பிரகஸ் பதி பிரதிமையை தானம் கொடுக்கும் நிமித்யம் பிராமண பிரதிஷ் டை செய்து யதாவிதியாக பூஜை செய்ய வேணும்.

பிறகு மந்திரோக்தப் பிரகாரம் தியானித்து பீத கெந்தா க்ஷத புஷ்பங்களால் அலங்கரித்து பூஜித்து நைவேத்தியம் செய்து பிராமணனுக்கு தானம் கொடுக்கும் பொருட்டு மந்திரம் ஜெபிக் கவும். ஜெபித்த பிறகு யதாசக்தி தக்ஷிணே சகிதமாக வித்யுக்த பிரகாரமாக தானம செய்யும் பக்ஷத்தில் குரு தோஷம் நிவர்த்தி யாகி புத்திர பௌத்திரர்கள் விருத்தி யுண்டாகி, ரூபவந்தனுக வும், நல்ல பாக்யவானும், கீர்த்திவானுமாய் 100-வயதுடையவ னுகவும் வாழ்வன் என்பது.

## குரு தெசையில் சனி புக்தியில் சனி பிரீதி கிருஷ்ண மிருக தானம்

குரு தெசையில் சனி புக்தி காலத்தில் சனி நீசமாயிருந்தா லும், சத்துரு வீட்டிலிருந்தாலும், 6, 8, 12-மிடங்களி லிருந் தாலும், மாரக லக்ஷணங்களுடன் கூடிய கிரக சம்பந்தங்கள் உண் டானுலும், அந்த காலத்தில் வாத ரோகமும், வயிற்றில் வியாதி யும், ஸ்தான நாசமும், மான பங்கமும், அபமிருத்யு பயமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு கருப்பு மிரு கத்தை தானம் செய்ய வேணும், மிருத்யு சூத்திரம் ஜெபித்தால் அபமிருத்யு நிவாரணமாகும்.

## கிருஷ்ண மிருக தான விதி

கிருஷ்ண மிருகம் கொடுக்க இச்சையுள்ள புருஷன் அயனுதி புண்ய காலங்களிலும், கிரக உபத்திரவ காலங்களிலும், தேவாலய புண்ய தேசங்களிலாவது அல்லது தன் வீட்டிலாகிலும், 10-பல மாவது, அல்லது 5-பலமாவது, குறைந்தது $2\frac{1}{2}$ பலமாவது கன முள்ள பிருஷ்ட பாகம் தாமிரத்தினுல் செய்து வெள்ளி கொம் புள்ளதான பொன்னுல் கிருஷ்ண மிருகத்தை 3-சோடு அரிசியை ராசியாக கொட்டி அதன் பேரில் கிழக்கு முகமாக நிறுத்தி வஸ்திராலங்காரம் செய்து, அதனிட 4 பாதங்களுக்கும் பால்

தயிர் நெய் தேன் நான்கு வெண்கல பாத்திரத்தில் தனித்தனியே நிறைத்து 4-பாதத்திற்கும் வைத்து தான சங்கல்பம் செய்ய வேணும். சங்கல்பத்தின் முடிவில் இந்த ஜன்மத்திலும், ஜன்மாந்திரங்களிலும் சம்பவித்திருக்கிற தேவ திரவியங்களும், ஸ்வாமி துரோஹ முதலிய பாபங்கள் செய்த தோஷங்களினால் ஏற்பட்ட வாதாதி தோஷங்களும் சகலவித பாபங்களும், சகலாரிஷ்டங்களும் நிவர்த்தியாகி சுகர்மாக்களை அடையும் பொருட்டாக ஸ்ரீ மஹாவிஷ்ணு பிரீதியாக போதாயனோக்த பிரகாரமாக கிருஷ்ண மிருக தானம் கொடுப்பதற்காக சங்கல்பம் செய்து கொள்ள வேணும். ஓம் கிருஷ்ண மிருகாய நம: முதலான மந்திரங்களினால் கெந்த புஷ்பாதி அக்ஷதாதிகளை சமர்ப்பித்து சோட சோபசாரம் செய்து அந்த மிருகத்திற்கு மேற்கு பக்கத்தில் அக்னி பிரதிஷ்டையைச் செய்து ஆவாகனாதி பூஜைகளைச் செய்து சமித்து வகைகளால் நெய்யினால் ஓமம்செய்து அதில் 108 வாயு மந்திரத்தினால் ஆகுதி செய்து ஸ்விஷ்டகிருது ஹோம சேஷங்களை சமாப்தி செய்து, நல்ல சீலமுடையவராயும், இளமை வயதுள்ளவனாகவும், ரூபவந்தனாகவும், வித்வாமிசனாகவும், விநயசம்பன்னனாகவு மிருக்கிற பிராமணருக்கு வஸ்திரங்களை கொடுத்து பூஜித்து கிருஷ்ண மிருக தானம் கொடுக்கும் பொருட்டு தான மந்திரத்தை சொல்லி அந்தச் சரவிபூதானும் வாதவியாதிவினாசய என்ற தான மந்திரத்தை சொல்லி கோமயத்தினால் மெழுகி இடத்தில் ரங்க வல்லிகளாலங்கரித்த இடத்தில் 3-மரக்கால் அரிசிக்கு வயலின் மேல் இருக்கிற தாமிர பிருதுள்ளதும், வெள்ளி கொம்புள்ளதும், வஸ்திரங்களினா லங்கரிக்கப்பட்டதும், பூஜிக்கப்பட்டதும், வாயு தேவ பிரீதிகரமானதுமான கிருஷ்ண மிருகத்தை பூர்வோக்த பலன்களை அடையும்படிக்கு யதாசக்தி தக்ஷிணையுடனே பிராமணனுக்கு தானம் செய்யவேணும்.

## குரு தெசையில் புத புக்தி புத பிரீதியாக மகர தானம்

குரு தெசையில் புத புக்தியில் புதன் 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், நீசனாகி யிருந்தாலும், பலயீனனாக இருந்தாலும், அந்த புக்தியில் சரீரசாட்டிய முதலான துக்கங்களுண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மகரபிரதிமை தானம் செய்ய வேணும். இந்த தானம் கொடுக்கும் பொருட்டு இச்சையுள்ள புருஷன் அயனாதி புண்ய காலங்களிலும், உபத்திரவ காலங்களிலும், தேவாலயாதி புண்ய பிரதேசத்தில் மெழுகி கோலமிட்ட இடத்தில் ஜல பாத்திரத்தை வைத்து அதில் 2, 3-பலம் எடையில் யதாசக்தியை அனுசரித்து வெள்ளியால் மகரபிரதிமையை வைத்து அதற்கு வால் பாகத்தில் ரத்தின மிழைத்ததும், நேத்திர பாகங்

களில் பொன்னை பதிய வைத்ததும், வெள்ளியால் முதுகும், வெள்ளியினால் நாக்கும் இவைகளுள்ளதாக செய்து முன் இரண்டு பாதங்களுக்கும் முன் பாகத்தில் இரண்டு தாமிர பாத்திரத்தில் நெய் நிறைப்பி வைத்து இரண்டு நீல வஸ்த்திரத்தை தரிப்பித்து, தானம் கொடுக்கும் எஜமானன் தான் சங்கல்பம் செய்துகொள்ள வேணும்.

அதன் பிறகு பூஜை ஹோமாதிகளைச் செய்து வருண தேவதா பிரீத்யார்த்தம் மகர பிரதிமைக்கு நீல கெந்த புஷ்பாதிகளை சமர்ப்பித்து, பூஜா ஸ்தானத்திற்கு மேற்கு பாகத்தில் அக்னி பிரதிஷ்டையைச் செய்து இமம்மே வருணோதி என்ற மந்திரங்களால் ஆஜ்ய-ஹோமம் செய்து தத்வாயாமீதி மந்திரங்களினால் சருஹோமம் செய்து, அஹேடமானோ என்ற மந்திரத்தினால் சமித்தினால் ஹோமம் செய்து இதுகளை எல்லாம் தனித்தனி 108 ஹோமங்கள் செய்து ஸ்விஷ்டகிருது முதலிய ஹோமங்களை சம்பூர்ணம் செய்து, அதன் பிறகு தானம் கொடுக்கும் கர்த்தாவானவன் அந்த மகர பிரதிமையை பூஜித்து அதன் பிறகு ஆசாரியருக்கு வஸ்திரங்கள், மோதிரங்கள், கடக குண்டலங்களைக் கொடுத்து தான மந்திரத்தின்படி தியாணித்து பிராமணருக்கு அலங்கார சகிதமாக மகர பிரதிமையை நெய்யினால் நிறைந்த தாமிர பாத்திரத்தினோடு தானம் கொடுக்க வேணும். பூர்வோக்த பலன்கள் சித்தி பெறுவதற்கும் தான பலன்களை அடையும் பொருட்டும், யதாசக்தி தக்ஷிணையும் கொடுக்க வேணும்.

## குரு தெசையில் கேது புக்தி கேது பிரீதியாக மேஷ தானம்

குரு தெசையில் கேது புக்தியில் கேது பாபிகளுடன் கூடியிருந்தாலும், அல்லது பார்வையைப் பெற்றாலும்; தோஷ ஸ்தானங்களி லிருந்தாலும் அந்த புக்தியில் ராஜ கலகமும், தன நாசமும், புத்தி விசாரமும், ரோக பீடையும், குக்ஷி பாதையும், சூல ரோகம், பாண்டு, விஷ கெண்டம், பூர்வார்ஜித கர்ம பலன்களை அனுசரித்து நடக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சிவ லிங்கார்ச்சனைகள் செய்யவேணும். மேஷ தானமும் செய்த பிற்பாடு சந்தேகமில்லாமல் சாந்தியாகும்.

### பிரத்தியக்ஷ மேஷ தான விதி

இந்த தானம் செய்ய ஆசையுள்ளவன் அயனாதி புண்ய காலங்களில் பிரதேசங்களிலாவது, தேவாலயங்களிலாவது பூமியை சுத்தி

செய்து, மெழுகி ரங்கவல்லி முதலியதால் அலங்கரித்து, அதன் பேரில் சர்வாங்கங்களும் உடையதானதும், இளம் வயசுடையதாயுமான ஆட்டை கிழக்கு முகமாக நிறுத்தி அதற்கு பொன்னுல் கொம்பிற்குகுப்பியும், வெள்ளிசிலங்கும், முத்துக்களால் வாலுக்கு சிங்காரித்தும், பட்டு வஸ்திரத்தை போர்த்து, வேண்டிய சாமக் கிரியைகளை சம்பாதித்துக்கொண்டு, சங்கல்பம் செய்து கொள்ள வேணும். சங்கல்ப முடிவில் பூர்வ ஜன்மத்திலும், இந்த ஜன்மத்திலும், ஜன்மாந்திர பிரபுருதிக்ஷண பரியந்தம், முன் ஜன்மத்தில் செய்ததாகிய பிராமணனிட பொருளை அபகரித்தது முதலாகிய தோஷங்கள் நிவர்த்தியாவதற்கும், சரீரத்தில் ஆயுராரோக்ய சித்தி உண்டாகும் பொருட்டும், உமா மஹேஸ்வர பிரீதியாக மேஷ தானம் கொடுப்பதற்கு சங்கல்பித்துக் கொண்டு சாக தானவிதி பிரகாரமாக பூஜாதி ஹோமங்கள் செய்யவேணும்.

சாகதான மந்திரப்படிக்கு மந்திரங்களை சொல்லி, அலங்கரித்திருக்கிற பூமியில் 3-மரக்கால் உளுந்தை ராசியாகக் கொட்டி, அதன்பேரில் முன் சிங்காரித்து இருக்கிற ஆட்டை அக்னி தேவதை பிரீதியாக பூர்வோக்த பல சித்தியாகும் பொருட்டு யதாசக்தி தக்ஷிணையும் சமர்ப்பித்து, தானம் கொடுக்க வேணும். அதன் பிறகு சிவலிங்க தானம் செய்து, பிராமணருக்கு சந்தர்ப்பணை செய்யவேணும்.

## குரு தெசையில் சுக்கிர புக்தி சுக்கிர பிரீதியாக லக்ஷ்மி நாராயண தானம்

குரு தெசையில் சுக்கிர புக்தி சுக்கிரன் நீசனுனுலும், அஸ்தங்கதனுனுலும் பருஜயத்தை அடைந்திருந்தாலும், பாபிகளுடன் கூடினுலும், அல்லது 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், இந்த சுக்கிர புக்தி நடக்கிற காலத்தில் பசு நாசமும், ராஜ கோபமும், எத்தன காரிய பங்கமும், ரக்தஸ்ராவ பீடையும், பிராண ஹாணி, அபமிருத்யு பயமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு யதா விதியாக லக்ஷ்மி நாராயண தானம் செய்த பிறகு சாந்தியாகும். இந்த தானம் செய்யும் விதம் :—சந்திர தெசையில் புத புக்திக்குச் சொன்ன சாந்தி விதிப்படி தானம் செய்யவேணும்.

## குரு தெசையில் சூரிய புக்தி சூரிய பிரீதியாக சாக தானம்

குரு தெசையில் சூரிய புக்தியில் சூரியன் 6, 8, 12-ம் இடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், சத்துரு வீட்டி

லிருந்தாலும், இந்த புக்தியில் சத்துரு பீடிதம், பங்காளி வழக்கு, பைத்திய ரோக சம்பவமும், மாதா, பிதுர் மரணமும், தன நாசனமும் இவைகளெல்லாம் நிச்சயமாக நடக்கும். அன்றியும் சுரபாதையும், அதிசார பேதி, கட்டி வியாதி, க்ஷய ரோகமும் உண்டாகும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரார்த்தனை செய்யவேணும். கருப்பு நிறமான ஆடு தானம் செய்த பிறகு ஆயுரா ரோக்யாபிவிருத்தி யுண்டாகும். இந்த தான விதி சூரிய தெசை சனி புக்திக்குச் சொன்ன சாந்தி விதிப்படிக்கு தானம் கொடுக்க வேண்டியது.

## குரு தெசையில் சந்திர புக்தி சந்திர பிரீதியாக சாக தானம்

குரு தெசையில் சந்திர புக்தியில் சந்திரன் 6, 8, 12-ம் இடங்களிலிருந்தாலும், க்ஷீணனுக யிருந்தாலும், பாபிகளுடன் கூடினுலும், பலயீனனுக யிருந்தாலும், இந்த புக்தியில் ஜலகெண்டமும், சீதளசுர பீடையும், மனோ துக்கமும், மான பங்கமும், அபமிருத்யு பயமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சாக தானம் சூரிய தெசையில் சனி புக்தியில் சொன்ன விதிப்படி செய்யவும்.

## குரு தெசையில் செவ்வாய் புக்தி செவ்வாய் பிரீதியாக சுவர்ன தானம்

குரு தெசையில் செவ்வாய் புக்தியில் செவ்வாய் 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும், நீசமானுலும், 2, 7-மிடத்ததிபரோடு கூடினுலும், இந்த புக்தியில் கிராணி ரோகமும், பைத்திய விகாரமும், குன்மாதி ரோகமும், மேல் ஸ்தானங்களிலிருந்து கீழே விழுதல், ரண பாதை, ருண பாதை, பூமியினுல் வழக்கு, சகோதர பீடை இவைகளுண்டாகும்படியான மிருத்யு பயமும் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுவர்ன தானம் செய்ய வேணும். இவை செய்கிற விதம் சூரிய தெசையில் குரு புக்திக்குச் சொன்ன தான விதிப்படி சாந்தி செய்ய வேண்டியது.

## குரு தெசையில் ராகு புக்தி ராகு பிரீதியாக மஹிஷ தானம்

குரு தெசையில் ராகு புக்தியில் ராகு 2-க்கு உடையவனோடு கூடினுலும், கோணுதிபதிகளுடன் கூடினுலும், நீச க்ஷேத்திரத்தி

லிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், 3, 6, 11, 12-மிடங்களி லிருந்தாலும், இந்த புக்தியில் க்ஷேத்திர நாசமும், கலகமும், ராஜ நிஷ்டூரமும், பிசாசு முதலியவற்றால் அபமிருத்யுவும் உண்டாகும். மகிஷ தானம் கொடுத்தால் இந்த தோஷம் நிவர்த்தியாகும்.

## தான விதி

உபத்திரவ காலங்களிலும், அமாவாசை, வைதுருதி, வியதீ பாதம், அஷ்டமி, சதுர்த்தசி இந்த நாள்களிலும், சொந்த வீட்டில் சுத்தமான இடத்தில் எருமை தானம் செய்ய வேண்டும். பூர்ண மான அவயமுள்ளதாய், அஷ்டாங்கங்களிலும் காய முதலான பின்னமில்லாததாய், மிருத்யு வாகனமாகிய எருமைக்கிடாவை கெந்த புஷ்பாக்ஷதைகளால் அலங்கரித்து, சிகப்பு வஸ்திரத்தை போர்த்து மிருத்யோ என்கிற பத்தியின் ருக் மந்திரத்தினால் நன் றாக பூஜித்து, முன் வலக்காலில் 1-மரக்கால் உளுந்தும், இடக் காலின் முன் 1-மரக்கால் கருமையான எள்ளும், பின் இடக்கா லின் முன் 1-மரக்கால் பயறும், பின் வலக்காலின் முன் 1-மரக் கால் கடலையும் இந்த 4-தினுசு தானியங்களை ராசியாகக் கொட்டி, தெற்குமுகமாக எள் நிரம்பிய வெண்கல பாத்திரத்தில் பொன் சுரூபமாகவும், இரண்டு புஜங்களுள்ளதாகவும், வலக்கையிலே தண்டாயுதமும், இடக்கையிலே கோடாலியும் தரிக்கப்பட்டதாய், கோரைதந்த முடையதாய், விரித்த மயிருடனுமிருக்கிற எமன் பிரதிமையை வைத்து "பரேசிவாம்ஸம்" என்ற மந்திரத்தினு லும், சிகப்பு சந்தனம், சிகப்பு புஷ்பம், சிகப்பு அக்ஷதைகளால் பூஜித்து, நல்லெண்ணெயில் கலந்த அன்னத்தை நிவேதனம் செய்து, 11 அபேதமிருத்ரிரமிருதம் என்ற மந்திரத்தினால் பிரதக்ஷி ணம் செய்து, பூஜை முடிந்த பிறகு பிராம்மணரை பூஜித்து, தெற்குமுகமாக உட்காரவைத்து, ரக்த புஷ்ப வஸ்திராலங்காரம் செய்து, கிழக்குமுகமாக யிருந்து, மிருத்யு பரிகாரமாவதற்கு, மந்திர பூர்வகமாக தானம் கொடுக்கவேணும். விதிப்படி மஹிஷ தான மந்திரத்தை 3-தரம் உச்சரித்து அந்த எருமைக்கிடாவை 15, 5, அல்லது 3-வது அசக்தனாக இருக்கிறவன் 1 சுவர்னமாகி லும், தானம் சித்திக்கும் பொருட்டு தானம் கொடுக்கவேணும். அதற்குபின் பிராம்மணனை அனுப்பிவிட்டு சுவஸ்திவாசனம் செய்யவேணும். இந்த மஹிஷதானத்தை யதாவிதியாக செய்கிற புருஷன் மிருத்யுவினால் விடப்பட்டு சௌக்ய சந்தோஷாதிகளை அனுபவிப்பன்.

## சனி தெசையில் சனி பிரீதியாக ஸ்வர்ண சகித ஆயஸபாத்ர தானம்

தானங்களெல்லாவற்றிலும் உத்தமமான பொன் சனி பிரதிமையுடன் கூடின இரும்பு பாத்திர தானம் சனி பிரீதியாக கொடுக்கவேணும். அது எப்படி என்றால் :—

பலயீனமான சனி துர்ஸ்தானங்களிலிருந்த காலத்தில் ரோக பீடையும், மிருத்யு பயமும், தன நாசமும், மான பங்கமும், பந்து பீடையும், சுற்றத்தாருடன கலகமும், கிருஷி நஷ்டமும், உத்தியோக நாசமும், தாரா, புத்திராதி பீடையும், ஸ்தான நாசமும், பசு வாகனாதிகளுக்கு ஹானியும், பலவந்தர்களிடத்தில் விரோதித்துக் கொள்ளுவது இவைகளெல்லாம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு தானம் கொடுக்கும் பக்ஷத்தில் மனோபீஷ்டம் சித்தியாகும். சனிக்குப் பிரீதியாவன.

ஜன்ம நக்ஷத்திரத்திலாகிலும், கிரக யோகங்களிலாவது, விசேஷமாக சனி வாரத்திலாகிலும், தேவாலயத்திலாவது, தன் வீட்டிலாவது, கோமயத்தினல் மெழுகி சுத்தி செய்த இடத்தில் மரக்கால் உளுந்து ராசியின்மேல் தனுராகாரமாய் எழுதி ஸமமாக ஸ்வர்ன ரூபமான பிரதிமையைவைத்து, நீல வஸ்திரத்தை தரித்து, தான மந்திரத்தைச் சொல்லி, விதி பிரகாரமாக ஆவாகனம்செய்து, பூஜை செய்யவேணும். பிறகு கெந்த புஷ்ப வஸ்திராலங்காரம் செய்து, அஷ்ட திக்குகளுக்கும் பூஜை செய்யவேணும்.

### விதி

கோண : சனேச்சரஹ : மந்த : சாயா : ஹிருதய : ஹந்தன : மார்த்தாண்ட : ஸௌரி : பாதங்கி முதலிய நாமங்களினல் பூஜை செய்து, தூபதீப நைவேத்யாதிகளைச் சமர்ப்பித்து, பிறகு ஏழையாயும், வேதபாராயணராயு மிருக்கிற பிராமணருக்கு ஆவாகனாதி சோடசோபசாரம் செய்து வஸ்திரமால்யாதிகளை கொடுத்து அதன் பிறகு தான மந்திரத்தைச் சொல்லி மந்திரோக்தப் பிரகாரம் யதாசக்தி தக்ஷிணையுடன் கருப்புநிறமான பசுவைத் தானம் கொடுக்கவேணும். சாந்தி ஸூக்த ஜபம் செய்த பிறகு எஜமானனுக்கு சனி தோஷம் நிவர்த்தியாகி சுகமுண்டாகும்.

## சனி தெசையில் சனி புக்தி சனி பிரீதியாக எள் தானம்

சனி தெசையில் புக்தி நாதனாகிய சனி 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், நீசனாக இருந்தாலும, பாப கிரக சம்பந்தமாவது, பார்வை

யாவது பெற்றிருந்தாலும், இந்த புக்தியில் ஜுரமடித்தலும், வாத ரோக பயமும், ராஜ மூலமாக காரிய நாசனமும், தன விரையமும், க்ஷேத்திர நாசமும், அபமிருத்தியு பயமும், சத்துரு பாதையும் உண்டாகும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு தில தானம் கொடுக்க ஆசையுள்ளவன் கிரகண புண்யாதி காலங்களிலும், உபத்திரவ காலங்களிலும் தேவாலய புண்ய பிரதேசத்தில், கோமயத்தினல் சுத்தி செய்து விசித்திரகரமான கோலங்களைப் போட்டு அந்த இடத்தில் எள் மாவினல் 32 அங்குலம் உயரமுள்ள புருஷாகாரமாக உருவம் செய்து, எள்ளு ராசியின் பேரில் உட்கார வைத்து, நீலவஸ்திரத்தை தரிப்பித்து விஷ்ணு பிரீதிகரமாக தானம் செய்கிறதற்கு சங்கல்பம் செய்யவேண்டும். சங்கல்பம் முடிந்த பிறகு இந்த ஜென்மத்திலும், ஜன்மாந்திரங்களிலும், கர்மத்தினல் வந்த சகலவித பாபங்களையும், நிவர்த்தித்து சகலவித சுபங்களையும் அனுபவிக்கும் பொருட்டு சரீரதிடமாக பூரணயுளுடன் வாழும் பொருட்டும், அபமிருத்தியு தோஷம் நிவர்த்தியாகும் பொருட்டும், ஸ்ரீமாதவ பிரீதியார்த்தமாக இயமபுரோக்த தில தானம் கொடுக்கும்பொருட்டு சங்கல்பித்துக்கொண்டு மாதவ பூஜை செய்யவேணும்.

விஷ்ணு தியானத்துடன் ஓம் மாதவாய நம: முதலான நாம பூஜை செய்து சோடசோபசாரங்கள் செய்து எள்ளை ராசியாகக் கொட்டி ஓம் திலராசியே நம: முதலான நாமங்களினல் தில ராசியை பூஜை செய்து, சுரோத்திரியனை பிராமணருக்கு காதிற்கு கடுக்கனும், மோதிரமும், வஸ்திர முதலானதுகளும் கொடுத்து தான மந்திரத்தை சொல்லி தானம் கொடுக்கவேணும்.

ஜன்மா ஜன்மாந்திரங்களில் தன் துஷ்கிருத்யங்களினல் சம்பாதித்த சமஸ்த பாபங்களும் தொலையும் பொருட்டு, கோமயத்தினல் மெழுகின இடத்தில் பால், தயிர், நெய் முதலான வஸ்துக்களாலும், சந்தனக்ஷதை புஷ்பங்களினல் அலங்காரம் செய்து, எள்ளு ராசியின் மேலிருக்கிற சர்வ லக்ஷணமான மாதவ பிரதிமையை முன் சொன்ன பலன்களை அடையும் பொருட்டு தானம் கொடுக்கவேணும்.

## சனி தெசையில் புதன் பிரீதியாக மஹிஷ தானம்

சனி தெசையில் புத புக்தி காலத்தில் புதன் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும் பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், அல்லது பார்க்கப்பட்டாலும் இந்த புக்தியில் பங்காளி வர்க்கஸ்தர்களால் கலகம், தன நாசனம், பைத்தியமும், ஜுர பயமும், பாண்டு ரோகாதி சம்பவமும்

உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு எருமை தானம் செய்ய வேணும். இந்த தானம் செய்த பிற்பாடு நாளுக்கு நாள் ஆயுராரோக்ய அயிசுவரியாபி விருத்தியாகு மென்பது. இந்த தானத்தை சூரிய தெசையில் ராகு புக்தியில் சொன்ன விதிப் பிரகாரமாக தானம் கொடுக்கவேணும்.

## சனி தெசையில் கேது புக்தி கேது பிரீதிகர

## சுவர்ண தானம்

சனி தெசையில் கேது புக்தியில் கேது 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், குரூர கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும், 2, 7, மிடங்களிலிருந்தாலும், இந்த புக்தியில் ஸ்திரீ நாசம், புத்திர நாச மும், எத்தன காரிய பங்கம், கிராணி ஜுரபாதை, மனோ வியா கூலம், வியாதி பயம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியா வதற்கு மிருத்யுஞ் ஜயஜபம் செய்யவேணும். பொன் எள்ளு தானம் விதிப்பிரகாரம் செய்யவேணும். இப்படி செய்தால் சாந்தியாகும்.

## சாந்தி செய்கிற காலமாவது

ஜன்ம நக்ஷத்திரம் அல்லது ஸங்கிராந்தி புண்ய காலங்கள், விசேஷமாக ஏகாதசியிலும், வைத்துருதி நாமயோகம், வியதி பாத நாமயோகம், துவாதசி முதலான தினங்களிலும்; மகா ரோ கம் சம்பவித்த காலங்களிலும், பிரம்ம ஹத்தியாதி தோஷங்களை நிவர்த்தித்து, ஆயுர் விருத்தியை தருகிறதும், சர்வ பயங்களையும் நிவாரணம் செய்கிறதும், அசுபங்களை நாசம் செய்கிறதும், ஜன் மாதியாக துவாதசாஷ்டாதி துர்ஸ்தானங்களிலிருக்கிற கிரகங் களினால் கொடுக்கும் அரிஷ்ட தோஷங்களையும் தொலையும்படி செய்கிறதும், சனி, சூரியன், செவ்வாய் இவர்களால் உண்டாகும் தோஷங்களை துலைவிக்கிறதுமான சுவர்ன தானத்தை செய்ய வேணும்.

## தானம் செய்கிற வகை

குரு க்ஷேத்திராதி தீர்த்தங்களிலாவது, கங்காதி புண்ய நதிகளிலாவது, பசுக்கள் கட்டும் கொட்டகைகளிலாவது, தேவாலயங்களிலாவது, மனோகரமான கிரகங்களிலாவது, பூமி யை கோமயத்தினால் மெழுகி கிழக்குமுகமாக உட்காரும்படியாக பரப்பி அதன் பேரில் 1-மரக்கால் கருப்பு எள்ளை கொட்டி அதின் பேரில் சக்தியானுசாரமான பொன்னை வைத்து, பட்டு வஸ்திரத் தை போர்த்து, அதற்குமேல் புறத்தில் நெல் தானியத்தை

திண்ணை மாதிரியாகக் கொட்டி நிரவி அதன் பேரில் வருண கலசத்தை வைத்து அதற்கு வஸ்திரத்தை சுற்றி, நிஷ்க்கப் பிரமாணம் பொன்னால் செய்த சூரிய, வாயு, அக்கினி ஜல பர்ஜன்னிய பிரஹஸ்பதி இந்திரா விஷ்ணு மிருத்யு ஏம பிரம்ம பிரதிமைகளை யதா கிரமமாக ஸ்தாபித்து வேதோக்தமான மந்திர தந்திரங்களால் கெந்த புஷ்பாக்ஷதைகளாலும் வித்யுக்தமாக பூஜித்து அவரவர்களுக்கு பிரியமான நைவேத்தியங்களை சமர்ப்பிக்க வேணும். பூஜாவசான காலத்தில் அதற்கு மேற்கு பாகத்தில் அக்னி பிரதிஷ்டையைச் செய்து சக்ஷுரந்தமாக அக்னி முகத்தை செய்த பிறகு, "அஸத்யேன்" என்ற மந்திரத்தினால் எருக்கு சமித்துவகை நெய் பரமான்ன முதலாகிய வஸ்த்துக்களால் பிரதான ஹோமம் செய்யவேணும். அதே பிரகாரமாக பௌாசு, சமித்து அன்னம் நெய் முதலான திரவியங்களால் வாயு மந்திரத்தினால் அசுவத்த சமித்து எள்ளு நெய் முதலான திரவியங்களால் அக்கினி மந்திரத்தினால் தயிர் நெய் ஆலன் சமித்து முதலிய திரவியங்களினால் "ஆபோஹிஷ்டேதி" ஜல மந்திரத்தினால் பலாஸ் சமித்து நெய் முதலான திரவியத்தினால் "பர்ஜன்யாயேதி" என்ற மந்திரத்தினாலும், அரசு சமித்து, நெய் முதலான மந்திரத்தினால் "பிரஹஸ்பதேதி" என்ற குரு மந்திரத்தினாலும், பாதுமை சமித்து நெய் அன்னம் முதலாகிய திரவியங்களால் "இந்திரா விஷ்ணூபிபத" என்ற இந்திரா விஷ்ணு மந்திரத்தினாலேயும்,

நெய், எள் முதலான திரவியங்களால் "மிருத்யு" மந்திரத்தினாலேயும், சமீப விருக்ஷத்தின் சமித்து நெய் அன்னம் முதலான வஸ்த்துக்களினால் "யமாய" என்ற எம மந்திரத்தினாலும பலாசு சமித்து பரமான்னம் நெய் முதலான வஸதுக்களால் "பிரஹம்மணேதே" என்ற பிரஹம்ம மந்திரத்தினால் ஹோமம் செய்து சிஷ்ட குருது ஹோமானந்தரம் ஹோம சேஷத்தை சமாப்தி செய்யவேணும். பிறகு தான கர்த்தாவானவன் வெள்ளை வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு கலச ஜலத்தினால் ஸ்நானம் செய்து அக்னியை 3 பிரதக்ஷணம் செய்து இரண்டு கையும் கூப்பி புஷ்பத்தை கையில் வைத்துக்கொண்டு குடும்பியாயும், ஏழையாயும், எவ்வனாகவுமிருக்கிற பிராமணரை கோரி பாத பிரக்ஷாளனம் செய்து சக்தியாநுசாரமாக வஸ்திராதிகளை சமர்ப்பித்து மந்திர பூர்வமாக திலகாஞ்சன தானம் குசாக்ஷதைகளோடும் தானம் கொடுக்கவேணும். ஆகிலும் தான சித்தியை அடையும்பொருட்டு யதாசக்தி என்றது பத்து நிஷ்க்கமாவது, அல்லது அதில் பாதியாகிலும், தன லோபத்வமில்லாமல் தக்ஷிணை கொடுக்கவேணும். இந்த விதி பிரகாரம் ஒரே நாளில் திலகாஞ்சன தானம் செய்தால்

பிரம்ம ஹத்யாதி பாபங்களும், குரு பாரியை கமனமும், பிராமண துரோகமும், சுரா பானமும், மாதா பிதரு துரோகமும் இந்த பாபங்களிலிருந்து விடுபட்டு ஆயுராரோக்ய சம்பன்னனும், புத்திர பௌத்திர சம்பன்னனும் திரேகாந்திரத்தில் கோடி சூரிய பிரகாசமானனாகிய திவ்விய தேகத்தை வகித்து சூரிய மண்டலத்தை பேதித்துக்கொண்டு புண்ய லோகத்திலே எதேஷ்டமாக போக பாக்யங்களை அனுபவித்து திவ்விய சூரிகளால் புகழப் பட்டவனாகி புனர் ஜன்மமில்லாமல் பரமபதத்தை அடைபவனாவன்.

எள்ளெண்ணையால் தீபம் வைத்தவனும், எள்ளெண்ணெயினால் ஸ்நானம் செய்பவனும், எள்ளு தானம் செய்கிறவனும், எள்ளை பரீக்ஷிக்கிறவனும், எள்ளினால் ஹோமம் செய்கிறவனும் இந்த விதங்களினால் எள்ளை உபயோகிக்கிறவன் சமஸ்த்த பாபங்களினால் விடப்படுகிறான்.

## சனி தெசையில் சுக்கிர புக்தி சுக்கிர பிரீதிகர சாகாதி பஞ்சக தானம்

சனி தெசையில் சுக்கிர புக்தி காலத்தில் சுக்கிரன் நீசராசியிலிருந்தாலும், அஸ்தங்கதனானாலும், கிரக யுத்தத்தில் அபஜயத்தையடைந்தவனும், ஏகாதச ஸதானத்திலிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களி லிருந்தாலும், குரூர திரேக்ககாணங்களி லிருந்தாலும், இந்த புக்தியில் சரீர பீடையும், தன நாசமும், தாரவியோகமும், அதிக துக்கமும், பந்து த்வேஷமும், ஆப்த பந்து விரோதமும், சமான ஜன நாசனமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சாக பஞ்சக தானம் கொடுக்கவேணும்.

### சாக பஞ்சக தானமாவது

கருத்த செம்மறி ஆட்டுக் கிடா 1. வெள்ளை கம்பளி 2. 3. பருத்தி 4. எள் 5. பாணலி இந்த 5-ம் ஐந்து தர்ஸ்த் தானங்களையும், சாகாதி பஞ்சகமென்பதாக பண்டிதோத்தமர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தானங்களைச் சூரிய தெசையில் சனி புக்தியில் சொன்ன பத்ததி பிரகாரம் செய்ய வேண்டியது.

## சனி தெசையில் சூரிய புக்தி சூரிய பிரீதியாக கூஷ்மாண்ட தானம்

### கூஷ்மாண்ட தானம் செய்யும் விதம்

சனியில் சூரியன் 6, 8, 12-லிருந்தாலும், விகலாவஸ்தையி லிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந் தாலும், அப ஜயத்தை அடைந்தவனுனலும், 2, 7-மிடங்களி லிருந்தாலும், அந்த அதிபதிகளுடன் கூடினுலும், இந்த புக்தியில் நிச்சயமாக மரணம் உண்டாகும். அல்லது சூல ரோகம், குன் மம், புத்தி விகாரம், பைத்திய ரோகம், தன நாசமும், பங்காளி வர்க்கத்துக்கு நாசமும், மாதாபிதுர் மரணமும் உண்டாகும். இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரார்த்தனை செய்ய வேணும். பொன்னுல் நிரைந்த பூசனிக்காயை தானம் கொடுக் கும் பக்ஷத்தில் சாந்தியாகும். சூரிய தோஷம் பரிகாரமாவ தற்கு கல்யாண பூசனிக்காயையும், அதற்குள் 12-பலம் பொன் னுல் செய்த சூரிய பிரதிமையை வைத்து சோடசோபசார பூஜை செய்து, வஸ்திராபரண சகிதமாக பிராமணருக்கு ஆவாகனுதி பூஜையைச் செய்து வஸ்திர கெந்த புஷ்பாக்ஷதையை கொடுத்து விதிப்பிரகாரமாக தான மந்திரங்களைச் சொல்லி பலனை கொடுக் கிறதும், புத்திர, பௌத்திரர்களை உண்டாகும்படி சகல சம்பத் துக்களை கொடுக்கிறதும், ஆயுராரோக்ய ஐசுவரியாதிகளை கொடுக் கிறதுமான சுவர்ண கற்பிதமாகிய சாம்பல் பூசனிக்காயை தக்ஷிணை சகிதமாக தானம் கொடுக்கும் பக்ஷத்தில் சகல ஆபத்து களும் துலையும்.

## சனி தெசையில் சந்திர புக்திக்குச் சந்திர பிரீதியாக வெள்ளைப் பசு தானம்

சனி தெசையில் சந்திரன் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், க்ஷீணனுக இருந்தாலும், பாப கிரக சம்பந்தம் உண்டானுலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், பாப திரேக்காணங்களி லிருந்தா லும், இந்த புக்தியில் மாதுரு நாசமும், சீதள வியாதி பயமும், உதிர ரோகமும், தன நாசமும், தானிய நாசமும், பசு, வாகனுதி, கால் நடைகள் நஷ்டமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தி யாவதற்கு வெள்ளைப் பசுவை தானம் கொடுக்கவேணும். இந்த சாந்தியை சூரிய தெசையில் சந்திர புக்திக்கு சொன்ன பிரகார மாக தானம் கொடுக்கவேணும்.

## சனி தெசையில் செவ்வாய் புக்திக்குச் செவ்வாய் பிரீதியாக மஹிஷ தானம்

சனி தெசையில் செவ்வாய் புக்தியில் செவ்வாய் நீசமாக இருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், அஷ்டம ஸ்தானத்திலிருந்தாலும், பாப திரேக்காணங்களி லிருந்தாலும், குரூர சஷ்டியாமிசாதிபதிகளுடன கூடினாலும், குரூர கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், 6, 12-மிடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், அந்த காலத்தில் சகோதர நாசமும், சமான ஜன நாசமும், உயர்ந்த ஸ்தானங்களிலிருந்து கீழே விழுதலும், விஷ பீதியும், சஸ்திர பாதையும், அக்கினி பயமும், பூமி, நாசமும், தானிய நாசமும், தன்னிட சேவகருக்கு ஹாணியும் உண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு எருமை தானம் செய்யவேணும். சூரிய தெசையில் ராகு புக்தியில் சொல்லியிருக்கிற விதிப்படி சாந்தி செய்ய வேண்டும்.

## சனி தெசையில் ராகு புக்தி ராகு பிரீதியாக நாக தானம்

சனி தெசையில் ராகு புக்தி நடக்கிற காலத்தில் ராகு தூமாதி கிரகங்களுடன் கூடியிருந்தாலும், 5, 9-ம் வீடுகளி லிருந்தாலும், 6, 8-மிடங்களிலிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், குரூர திரேக்காணங்களி லிருந்தாலும், அந்த புக்தியில் திரவிய நாசமும், வாத ரோக பயமும், விஷ சர்ப்பாதி ஜந்துக்கள். பயமும், பிசாசு பயமும், ஜுர பீடை, சூன்யாதி, க்ஷுத்திர பாதையும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சந்திர தெசையில் செவ்வாய் புக்திக்குச் சொன்ன விதிப்படி நாகதானம் செய்யவும்.

## சனி தெசையில் குரு புக்தி குரு பிரீதியாக சுவர்ண நிமிர்த சாக தானம்

சனி தெசையில் குரு புக்தியில் குரு பாப திரேக்காணங்களி லிருந்தாலும், குரூர சஷ்டியாமிசாதிபதிகளுடன் கூடியிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், அந்த காலத்தில் பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும், 2, 7-மிடங்களிட அதிபதிகளுடன் கூடினாலும், பலஹீனனானாலும், இந்த புக்தியில் புத்திர மரணமும், குரு நாசமும், தன நாசமும், தானிய நாசமும், ஸ்தான நாசமும், பித்த ரோகமும், பாண்டு வியாதியும், தேக பீடையுமுண்டாகும்.

இந்த தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு திரியம்பக ஜபம் செய்ய வேணும். பொன்னால் செய்த ஆடு பிரதிமையை தானம் கொடுக்கும் பக்ஷத்தில் ஆரோக்யம் உண்டாகும். சூரிய தெசை சனி புக்தியில் சொன்ன விதியை அனுசரித்து தானம் கொடுக்க வேணும்.

## புத தெசையில் புத பிரீதியாக சுவர்ண பாத்திர தானம்

புதன் துஷ்ட ஸ்தானங்களிலிருந்து தெசை நடந்தால் படிக்கும் வகைகளில் தவக்கம், ஒருவரிடத்தில் அடிமைப்படுகிறது, பந்திப்பு, வாத ரோகம், சிலேத்தும ரோகம், தீனத்வமும், அவயவங்களில் பாதைகள் உண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு பொன் கலசம் தானம் கொடுக்கவேணும்.

ஜன்ம நக்ஷத்திரத்திலாவது, புதவாரத்திலாவது விசேஷமாக கிரக யோக சமயங்களிலாவது அல்லது இதர புண்யகாலங்களிலாவது, வீட்டிலாவது, தேவாலயத்திலாவது மெழுகி கோலமிட்டு பயறு ராசியாகக் கொட்டி பரப்பி, சுவர்ண நிர்ம்மித பாத்திரத்தை வைத்து யதா சக்தியாக சர்வ லக்ஷண சகிதமாக பீத வஸ்திரத்தை தரிப்பித்து பூஜை செய்யவேணும்.

சிம்மவாகனுருடனும், 4 புஜங்களுள்ளவனும், கடகம், சர்மம், கதை முதலியதுகளை தரித்தவனும், அதிக சௌக்ய சுபாவமுள்ளவனும், அதிக வித்வத்குணங்களையுடைய புதனை சகலவித புருஷார்த்தங்களை அடையும் பொருட்டு துதித்து மந்திரங்களினால் பூஜை செய்து குங்குமம், கெந்தம், புஷ்பம், அக்ஷதைகளால் கிழக்கு திக்குமுதல் நான்கு திக்குகளுக்கும் நாம பூஜை செய்து, அதர்வசிரோதீச சசிபுத்திர களாநிதிஹி அத்திரிகோத்ரஸமுத்பன்ன: முதலிய நாமங்களால் கிரமமாக பூஜித்து தூபதீப நைவேத்தியங்களை சமர்ப்பித்து, அதன் பிறகு பிராமணனுக்கு சோடசோபசார பூஜை செய்து, பீத வஸ்திரத்தை கொடுத்து பின்பு சுவர்ண பாத்திர தானம் கொடுக்கும் பொருட்டு மந்திர ஜபம் செய்து தான மந்திரங்களைச் சொல்லி விதிவத்தாக யதாசக்தியாக தக்ஷிணையுடன் அதிக பக்தியுடனும் சுவர்ண பாத்திர தானம் செய்ய வேண்டும். அதன் பிறகு சகல பாபங்களும் நிவாரணமாகி, சர்வ பாதகங்களும் தொலைந்து ரூபலாவண்ய ஸம்பன்னனுயும், பூர்ணயுளையுடையவனும் ஆவான்.

## புத தெசையில் புத புக்தி புத பிரீதியாக லக்ஷிமி நாராயண தானம்

புத தெசை புதன் சுய புக்தியில் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், குரூராமிசையிலிருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடியிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், இந்த புக்தியில் ஜுர பீடையும், அர்த்த நாசமும், மனோ வியாகூலமும், காராகிரக பிரவேசமும், பந்துத் துவேஷமும், அபமிருத்தியு பயமும், பந்து நாசமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு விஷ்ணு ஸஹஸ்ர நாமம் பாராயணம் செய்யவேணும். இதன் பிறகு லக்ஷிமி நாராயண தானமும் செய்தால் சமஸ்த தோஷங்களும் நிவர்த்தியாகி சகலவித சம்பத்தும் லபிக்கும். சந்திர தெசையில் புத புக்திக்கு சொல்லியிருக்கிற விதியை அனுசரித்து தானம் கொடுக்கவும்.

## புத தெசையில் கேது புக்தி கேது பிரீதியாக மகிஷ தானம்

புத தெசையில் கேது புக்தி நடக்கிற காலத்தில் கேது 6, 8, 12-மிடங்களிலும், 2, 7-மிடங்களிலும், குரூர கிரகங்களுடன் கூடினாலும் அந்த புக்தியில் வாத ரோகம், புத்தி பிரமையும், சுர கண்டம், தன் வர்க்கத்தாருக்கு பீடையும், குரு துவேஷம், தன விரையமும், ஸ்தான சலனம், மானபங்கம், ஸ்த்ரீ கலகம், அபகீர்த்தி பயங்களு முண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு மஹிஷதானம் அதாவது எருமை தானம் செய்ய வேண்டிய விதியை சூரிய தெசையில் ராகு புக்திக்கு சொன்ன சாந்தி விதி பிரகாரம் தானம் கொடுக்கவேணும் என்பது.

## புத தெசையில் சுக்கிர புக்தி சுக்கிர பிரீதியாக வெள்ளைப் பசு தானம்

புத தெசையில் சுக்கிர புக்தி நடக்கிறகாலத்தில் சுக்கிரன் நீசனாகி யிருந்தாலும், அஸ்தங்கதனானாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், 12-ம் இடத்திலிருந்தாலும், 6, 8-மிடங்களுக்கு அதிபருடன் கூடினாலும், துராமாதி கிரகங்களுடன் கூடினாலும், இந்த புக்தியில் ரோக பீடையும்; அபமிருத்யு பயமும், தார வியோகமும், மான பங்கமும், குதிரை வாகன நாசமும், ஸ்த்ரீகளுடன் கலகமும், பந்துத் துவேஷமும், மித்திரர்களுடன் விரோதமும் உண்டாகும். இந்த

தோஷம் நிவர்த்தியாவதற்கு வெள்ளைப் பசுவை தானம் செய்ய வேணும். சூரிய தெசையில் சந்திர புக்திக்கு சொன்ன விதியை அனுசரித்து தானம் செய்யவேண்டும்.

## புத தெசையில் சூரிய புக்தி சூரிய பிரீதியாக சூரிய பிரதிமை தானம்

புத தெசையில் சூரிய புக்தியில் சூரியன் 6, 8, 12-ம் இடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், நீசராசியி லிருந்தாலும், தூமாதி கிரகங்களுடன் கூடி இருந்தாலும், சனியுடனும், ராகுவுடனும் செவ்வாயுடனும், கூடியிருந்தாலும், பாப கிரகங்களால் பார்வையை அடைந்தாலும் இந்த புக்தியில் தேகத்தில் ரணபாதையும், மனஸ்தாபமும், காரிய ஹாணியும், சத்துரு பீடையும், சதா கலகமும், தன விரையமும் பிதுர் நாசமும், பந்து ஹாணியும், நாளு மூலங்களினால் தன விரையமும், பந்தன பிராப்தியும், ருண பாதையும், பைத்திய ரோகமும், க்ஷய ரோகமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரீதிகரமாக சூரிய பிரதிமை தானம் கொடுக்கவேண்டும்.

## சூரிய பிரதிமை தான விதி

சூரிய மூர்த்தியை தானங்கொடுக்க எண்ணினவன் அயனாதி புண்ணிய காலங்களிலும், தேவாலயாதி புண்ணிய பிரதேசங்களிலும், ஒரு ருசிகரமான இடத்தில் கோமயத்தினால் மெழுகி கோலமிட்டு பூமியில் தாமிர பாத்திரத்தை வைத்து இரண்டு அல்லது 3 நிஷ்கமும், 7 குதிரை கட்டின பொன் ரதத்தோடுங்கூடின சூரிய மூர்த்தி பிரதிமையைச் செய்து அந்த பிரதிமைக்கு பஞ்சாமிருதங்களினால் ஸ்நானம் செய்வித்து ரத்த வஸ்திரத்தை தரித்து குங்குமம் சிகப்பு சந்தன மால்யாதிகளால் அலங்காரம் செய்து அந்த தாமிர பாத்திரத்தில் வைத்து தானம் கொடுக்கும் கர்த்தா தான சங்கல்பம் செய்யவேணும்.

எனக்கு இந்த ஜன்மத்திலும், ஜன்மாந்திரங்களிலும் சம்பவித்த ஔஷதாதி பிரயோகங்களினால் உண்டான பிரமணரோக நிவாரணத்தின் பொருட்டும், சர்வ பாப க்ஷயார்த்தத்தின் பொருட்டும், சரீரத்தில் இப்போது உண்டான பிரமண ரோக ஸம்ரக்ஷயார்த்தத்தின் பொருட்டும், சர்வ மங்களகரமும் சித்திக்கும் பொருட்டும், திடதேகம் பெற்று பூர்ணாயுளையும், சகலாபீஷ்டத்தை கொடுப்பவனுமாகிய ஸ்ரீ சூரியநாராயண பிரீதியாக சூரியமூர்த்தி தானம் கொடுப்பதற்கு சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

பிற்பாடு தான மந்திரங்களினால் சூரிய மூர்த்தியை தியானித்து ஆஜ்ய தில ஹோமாதிகளை நடத்தி பிரத்தியேகமாக அஷ்டோத்தர சத நாம பூஜை செய்து அதன் பிறகு எஜமானன் மணையின்பேரில் உட்கார்ந்து யதா லிங்கத்தை சிரசின்பேரில் வைத்து ஜபம் செய்யவேணும்.

அதன் பிறகு எஜமானன் வடக்கு முகம் திரும்பி பொன் வாழைச் செடியை சோடசோபசாரமாக பூஜித்து அதன் பிற்பாடு ஆசாரியரை உத்தர திசையை நோக்கி உட்காரவைத்து வஸ்திரமும், கடுக்கனும், மோதிரமும் கொடுத்து,

பிறகு தேவதைகளாலும், பிதுருக்களாலும் லக்ஷ்மி தேவியை, சசிதேவியை, பார்வதி தேவியை, சாவித்திரி தேவியை, ரம்பை முதலியவர்களால் பூர்வ காலத்தில் காரியார்த்தமாக பூஜிக்கப்பட்ட வாழை மரத்தை அவயவங்களினாலும், பிரத்யங்கங்களில் உண்டான ஸர்வ குஷ்டமும் நிவாரணமாகும் பொருட்டு தான மந்திரத்தைச் சொல்லி,

(இது விருத்த கௌதமோக்த சூரியமூர்த்தி தான பத்ததி) மெழுகி கோலமிட்ட இடத்தில் அரை மரக்கால் அரிசியை ராசியாகக் கொட்டி அதின்பேரில் வெள்ளி குதிரை ஏறின 3 துலாம் பொன்னால் செய்த பிரதிமையை வைத்து சிகப்பு வஸ்திரத்தை தரிப்பித்து அதற்குபின் பூஜை செய்து, சர்வ லக்ஷண லக்ஷிதமான சூரிய பிரதிமையை வெள்ளை வஸ்திரம் பல புஷ்பாதிகளை பூர்வோக்த பிரகாரமாக தானம் கொடுத்து தான பலனையடையும் பொருட்டு தான திரவியங்களில் 3-ல் ஒருபாகமான எவ்வளவோ அவ்வளவு தக்ஷணையாக கொடுத்து பிராமணருக்கு போஜன மளித்து சேஷ பாகத்தை தானும் தன் புத்திர மித்திரர்களோடும் புசிக்க வேண்டும்.

## புத தெசையில் புத புக்தியில் சந்திர பிரீதியாக ரஜித தானம்

புத தெசையில் சந்திரன் புக்தியில் சந்திரன் க்ஷீணனானாலும், நீச ராசியிலிருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடினாலும் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிட அதிபதிகளுடன் சேர்ந்தாலும், அவர்கள் பார்வையை பெற்றாலும், இந்த புக்தியில் எந்த இடத்திலும் பயமும், சீதளமான ரோக பாதையும், மிருத்யு பயமும், பொருள் நாசமும், பந்துத் துவேஷமும், காரிய ஹாணியும், புத்தி பிரமையும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு வெள்ளி தானம் செய்கிற பக்ஷத்தில் சாந்தியாகும்.

இந்த தானம் கொடுக்கிறவன் அயனாதி புண்ய காலங்களில் புண்ய பிரதேசங்களில் ஒரு சுத்த பூமியில் கோமயத்தினால் மெழுகி கோலமிட்டு சிங்காரித்த இடத்தில் வெள்ளை வஸ்திரத்தை பரப்பி அதன் பேரில் 5 குண்டுமணி முதல் 3 துலாம் வரையில் எடையுள்ள தன் சக்தியினால் சுயமாக சம்பாதிக்கப்பட்ட வெள்ளியை வைத்து அதன் பிறகு தானம் கொடுக்கும் கர்த்தாவானவன் தான சங்கல்பம் செய்யவேண்டும்.

சங்கல்பாந்தியத்தில் தான் இந்த ஜன்மத்திலும், ஜன்மாந்திரத்திலும் செய்திருக்கிற சர்வ பாபங்களும் தொலையும் பொருட்டும், சகலவித ரோகமும் நிவர்த்தியாகி ரூபமும், சரீர காந்தியும், சுகமும், சௌபாக்யங்களுடன் தீர்க்காயுசும் பெற்று வாழ்வதற்கும், சந்திரலோக வாஸப் பிராப்தி சித்திக்கும் பொருட்டும், சோமாப்தக ஸ்வரூபனான ஸ்ரீ மகாவிஷ்ணு பிரீதிக்காக ரஜித தானம் கொடுக்கிறதற்காக சங்கல்பம் செய்து அங்கே வெள்ளியால் சந்திர பகவானை ஆவாகனம் செய்து "ஓம் ஸோமாய நம:" முதலான மந்திரங்களால் சோடசோபசார பூஜையைச் செய்து, சந்திர ஸ்வரூபரான பிராமணருக்கு வஸ்திராலங்காரம் செய்து,

பின்பு தான மந்திரங்களைச் சொல்லி சந்திர பிரீதியாக சந்திர ஸ்வரூபரான பிராமணருக்கு பூர்வோக்த பலன்கள் சித்திக்கும் பொருட்டு யதாசக்தி சுவர்ண தக்ஷிணையுடன் வெள்ளி தானம் கொடுக்கவேணும்.

## புத தெசையில் செவ்வாய் புக்தி செவ்வாய் பிரீதியாக அனட்வாக தானம்

புத தெசையில் செவ்வாய் புக்தி காலத்தில் செவ்வாய் 6, 8, 12-மிடங்களிலும், நீசனாகியிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், தூமாதி கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பாப திரேக்காணங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும் இந்த புக்தியில் சகோதர மரணம், பந்து பகை, ஜுரம், அக்னி, ஆயுதம், விஷம் இவைகளால் ஆபத்தும், சமான ஜன விரோதம், தாயாதி கலகம் இவைகள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ரிஷப தானம் செய்யவேணும். சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்கு சொல்லி யிருக்கிற விதியை அனுசரித்து தானம் கொடுக்க வேண்டும்.

## புத தெசையில் இராகு புக்தி ராகு பிரீதியாக சாக தானம்

புத தெசையில் ராகு புக்தியில் ராகு கேந்திரகோணங்களிலிருந்தாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், நீசாமிசையிலிருந்தாலும், நீச கிரக சம்பந்த மடைந்திருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடியிருந்தாலும், அந்த புக்தியில் விஷ பீதியும், சோர பாதையும், அக்னி பயமும் சீக்கிரமாகவே உண்டாகும். அதுவுமல்லாமல் வியாதி பீடை, மிருத்யு பயமும், ஸ்தான சலனமும், கடகம், சிம்மம், கும்பம் இந்த ராசிகளிலிருக்க கலகமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ஸஹஸ்ர ருத்திர ஜபம் செய்து, ஆடு தானமும் செய்கிற பட்சத்தில் சகலவித சம்பத்தும் உண்டாகும். சூரிய தெசையில் சனி புக்திக்குச் சொன்ன விதியைப்போல் தானம் கொடுக்க வேண்டும்.

## புத தெசை குரு புக்தியில் காஞ்சன பிரதிமை தானம்

புத தெசையில் குரு புக்தி குரு நீசனாக இருந்தாலும் பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், குரூர திரேக்காணங்களிலிருந்தாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், 2, 7-ம் இடத்திற்கு அதிபர்களுடன் சேர்ந்து இருந்தாலும் இந்த புக்தியில் தேக பாதையும், சனி, சூரியன், ராகு இவர்களுடனே கூடி இருந்தாலும் கலகமும், பந்து நாசமும், சோர பயமும், ராஜ பாதையும், துக்கமும், மாதா, பிதுரு நாசமும், சுரபீடை, விரண பாதை, அக்னி வாதை, பசு வாகன நாசம், பூமி நாசம், ருண பாதை இவைகளுண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மிருத்யுஞ்ஜய ஜபம் செய்யவேணும். பொன்னால் செய்த பிரதிமையை குரு பிரீதியாக செய்யவேணும். குரு தெசையில் சொல்லியபடி தானம் செய்யவேணும்.

## புத தெசையில் சனி புக்தி சனி பிரீதியாக மகிஷ தானம்

புத தெசையில் சனி புக்தி காலத்தில் சனி 6, 8, 12-ம் இடங்களிலிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், குரூர சட்டியாம்சங்களிலிருந்தாலும், 2, 7-ம் அதிபருடன் கூடினாலும், தூமாதி கிரக சம்பந்தம் உண்டாயிருந்தாலும், இந்த புக்தியில் வெளிதேச வாசமும், ஸ்வகிராம ஸ்திதி நாசமும், அதிகார பங்கமும், யுத்தத்தில் அபஜெயமும், வாதரோக பயமும், சூலை வியாதியுமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மஹிஷ தானம் செய்யவேணும். சூரிய தெசையில்

ராகு புக்திக்கு சொன்ன விதியை அனுசரித்து தானம் செய்ய வேண்டியது.

## கேது தெசை கேது பிரீதிகர ரஜிதலோக பாத்திர தானம்

கேது பிரீதியாக தான விதி சொல்லுகிறது. கேது தெசையில் கேது பிரீதியாக வெள்ளி பிரதிமையை லோஹ பாத்திரத்தில் வைத்து தானம் செய்யவேணும். அது எப்படி என்ருல் :—

துஷ்ட ஸ்தானங்களில் இருக்கிற கேது அதிக பயமும், விசேஷ ரோகமும், மிருத்யு பயமும், பந்து நாசமும், தானியார்த்த ஹாணி, பசு வாகனுதிகள் நஷ்டங்களுண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாகி ஆயுராரோக்ய ஐஸ்வரியங்களை அடைவதற்காக தானம் கொடுக்கவேண்டும். ஞாயிறு, செவ்வாய், சனி வாரங்களில் தேவாலயம், அல்லது வீடு இந்த இடத்தில் கோமயத்தினுல் சுத்தி செய்த இடத்தில் கொள்ளு எண்ணெய் இவைகளை ராசியாகக் கொட்டி லோஹ பாத்திரத்தில் கேது பிரதிமையை வைத்து நீல கெந்தாக்ஷத புஷ்பங்களால் பூஜை செய்து தியானம் செய்யவேணும். விதியான மந்திரங்களினுல் தியானித்து, சோடசோபசார பூஜையைச் செய்து தூபதீப நைவேத்யாதிகளை சமர்ப்பித்து மந்திர பூர்வமாக கேது ரூபமான வெள்ளி பிரதிமையை லோக பாத்திரத்தில் வைத்து யதா சக்திப்படி தட்சணையுடனே விதிப்பிரகாரமாக சர்வாரிஷ்டத்திற்காக பிராமணனுக்கு தானம் கொடுக்கும் பட்சத்தில் மனிதன் சர்வ தோஷங்களிலிருந்து விடப்பட்டவனுகி சுகத்தை அனுபவிப்பான்.

## கேது தெசையில் கேது புக்தி கெது பிரீதிகர உமா மஹேசுவர தானம்

கேது 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், இந்த அதிபருடன் சேர்ந்தாலும், குரூர கிரக சம்பந்தமும், பார்வையை அடைந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், குரூர சஷ்டியாமிசாதிபதிகளுடன் சேர்ந்தாலும், தூமாதி கிரகங்கள் சம்பந்தமானுலும் இந்த புக்தியில் தன நாசமும், தானிய நாசமும், மாதா, பிதுர் வியோகமும், பந்துத் துவேஷமும், மனே விசனமும் உண்டாகச் செய்யும். இந்த தோஷம் நிவாத்தியாவதற்கு மிருத்யுஞ்ஜய ஜபம் செய்யவேணும். உமா மஹேஸ்வர தானமும் செய்யவும். இப்படி செய்யும் பட்சத்தில் ஆயுராபிவிருத்தி யுண்டாகும்.

இந்த தானம் செய்ய இச்சையான புருஷன் அயனாதி புண்ய காலங்களிலும், தேவாலயாதி புண்ய பிரதேசங்களில் கோமயத்தினால் பூமியை சுத்திசெய்து, பச்சரிசியை கொட்டி அதின் மேல் வெள்ளியினால் கழுத்தில் மணியுள்ள ரிஷபத்தின பேரில் சக்திக்குத் தகுந்தபடி பொன்னால் உமா மஹேசுவர பிரதிமை நிருத்தி கௌசேய வஸ்திரத்தை தரிப்பித்து தானம் கொடுக்கும் பொருட்டு சங்கல்பம் செய்து விதிப்படி சொல்லி இருக்கிற மந்திரங்களினால் தியானித்து கலச ஸ்தாபனம் செய்து சோடசோபசாரங்களால் ஹோமாதி பூஜைகள் செய்த பிறகு உமாமஹேஸ்வர சுவர்ண பிரதிமையை தக்ஷிணை சகிதமாக கலசத்தை பிராம்மணருக்கு தானம் கொடுக்கவும்.

## கேது தெசையில் சுக்கிர புக்தி பிரீதியாக

## துர்க்கா தானம்

கேது தெசையில் சுக்கிரன் நீசனாக இருந்தாலும், அஸ்தங்கதனானாலும், அபஜெயம் பெற்றிருந்தாலும், 2, 7-ம் ராசி அதிப்ருடன் கூடியிருந்தாலும், 6, 8, 12-மிடத் ததிபருடன் கூடினாலும், குரூ ராமிசையி லிருந்தாலும், குரூர கிரக சம்பந்தம் பெற்றிருந்தாலும் இந்த புக்தியில் மிருத்யு ஸம்பவிக்கும். தாரப் பகை, அவ்வர்க்கத்தாரிடத்தில் கலகம், பந்துத்வேஷம், அன்னியஸ்தல வாசமும், எத்தின காரிய விநாசனமும், அஜீர்னம், குண்ம ரோகம், குக்ஷி சூலாதி ரோகங்கள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சந்திர தெசையில் குரு புக்தியில் சொன்ன விதியைப்போல் துர்க்கா தானம் செய்யவேணும்.

## கேது தெசையில் சூரிய புக்தி சிவ ஜபவிதி

கேது தெசையில் சூரிய புக்தியில் சூரியன் நீசஸ்த்தானத்திலிருந்தாலும், குரூரகிரக ராசியி லிருந்தாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், பாப கிரக சம்பந்தமாக இருந்தாலும், பிதுர்சமான வர்க்கத்தாருக்கு மரணமும், அகஸ்மாத்தாக கலகமும், ஸ்நான நாசமும், இஷ்டமானவர்களுக்கு கேடும், எடுத்த காரியங்கள் பங்கமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சிவ சஹஸ்ர நாமம் பாராயணம் செய்யவேணும். கபில வர்னமான ரிஷப தானம் செய்து சாந்தி ஹோமாதிகளை செய்யவேணும். சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்கு சொன்ன சாந்தி விதிபிரகாரம் செய்யவேணும்.

## கேது தெசையில் சந்திர புக்தி ரஜிதாசுவ தானம்

கேது தெசையில் சந்திரன் நீசனுக இருந்தாலும், பாபருடன் கூடியிருந்தாலும், 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், அந்த ராசி யாதிபர்களுடன் கூடினுலும், பாபிகளுடைய வீட்டிலிருந்தாலும் இந்த புக்தியில் விஷரோக சம்பவமும், மாதுர் மரணமும், ஆப்த பந்துக்களில் மரணம், க்ஷேத்திர நாசம், தானிய நஷ்டம், ஸ்திரீ விவாதம், கலஹம், ராஜ பாதை, எத்தின காரிய பங்கம், சிரோ வியாதி இவைகளுண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு துர்க்கா தேவியை குறித்து துர்க்கா ஸஹஸ்ரஜபம் செய்யவேணும். அத்துடன் வெள்ளியால் செய்த குதிரையை தானம் கொடுப்ப தால் ஆயுராரோக்கிய ஐஸ்வரியாதிகள் விருத்தி ஆகும். வெள்ளி யால் செய்யப்பட்ட சூரிய வாகனமான அசுவத்தை பக்தியாய் சிரேஷ்டமான பிராம்மணனுக்கு செவ்வாய் தெசையில் புத புக் திக்கு சொல்லி இருக்கிற விதியை அனுசரித்து தானம் கொடுக்க வேணும்.

## கேது தெசையில் செவ்வாய் புக்திகடு தைல கும்ப தானம்

கேது தெசையில் செவ்வாய் புக்தி நடக்கிற காலத்தில் செவ் வாய் 6, 8, 12-மிடங்களில் இருந்தாலும், 2, 7, மிடங்களிலிருந் தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், நீச க்ஷேத்திரத்தி லிருந்தாலும், சத்துரு ராசியிலிருந்தாலும், இந்த புக்தியில் சகோ தர மரணமும், பூ நாசமும், தன நாசமும், அடிமை வர்க்கம் விரோ தமும், ராஜ பாதையும் சோர பயம், அக்கினிவாதை, அதிஸார ரோகம், க்ஷயரோகம் இவைகள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமணியரிட ஜபம் செய்து தைல கும்ப தானம் கொடுப்பதனுல். சுகமும், ஆரோக்கியமும் உண்டாகும். அஷ்டமி, சதுர்த்தசி திதிகளிலாவது, ரிக்தை தினங்களிலாவது, ஞாயிறு சனி, செவ்வாய் இந்த வாரங்களிலாவது, கிரகத்திலாவது, தேவாலயத்திலாவது கோமயத்தினுல் சுத்தி செய்து எள்ளை ராசி யாகக் கொட்டி இரும்பு பாத்திரத்தை வைத்து அதில் 3-துலாம் பொன்னுல் செய்த எம பிரதிமையை, சதுர்ப்புஜ மஹிஷ வாகன சூல யபராபய தனுராயுதங்களை தரித்த மூர்த்தியைச் செய்து ஆவா கனம் செய்து அதன் பிறகு.

மந்திரங்களில் தியானித்து பின் ஏமத்துவாதச நாம பூஜை செய்து, புஷ்பாஞ்சலிதனுய் தூப தீப நைவேத்தியாதிகளை சமர்ப்பித்து அதே பிரகாரமாக பிராம்மணரை நீல கந்தாக்ஷதை புஷ்பங்களினல் பூசை செய்து மந்திர பூர்வமாக கடதானம் கொடுக்கிறதற்கு சுரோத்திரியனுன பிராமணனுக்கு பொன் விராகன் 5-க்கு குறைவில்லாமல் தக்ஷிணை கொடுத்து எமதோஷ சாந்திக்காக தானம் செய்யவேணும். சிரத்தை பக்தியோடும் விதியை யனுசரித்து எண்ணெ நிறைந்த குடத்தை தானம் செய்யவேணும்.

## கேது தெசையில் ராகு புக்திக்கு மஹா கூஷ்பாண்ட தானம்

கேது தெசையில் ராகு புக்தியில் ராகு கேந்திர திரிகோணங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களிட அதிபதிகளுடன் கூடி யிருந்தாலும், பலமான பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், நீசாமிசத்தி லிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும் இந்த புக்தியில் தகப்பன், பாட்டன்மார்களுக்கு மரணத்திற்கு சமான கண்டம் வரும். க்ஷேத்ர தெய்வ தோஷம், பேய் பிடித்தல், பிரம்ம ராக்ஷஸ பயம், சுர பீடை, விதவைகளால் கலகமும், ருண பாதையும், தரித்திர பீடிதம், நீசரிடத்தில் அடிமைப்படல், மானபங்கம், தன் பத்னிக்கு ரோகபாதையும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மிருத்யுஞ்ஜய ஜபம் செய்யவேணும். மஹா கூஷ்பாண்ட தானம் செய்த பிறகு ஆயுராரோக்யாபி விர்த்தியாகும்.

புராணஹத்தியாதி பாபங்கள் நிவர்த்தியாவதர்க்கும், அதற்கு சமானமான பாபங்கள் நிவர்த்தி செய்வதற்கும், சந்தான விருத்திக்கும், ஸங்கிராந்தியிலாவது, ரத சப்தமியிலாவது, வியாதிபாத வைதுருதி யோகங்களிலாவது கிரகண புண்ணிய காலங்களிலாவது, சயனேகாதசி தினத்திலாவது, சிரத்தையாக விதிப்பிரகாரமாக லக்ஷ்மி நாராயண பிரீதிக்காக 10-க்கு குறைவு இல்லாமலும், 108-க்கு அதிக மில்லாமலும் இருக்கும்படியாக கலியாண பூசனிக்காயை கொண்டு வந்து காய் ஒன்றுக்கு ஒவ்வொரு விஷ்ணு பிரதிமையைப் போட்டு ஒவ்வொரு வஸ்திர சகிதமாக அதிக தக்ஷிணையுடன் தான மந்திரத்தை சொல்லி பிராம்மணருக்கு தானம் கொடுக்கும் பக்ஷத்தில் சர்வ பாபங்களும் துலைந்து பூர்ணயுளோடுங் கூடிய புத்திர பௌத்திரர்களும் உண்டாகப் பெற்று விஷ்ணு லோக பதவியைச் சேருபவனுவன்.

## கேது தெசையில் குரு புக்தியில் குரு பிரீதிகர தில தானம்

கேது தெசையில் குரு புக்தியில் குரு 6, 8, 12-மிடங்களிலும், 2, 7, மிடங்களிலும், பாபகிரகங்களுடன் கூடினாலும், நீசராசி, நீசாமிசைகளி லிருந்தாலும், நீச கிரகங்களுடன் சம்மந்தமாயிருந்தாலும், குரூர கிரகங்களுடன்கூடி யிருந்தாலும், இந்த புக்தியில் மனோ துக்கமும், அப கீர்த்தி பயமும், குரு விரோதமும், ஸ்தான நாசமும், பிதுர் வர்க்கத்தாருக்கு நாசமும், பந்து கலகமும், சரீரத்தில் வியாதி, தாரா புத்திரர்களுடன் கலகமும், அவர்கள் மூலமாக திரவிய நஷ்டம் உண்டாகும் இந்த தோஷம் பரிகாரமாவதற்கு தில தானம் செய்யவேணும். சனி தெசையில் சனி புக்திக்கு சொன்ன விதிப்படி தானம் செய்ய வேண்டியது.

## கேது தெசையில் சனி புக்தி பிரீதியாக எம தானம்

கேது தெசையில் சனி புக்தியில் சனி நீசனாயிருந்தாலும், சத்துருக்களுடன் கூடினாலும், சத்துரு ராசிகளிலிருந்தாலும், 2, 7-மிடத்திலிருந்தாலும், அதிபதிகளுடன் கூடினாலும், 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடி யிருந்தாலும் இந்த புக்தியில் நிச்சயமாக மரணமும், அல்லது மரண சமான ஆபத்தும், பந்துக்களுடன் கலகமும், சகோதர நாசமும், சமான ஜன ஹாணியும், ஆப்த பந்து நாசமும், ருண பாதை, ரோக பீடிதம், நானாவித ரோகங்களும் உண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு எம தானம் செய்யவேணும்.

இந்த தானம் செய்ய நினைக்கிறவன் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலாகிலும், சதுர்த்தசியிலாகிலும், புண்ய காலங்களிலாகிலும், கோமயத்தினால் மெழுகி கோலமிட்ட இடத்தில், இரும்பு பாத்திரத்தை வைத்து அதுபோல், வெண்கல பாத்திரத்தில் வெள்ளிபத்மத்தை வைத்து அந்த பத்மத்தின் மேல்பாகத்தில் தன் சக்திக்குத் தகுந்தாப்போல் பொன்னால் செய்த எருமை வாகனத்தின் பேரில், பஞ்ச லோகத்தினால் செய்த எமதூதப் பிரதிமையை ஆயுத சகிதமாக செய்து எருமையின் பேரில் வைத்து நீல வஸ்திரத்தை சுற்றி தானம் கொடுக்கப்பட்ட கர்த்தா பிரதியக்ஷ மஹிஷமாகிய பிரஷ்டபாகத்தில் நின்றுகொண்டு இந்த ஜன்மத்திலும், பூர்வ ஜன்மத்திலும் செய்த சமஸ்த்த பாபமும் க்ஷயத்தை அடையும்பொருட்டும் எம பாசத்தினால் உண்டாகிய பயம் நிவாரணமாகும் பொருட்டும், சகலாபீஷ்ட பலத்தை கொடுக்கிறவருமான ஸ்ரீ எமதர்ம ராஜாவிற்கு பிரீதிகரமாக மிருத்யுஞ்ஜய புரோக்த பிரகாரமாக எமதான

மும் கொடுக்கிறதற்காக சங்கல்பம் செய்ய வேண்டியது. அதன் பிறகு தான மந்திரங்களைச் சொல்லி ஹோமங்கள் செய்து இரும்பு பாத்திர சகிதமாக கோமயத்தினால் சுத்தி செய்த பிரதிமை தான சகிதமாக யதாசக்தி தக்ஷணையுடன் பிராம்மணருக்கு தானம் கொடுத்து, பஞ்சலோக மஹிஷ தானத்தை நெய்யினால் நிரம்பிய குடத்தை தானம் செய்து சுவர்ண தானங்கூட செய்து அதன் பிறகு பிராம்மண சந்தர்ப்பணை செய்யும் பக்ஷத்தில் தோஷ சாந்தி யுண்டாகி சகலாபீஷ்டமும் உண்டாய் வாழ்வன் என்பது. இப்படி எமதான விதியை சொல்லப்பட்டிருக்கிறது.

## கேது தெசையில் புத புக்தியில் மிருக தானம்

கேது தெசையில் புத புக்தியில் புதன் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், நீசராசிகளி லிருந்தாலும், அஸ்தங்கதனானாலும், குரூர திரேக்காணங்களி லிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடி யிருந்தாலும், மாரக ராசிகளிலிருந்தாலும், இந்த புக்தியில் பித்த ரோகமும், மாதுர் வர்க்கத்தாருக்கு நாசமும், சிரோ ரோகமும், சந்தாபமும், கலகமும், ஸ்தான சலனமும், சினேகித ஜன விரோத மும், பந்துத் துவேஷமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தி யாவதற்கு மிருக தானம் செய்யவேணும்.

பூர்வ ஜென்மத்தில் செய்த நானாவித தோஷங்களை அனு சரித்து உண்டாகும் வாத ரோகாதி பாதகங்களை நிவர்த்தியாகும் பொருட்டு மிருக தானம் செய்யவேணும்.

## மிருக தான விதி

கிரக யோக காலங்களிலும் பட்ச சித்திர தினத்திலும், அரிசி தானமும், மிருக தானமும், செய்யும்பொருட்டு சுத்த பிரதேசத் தில் ஆவாஹனாதி சோடசோப சாரங்களால் மந்திர பூர்வமாக மிருகத்தை பூசித்து அதின் மூக்கில் வைடூரியத்தையும், நேத்திரத் தில் முத்துகளையும், வெள்ளியினால் வாலும், தாமிர மணியை தரித்து, அதன் பிறகு பிராம்மணருக்கு பூஜை செய்து சுவர்ண தக்ஷணை சகிதமாக மிருக தானம் செய்யும் பக்ஷத்தில் பூர்வ கர்மத் தினால் உண்டான வாத ரோகாதி பாதைகள் நிவர்த்தியாகி புருஷ னுக்கு சுகங்கள் லபிக்கும்.

## சுக்கிர தெசையில் சுக்கிர புக்திக்கு பிரீதியாக ரஜிதபாத்திர தானம்

தானங்களில் முக்கியமான வெள்ளி பாத்திர தானத்தை சுக்கிர பிரீதியாக செய்யவேணும். சுக்கிரன் பலஹீனனுக இருந்தால் சுற்றத்தாருடனே கலகம், தாரா புத்திரர்களுக்கு அரிஷ்டம், மனோ பிராதியும், வெகு மூத்திர ரோகமும், திரவிய நாசமும், ரோகமும் சம்பவிக்கும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு சகல ஐஸ்வரியாதிகளை பெரும்பொருட்டும், புத்திர பௌத்திராபி விருத்திக்கும்படியாகவும் சுக்கிர பிரீதிக்காக வெள்ளி பாத்திர தானம் செய்யவேணும். ஜன்ம நக்ஷத்திரம், அல்லது நாம நக்ஷத்திரத்திலாவது, வெள்ளிக்கிழமையிலாவது, கிரக யோகத்திலாவது, விசேஷ புண்ணிய காலங்களில் தேவாலயங்களிலோ, அல்லது சொந்த வீட்டிலோ சுத்த பிரதேசமான இடத்தில் மொச்சை நிறைந்த வெள்ளி பாத்திரத்தை வைத்து ஆவாஹனுதி சோடசோபசார பூஜையைச் செய்து வைத்திய குருவாகிய சுக்ரனை பூசித்து மந்திர விதிப்படி தியானித்து வெள்ளை கெந்தாக்ஷத புஷ்பங்களை பக்தியாக சமர்ப்பித்து கிரமமாக பூஜை செய்து பின்பு தூபதீப நைவேத்தியங்கள் செய்து வெள்ளை வஸ்திராபரண சகிதமாக பிராம்மணருக்கு யதா மந்திர விதி பிரகாரம் பாத்திர தானம் செய்யவேணும்.

சுக்கிர பிரீதிகரமாக அதிக பக்தியுடனே தக்ஷிணை சகிதமாகவும், மந்திர பூர்வமாகவும், ரஜித பாத்திர தானம் செய்து, சுக்கிரனுல் சகலாரிஷ்டங்களும் நிவர்த்தியாகி பாப பரகிதனுகிருன். இன்னும் சகலவித சம்பத்துடனும், ரூபவந்தனும், தனவந்தனும், கீர்த்திமானும், ஜன வல்லபனும், இஹலோக சுகங்களை சம்பூர்த்தியாக அனுபவித்து, போக அனந்தரம் விஷ்ணுலோக பதவியை அடைகிறவனுவன்.

## சுக்கிர தெசையில் சுய புக்திக்கு வெள்ளை பசு தானம்

சுக்கிர தெசையில் சுய புக்தியில், சுக்கிரன் 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், சத்துரு க்ஷேத்திரத்தி லிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், பல ஈனனுனும் இந்த புக்தியில் திரவிய நாசமும், மித்திரக்லேசமும், பந்து ஜன நாசமும், பார்யா புத்திரர்களுக்கு அரிஷ்டம், வாகன நாசம், வஸ்திர ஹீனம், க்ஷேத்திர ஹானி, தானிய நஷ்டம், பசு ஹானி, ஸ்தான பேதம், மானஹானியும் உண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு சூரிய தெசையில் சொல்லியிருக்கிற விதியை அனுசரித்து வெள்ளை பசுவை தானம் கொடுக்க வேணும்.

## சுக்கிர தெசையில் சூரிய புக்திக்கு சூரிய பிரீதிகர சாயா தானம்

சுக்கிர தெசையில் சூரிய புக்தியில் சூரியன் நீசனுயிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், 2, 7-க்கு அதிபர்களுடன் கூடினாலும், 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், இந்த புக்தியில் சுர பாதையும், பைத்ய ரோகமும், தாயாதிகளுடன் கலகம், அதிகார பங்கம், சரீர பீடை, தாரா புத்திராதிகளுக்கு மரணம், அல்லது பகை இந்த தோஷங்கள் நிவர்த்தி யாவதற்கு சூரிய பிரார்த்தனை செய்து சாயா புருஷ தானமும் செய்த பிறகு சந்தேகமில்லாமல் சாந்தியாகும்.

சுக்கிர தெசையில் சூரியன் குரூரனுக இருக்கும் பக்ஷத்தில் சூரியனுல் உண்டாகும் சரீர பீடை முதலான தோஷங்கள் நிவர்த்தியாகும் படிக்கும், பாபங்கள் பரிகாரமாகும் படிக்கும் ஜன்ம நக்ஷத்திர புண்ய காலங்களில் சுத்த பூமியில் கோமயத்தினுல் மெழுகி விசித்திரமான கோலங்களை யிட்டு தரையில் 10-மரக்கால் எள்ளை ராசியாக கொட்டி அதின் பேரில் பத்மத்தைப்போல் எழுதி நீல வஸ்திரத்தை பரப்பி பொன் பிரதிமையை அதின் பேரில் வைத்து எள்ளு அக்ஷதைகளால் பூஜித்து அதற்கு முன் பாகத்தில் தானிய ராசியின் பேரில் கலச ஸ்தாபனம் செய்து பூஜை விதிகளை செய்து அதற்கு மேற்கு பாகத்தில் அக்கினி பிரதிஷ்டையைச் செய்து, ஸம்ஸ்மரிஷி என்று 108-அவுஜாஹுதுக்களை தில ஹோம ஸர்வ ஜெப ஹோம பூறணுஹூதி முதலிய கர்மாக்களை செய்து குண்டலத்தில் 5-மரக்கால் நெய்யை நிறைத்து வைத்து அதற்குள் 3-விராஹன் எடையுள்ள பொன் பிரதிமையை போட்டு கருப்பு வஸ்திரத்தை சுத்தி கால புருஷ கலசத்திற்கு முன்பு வைத்து மஹா பூஜையை செய்து மந்திர சகிதமாக தியானித்த பின்பு ஆஜ்யாவலோகனம் செய்து வெண்கல பாத்திரத்தில் உருக்கின நெய்யில் சாயாபுருஷ தெரிசனம் செய்து அப்படி 3-தரம் பார்த்த பிறகு சுரோத்திரிய பிராம்மணருக்கு யதாவிதியாக பூஜித்து மஹா தக்ஷிணை சகிதமாக சர்வத்தையும் தானம் கொடுத்த பிறகு சர்வாரிஷ்டமும், பீடையும், ரோக பாதையும் நீங்கி மிருத்யுபரிகாரமாகி சூரிய பிரீதியுண்டாகும்.

## சுக்கிர தெசையில் சந்திர புக்தியில் சந்திர பிரீதியாக மிருக தானம்

சுக்கிர தெசையில் சந்திரன் புக்தியில் சந்திரன் 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், நீசராசியி

லிருந்தாலும், பாப கிரக சம்பந்தம் உண்டானாலும், க்ஷீணனாக யிருந்தாலும், விகலாம்சத்தை அடைந்து இருந்தாலும், இந்த புக்தியில் பொருள் நாசம், மாதா, மாதா வர்க்கத்தாருக்கு அரிஷ்டம், ஸ்திரீகளுடன் கலகம், சரீரத்தில் வாதரோகாதி பாதை, அன்ன துவேஷம், அஜீர்ணாதி ரோக சம்பவம், ஸமான ஜனத்வேஷம், தன் பிரபு மூலமாக கலகமும், பயமும், உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு கேது தெசையில் புத புக்திக்கு சொன்ன மிருக தான விதியை யனுசரித்து தானம் செய்யவேணும்.

## சுக்கிர தெசையில் செவ்வாய் புக்திக்கு பிரீதிகர அனட்வாக தானம்

சுக்கிர தெசையில் செவ்வாய், 6, 8, 12-மிடங்களிலும், 2, 7-மிடங்களிலிருந்தாலும், குரூரத் திரேக்காணங்களி லிருந்தாலும், பாபகிரகங்களுடன் கூடியிருந்தாலும, அல்லது பார்க்கப்பட்டாலும், நீசராசியி லிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், இந்த புக்தியில், சேவகஜன நாசமும், சகோதர நாசமும், மனோ விசனமும், வீடு மனைகள் நஷ்டமும், க்ஷேத்திர நாசமும், தன ஹானியும், தானிய நஷ்டமும், தாயாதிகளுடன் கலகமும், ருண பாதையும், விஷ பீதியும், சஸ்திர பயமும், அக்கினி வாதையும், புத்தி விகாரமும், மனோ விகாரமும், சதா கலகமும், சுர பாதையும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ஸ்கந்த பூஜை செய்யவும். செய்தபின் விருஷப தானம் செய்யும்பட்சத்தில் சந்தேகமில்லாமல் சாந்தியாகும். சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்கு சொன்ன சாந்திப்படி செய்யவேண்டியது.

## சுக்கிர தெசையில் ராகு புக்தியில் ராகு பிரீதிகர மஹா கூஷ்மாண்ட தானம்

சுக்கிர தெசையில் ராகு புக்தியில் ராகு நீசராசியி லிருந்தாலும், 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், 2, 7-மிடங்களி லிருந்தாலும், கேந்திர கோணங்களி லிருந்தாலும், பாப திரேக்கணங்களி லிருந்தாலும், குரூர ஷஷ்டியம்சங்களி லிருந்தாலும், இந்த புக்தியில் 5 மாஸம் பரியந்தம் வாதசுர பயமும், அஜீர்ன ரோகம், காரிய விக்னம், வெளி பிரயாணங்களில் ஆபத்து, தலைநோய், தனநாசமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கா தேவி ஜெபம் செய்யவேணும். மஹா கூஷ்பாண்ட தானமும் செய்தால் சாந்தியாகும். கேது தெசையில் ராகு புக்திக்கு சொன்ன சாந்திப்படி தானம் கொடுக்கவும்.

## சுக்கிர தெசையில் குரு புக்தி குரு பிரீதிகர

## சுவர்ண கர்ப்பித கூஷ்பாண்ட தானம்

சுக்கிர தெசையில் குரு புக்தியில் குரு நீசராசியி லிருந்தாலும், அஸ்தங்கதனுக இருந்தாலும், அபஜயனு யிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், துஷ்டஸ்தானங்களி லிருந்தாலும், இந்த புக்தியில் காரிய ஹாணியும், பிராம்மணரால் பயமும், ராஜ துவேஷமும், ஸ்தான நாசமும், கலகமும், சரீராயாசமும், தன் குரு வினத்தில் கலகமும், தன் ஜாதி மனுஷரிடத்தில் பகையும், தாரா புத்திரர்களுக்கு மரணமும், புத்தி பிரமையும் உண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு ருத்திர ஜபம் செய்ய வேணும். சுவர்ணம் நிறைந்த கூஷ்பாண்ட தானம் செய்கிறதினல் தேகாரோக்யம் உண்டாகும். சனி தெசையில் சூரிய புக்திக்கு சொல்லியிருக்கிற விதியை அனுசரித்து செய்ய வேண்டியது.

## சுக்கிர தெசையில் சனி புக்தி சனி பிரீதிகர

## மஹிஷ தானம்

சுக்கிர தெசையில் சனி புக்தி காலத்தில் சனி லக்கினம், 2, 7, 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், நீச க்ஷேத்திரத்திலிருந்தாலும், நீசாம்சையிலிருந்தாலும், நீசகிரக சம்பந்தமா யிருந்தாலும், குரூர கிரகங்களுடன் கூடினுலும், அந்த புக்தியில் ராஜ கோபம், காரிய நாசமும், தன ஹாணியும், தான்ய நஷ்டமும், சமான ஜன கோபம், பசுக்கள் நஷ்டமும், வாத சுர பீடையும், அதிசார ரோகபாதை, சூலே, பாண்டு வியாதியும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரிய தெசையில் ராகு புக்திக்கு சொன்ன விதிப்பிரகாரம் எருமை தானம் செய்யவும்.

## சுக்கிர தெசையில் புத பிரீதிகர லக்ஷிமி

## நாராயண தானம்

சுக்கிர தெசையில் புத புக்தி காலத்தில் புதன் 6, 8, 12-மிடங்களிலும், 2, 7-மிடங்களிலும், நீசராசியிலும், குரூராமிசையிலிருந்தாலும், குரூர சம்பந்தம் உண்டாயிருந்தாலும், குரூர சஷ்டியாமிசையி லிருந்தாலும், பந்துக்களிடத்தில் கலகம், அம்மான்மார்கள் நாசமும், அபகீர்த்தி பயமும், தானிய நஷ்டமும், அதிகார பங்கமும், பைத்ய ரோக பயமும், சுர பாதை, அதிசாராதி ரோகம், மாதுரு வர்க்கத்தாருக்கு ஹாணியுண்டாகும்.

இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு விஷ்ணு பூஜை செய்ய வேணும். அதுவுந் தவிர லக்ஷ்மீ நாராயண தானம் செய்த பிறகு தோஷ சாந்தியாகும். சந்திர தெசையில் புத புக்திக்கு சொன்ன சாந்திப்படிக்கு தானம் கொடுக்கவும்.

## சுக்கிர தெசை கேது புக்தி சாக தானம்

சுக்கிர தெசையில் கேது 6, 7, 8, 12-மிடங்களிலிருந்தாலும், கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், பாப கிரகத்திருக்க யோக்யாதி சம்மந்தமுண்டாயிருந்தால் இதில் கலகம், சத்துரு விருத்தி, விஷபாதை, அக்கினி பாதை, அதிக கஷ்டங்கள் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மிருத்யுஞ் ஜயஜபம் செய்து, ஆடு தானமும் செய்தால் சர்வ சம்பத்துக்கள் உண்டாகி தீர்க்காயுசுடன் வாழ்வன் என்பது. இந்த சாந்தியை சூரிய தெசை சனி புக்திக்குச் சொன்ன சாந்தியைப்போல் தானம் கொடுக்க வேண்டியது.

ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி சம்பூர்ணம்.

முற்றிற்று.

---

ஸ்ரீ ராமஜெயம்
வம்சபரம்பரை
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ஜோதிட சாலை
M. S. வெங்கட சுப்பிரமணிய ஜோஸ்யர்
நீ, 80, கீழ மூன்றும் தெரு
மன்னார்குடி.

ஸ்ரீ ராமஜெயம்
வம்சபரம்பரை
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ஜோதிட சாலை
M. S. வெங்கட சுப்பிரமணிய ஜோஸ்யர்
நீ, 80, கீழ மூன்றும் தெரு
மன்னார்குடி.

# அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம். |
| 1. | நவக்கிரக தெசா காலங்களில் சரீர ரோகோற்பத்தி நிர்ணயம் | - | 1 |
| 2. | சூரிய பிரீதி சாந்தி | - | 10 |
| 3. | சூரிய தெசையில் சூரிய புக்திக்குத் தானம் | - | 11 |
| 4. | ,, சந்திர ,, கோதான விதி | - | 12 |
| 5. | ,, செவ்வாய் ,, செவ்வாய் பிரீதி ரிஷப தானம் | - | 13 |
| 6. | தானம் செய்யும் நாள் | - | 13 |
| 7. | சூரிய தெசையில் செவ்வாய் புக்திக்குச் சாந்தி | - | 13 |
| 8. | ,, இராகு ,, ,, | - | 14 |
| 9. | ,, குரு ,, ,, | - | 15 |
| 10. | ,, சனி ,, ,, | - | 16 |
| 11. | ,, புதன் ,, ,, | - | 17 |
| 12. | ,, கேது ,, ,, | - | 17 |
| 13. | ,, சுக்கிர ,, ,, | - | 17 |
| 14. | சந்திர தெசை சந்திர பிரீதி தானம் | - | 18 |
| 15. | ,, செவ்வாய் புக்திக்கு சாந்தி | - | 19 |
| 16. | நாகதான விதி | - | 19 |
| 17. | சந்திர தெசையில் இராகு புக்திக்கு பிரீதியாக ஆடுதான விதி | - | 19 |
| 18. | ,, குரு புக்திக்கு குரு பிரீதி சாந்தி | - | 20 |
| 19. | ,, சனி ,, சனி ,, எருமை தான விதி | - | 20 |
| 20. | ,, புதன் ,, புதன் ,, லக்ஷ்மி நாராயண தானம் | - | 21 |
| 21. | ,, கேது ,, கேது பிரீதி ஆடு தான விதி | - | 21 |
| 22. | ,, சுக்கிர ,, சுக்கிர பிரீதி எரு | | |

மை தானம் - 22
23. சந்திர தெசையில் சூரிய புக்திக்கு சூரிய பிரீதி துர்கா தானம் - 22
24. செவ்வாய் தெசையில் செவ்வாய் பிரீதியாக தாம் பிர பத்ம தானம் - 22
25. ,, ,, புக்தியில் செவ்வாய் பிரீதி யாக அனட்வாஹ தானம் செய்யவும் - 23
26. செவ்வாய் தெசையில் ராகு புக்தியில் செவ்வாய் பிரீதியாக எருமை, கருப்பு பசு தானம் - 23
27. ,, குரு புக்தி குரு பிரீதி சொர்ன தானம் - 24
28. ,, சனி ,, சனி திலாதி தானம் - 24
29. ,, புதன் ,, புதன் பிரீதி அசுவ தானம் - 25
30. ,, கேது ,, கேது பிரீதி ஆடு தானம் - 25
31. ,, சுக்கிர ,, துர்கா தானம் - 26
32. ,, சூரிய ,, பத்ம தானம் - 26
33. பத்ம தான விதி - 26
34. செவ்வாய் தெசையில் சந்திரபுக்திக்கு துர்கா தானம் 27
35. ராகு தெசையில் ராகு பிரீதியாக சொர்ன லோக தானம் - 27
36. ,, ராகு புக்தி பிரீதியாக நாக தானம் - 28
37. ,, குரு ,, சாந்தி தானம் - 28
38. ,, சனி ,, சனி பிரீதிகர செம்மறி ஆடு தானம் - 28
39. ,, புத புக்தி புத பிரீதியாக ஸ்ரீ மூர்த்தி தானம் - 29
40. ,, கேது ,, கேது ,, நாகதானம் - 30
41. ,, சுக்கிர ,, சுக்கிர ,, துர்கா தானம் - 31
42. ,, சூரிய ,, சூரிய ,, திலபத்ம தானம் 31
43. திலபத்ம தானம் செய்யும் விதம் - 31
44. மந்திரம் - 32
45. இராகு தெசையில் சந்திர புக்தி சந்திர பிரீதியாக வன்னி தானம் - 33

46. இராகு தெசையில் செவ்வாய் புக்தி செவ்வாய் பிரீதியாக நாக தானம் - 33

47. குருமகா தெசையில் குரு பிரீதியாக சுவர்ண பத்ம தானம் - 33

48. மந்திர விதி - 34

49. குரு தெசையில் குரு சுயபுக்தி குரு பிரீதியாக சுவர்ண பிரதிமை தானம் - 34

50. சுவர்ண பிரதிமை தான விதி - 35

51. குரு தெசையில் சனி புக்தியில் சனி பிரீதி கிருஷ்ண மிருக தானம் - 35

52. கிருஷ்ண மிருக தான விதி - 35

53. குரு தெசையில் புத புக்தி புத பிரீதியாக மகர தானம் - 36

54. ,, கேது ,, கேது ,, மேஷ தானம் - 37

55. பிரத்தியக்ஷ மேஷதான விதி - 37

56. குரு தெசையில் சுக்கிர புக்தி சுக்கிர பிரீதியாக லக்ஷ்மி நாராயண தானம் - 38

57. ,, சூரிய புக்தி சூரிய பிரீதியாக சாகதானம் - 38

58. குரு தெசையில் சந்திர புக்தி சந்திர பிரீதியாக சாக தானம் - 39

59. ,, ,, ,, செவ்வாய் ,, சுவர்ன தானம் - 39

60. ,, ,, ,, ராகு ,, மஹிஷ தானம் - 39

61. தான விதி - 40

62. சனி தெசையில் சனி பிரீதியாக ஸ்வர்ண சகித ஆயஸ பாத்ர தானம் - 41

63. விதி - 41

64. சனி தெசையில் சனி புக்தி சனி பிரீதியாக எள் தானம் - 41

65. ,, புதன் பிரீதியாக மஹிஷ தானம் - 42

66. ,, கேது புக்தி கேது பிரீதிகர சுவர்ண தானம் - 43

67. சாந்தி செய்கிற காலமாவது - 43

68. தானம் செய்கிற வகை - 43

69. சனி தெசையில் சுக்கிர புக்தி பிரீதிகர சாகாதி பஞ்சக தானம் - 45

70. சாக பஞ்சக தானமாவது - 45
71. சனி தெசையில் சூரிய புக்தி சூரிய பிரீதியாக கூஷ்மாண்ட தானம் செய்யும் விதம் - 46
72. „ சந்திர புக்தி சந்திர பிரீதியாக வெள்ளைப் பசு தானம் - 46
73. „ செவ்வாய் புக்தி செவ்வாய் பிரீதியாக மஹிஷ தானம் - 47
74. „ ராகு புக்தி ராகு பிரீதியாக நாக தானம் - 47
75. „ குரு „ குரு „ சுவர்ண நிர்மித சாக தானம் - 47
76. புத தெசை புத பிரீதியாக சுவர்ண பாத்திர தானம் - 48
77. „ புத புக்தி பிரீதியாக லக்ஷ்மி நாராயண தானம் - 49
78. „ கேது புக்தி கேது பிரீதியாக மஹிஷ தானம் - 49
79. „ சுக்கிர புக்தி சுக்கிர பிரீதியாக வெள்ளைப் பசு தானம் - 49
80. „ சூரிய „ சூரிய பிரீதியாக சூரிய பிரதிமை தானம் - 50
81. சூரிய பிரதிமை தான விதி - 50
82. புத தெசையில் சந்திர புக்தியில் சந்திர பிரீதியாக ரஜித தானம் - 51
83. „ செவ்வாய் „ செவ்வாய் பிரீதியாக அனட்வாக தானம் - 52
84. „ ராகு „ ராகு பிரீதியாக சாகதானம் - 53
85. „ குரு புக்தியில் காஞ்சன பிரதிமை தானம் - 53
86. „ சனி புக்தி சனி பிரீதியாக மஹிஷ தானம் - 53
87. கேது தெசையில் கேது பிரீதிகர ரஜிதலோக பாத்திர தானம் - 54
88. „ கேது புக்தி கேது பிரீதியாக உமா மஹேஸ்வர தானம் - 54
89. „ சுக்கிர „ பிரீதியாக துர்கா தானம் - 55
90. „ சூரிய புக்தி சிவ ஜப விதி - 55

91. கேது தெசையில் சந்திர புக்தி ரஜிதாசுவ தானம் - 56
92. ,, செவ்வாய் புக்திக்கு தைல கும்ப தானம் - 56
93. ,, ராகு ,, மஹா கூஷ்பாண்ட தானம் - 57
94. ,, கேது தெசையில் குரு புக்தியில் குரு
பிரீதியாக சில தானம் - 58
95. ,, சனி ,, பிரீதிகர எமதானம் - 58
96. ,, புத புக்தியில் மிருக தானம் - 59
97. மிருக தான விதி - 59
98. சுக்கிர தெசையில் சுக்கிர புக்திக்கு பிரீதியாக
ரஜித பாத்திர தானம் - 60
99. ,, சுய புக்திக்கு வெள்ளை பசு தானம் - 60
100. ,, சூரிய புக்திக்கு சூரிய பிரீதிகர சாயா
தானம் - 61
101. ,, சந்திர ,, சந்திர ,, மிருக தானம் - 61
102. ,, செவ்வாய் ,, பிரீதிகர அனட்வாக
தானம் - 62
103. ,, ராகு ,, ராகு பிரீதிகர மகா
கூஷ்பாண்ட தானம் - 62
104. ,, குரு ,, குரு பிரீதிகர சுவர்ண
கர்பித கூஷ்பாண்ட தானம் - 63
105. ,, சனி புக்திக்கு சனி பிரீதிகர மஹிஷீ
தானம் - 63
106. ,, புத ,, லக்ஷ்மி நாராயண தானம் - 63
107. ,, கேது ,, சாக தானம் - 64


அட்டவணை முற்றிற்று.

---

அறிவிப்பு:—இப்புத்தகம் இரண்டாம் பதிப்பாகும். தற்போது காகித விலையின் ஏற்றத்தாலும், அச்சுக்கூலியின் ஏற்றத்தாலும் இப்புத்தகத்தின் விலை ரூ 1. என்று நிர்ணயிக்கப் பட்டது.

## இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள

# கடினமானப் பதங்களுக்கு அர்த்தம்

(1) அனட் வாஹ—ரிஷபம் (2) காஞ்சன பிரதிமை—பொன் பிரதிமை (3) கிருஷ்ண சாரம்—கறுப்பு புள்ளிமான் (4) கிருஷ்ண மிருகம்—கறுப்பு மான் (5) சாக(ம்)—வெள்ளாடு (6) திலபத்ம(ம்)—எள் தாமரைப்பூ (7) திலாதி—எள் முதலியன (8) பத்ம(ம்)—தாமரைப்பூ (9) மகர(ம்)—சுறு மீன் (10) மகிஷ(ம்) எருமை (11) மஹா கூஷ்பாண்ட(ம்)—கலியாண பூஷிணிக்காய் (12) மேஷ(ம்)—ஆடு (13) ரஜித(ம்)—வெள்ளி (14) லோக(ம்)—பொன்.

---

C. Govinda Rajan B.A., (Mathematics) என்னும்

**C. G. ராஜன்** இவர் குமாரர்

**C. S. மணியம்** என்னும்

**C. சுப்பிரமணியம்**, B. A., (Honours)

ஆகிய இவர்களால் எழுதப்பட்டதும், பார்வையிடப்பட்டதுமான புத்தகங்கள் முதலியன விபரம்.

---

1. ஜாதக கணிதம் முதல் பாகம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள்கணிதம் (மூன்றும் பதிப்பு) சேஷ்டாபலம் கணிக்கத் தேவையான உவா-உவாந்தம், கிரக வக்கிரம் முதலியவை அடங்கியுள்ளது. இது C. Govinda Rajan என்னும் C. G. ராஜன் B.A., (Mathematics) அவர்களால் எழுதப்பட்டது-கிளேஸ் காகிதம்-346 பக்கம். விலை ரூ. 2-8-0. போஸ்டேஜ் அணு 0-8-0.

குறிப்பு:—ஜாதக கணித சாகரம்-ஜாதக சாகரம் என்ற வேறு பெயருடைய புஸ்தகங்கள் C. G. ராஜன் அவர்களால் எழுதப்பட்டனவல்ல என்றதை அறியவும். C. G. ராஜன் எழுதிய அல்லது பார்வையிடப்பட்ட புஸ்தகங்கள் "C. G. ராஜன்" என்ற-பெயரை வெளிப்படையாகப் போட்டிருக்கிறதா என்று கவனித்து வாங்கவும். C. G. ராஜன் அவர்களால் எழுதப்பட்ட அல்லது பார்வையிடப்பட்ட எந்த புஸ்தகமும் ஆனந்த போதினி ஆபீஸில் அச்சிடவாவது அல்லது வெளியிடவாவது ஆனந்தபோதினி ஆபீசுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற விஷயமும் இவர்களுக்குள் மனஸ்தாபம் என்ற விஷயமும் அறியவும்.

2. ஜாதக கணிதம்-இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்-கிளேஸ் காகிதம்-416 பக்கம்.

விலை ரூ. 2-12-0. போஸ்டேஜ் 0-9-0.

3. ஜாதக கணிதம் மூன்றும் பாகம் என்னும் ஜாதக மனோ ரஞ்சிதம் மலர் 1-Astrological Dogmas employed in Nadi Granthas) கிளேஸ் காகிதம் 546 பக்கம்.

விலை ரூ. 3-4-0. போஸ்டேஜ் 0-10-0.

4. ஜாதக கணிதம் நான்காம் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம்-மலர் 2-(Astrological Dogmas employed in Nadi Granthas) இது C. G. ராஜன் B.A., (Mathematics) அவர்களால் எழுதப்பட்டது-கிளேஸ் காகிதம்-312 பக்கம்.

விலை ரூ. 2-4-0. போஸ்டேஜ் 0-8-0.

5. ஜாதக சிரோன்மணி என்னும் வராஹமிஹிரருடைய பிருஹத் ஜாதகம்-கிளேஸ் காகிதம். 318-பக்கம்.

விலை ரூ. 2-0-0. போஸ்டேஜ் 0-8-0.

6. தேசா புத்தி சிந்தாமணி-இது கோமடம் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்காரால் சி. ஜி. ராஜன் போதித்த பிரகாரம் எழுதப்பட்டு சி. ஜி. ராஜன் அவர்களால் பார்வை யிடப்பட்டது. 216-பக்கம்.

விலை ரூ. 3-0-0. போஸ்டேஜ் 0-8-0.

7. நவக்கிரக ஸ்புட கணனம் என்னும் சித்தாந்த இராஜ சிரோன்மணி (கிரக கரணம்)-தமிழில்-கிளேஸ் காகிதம்-564-பக்கம். விலை ரூ. 5-0-0. போஸ்டேஜ் 0-13-0.

ஷை இங்கிலீஷில் கிளேஸ் காகிதம்-510 பக்கம்.

விலை ரூ. 5-0-0. போஸ்டேஜ் 0-13-0.

8. ஜாதக தேசாரிஷ்ட நிவாரணி-இது கோமடம் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்காரால் சி. ஜி. ராஜன் போதித்த பிரகாரம் எழுதப்பட்டு சி. ஜி. ராஜன் அவர்களால் பார்வையிடப்பட்டது.

விலை ரூ. 1-0-0. போஸ்டேஜ் 0-6-0.

9. லக்கினஸ்புட பாவஸ்புட கணிதம் (Tables of Bhavas) இது . G. ராஜன் B.A., (Mathematics அவர்களால் செய்யப்பட்டது.

தமிழில் விலை ரூ. 1-8-0. போஸ்டேஜ் 0-7-0.

இங்கிலீஷில் விலை ரூ. 1-4-0. போஸ்டேஜ் 0-6-0.

10. ஜாதக பாவ இருவாட்சி-ஆயுள், ஜீவன களத்திர பாவங்கள்—மலர் 1. பாகம் நெ. 1—ஆயுள் பாவம்.

விலை அணு 0-10-0. போஸ்டேஜ் 0-6-0.

ஷை பாகம் நெ. 2—களத்திர பாவம் என்ற ஏழாம் பாவம்—மலர் 1—கிளேஸ் காகிதம்—92 பக்கம்.

விலை அணு 0–10–0. போஸ்டேஜ் 0–6–0.

ஷை பாகம் நெ. 3—ஜீவன பாவம்—மலர் 1.

விலை ரூ, 1–2–0. போஸ்டேஜ் 0–6–0.

ஷை பாகம் நெ. 4—புத்திர பாவம்—மலர் 1. அச்சியில் இருக்கிறது. வெகு விரைவில் வெளிவரும்.

11. ஜாதக ஜம்புநாதீயம்—இது சி. ஜி. ராஜன் குமாரர் சி. சுப்பிரமணியம் B.A., (Honours, அவர்களால் மொழிபெயர்ப்புரை செய்யப்பட்டு சி. ஜி. ராஜன் அவர்களால் பார்வையிடப்பட்டது—கிளேஸ் காகிதம்—109 பக்கம்.

விலை ரூ. 0–12–0. போஸ்டேஜ் 0–6–0.

12. ஜாதக சர்வார்த்த சிந்தாமணி—இது சி. ஜி. ராஜன் அவர் குமாரர் சி. சுப்பிரமணியம் B.A., (Honours) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, சி. ஜி. ராஜன் அவர்களால் பார்வையிடப்பட்டது. கிளேஸ் காகிதம்—292 பக்கம்.

விலை ரூ. 2–4–0. போஸ்டேஜ் 0–7–0.

13. கிராந்தி கணனம் 1883ஞு முதல் 1945ஞு வரை கிரகங்களின் கிராந்தி இது சி. ஜி. ராஜன் அவர்கள் குமாரர் சி. சுப்பிரமணியம் பி. ஏ., (Honours) அவர்களால் செய்யப்பட்டு சி. ஜி. ராஜன் அவர்களால் பார்வையிடப்பட்டது.

விலை ரூ. 2–0–0. போஸ்டேஜ் 0–7–0.

14. ஜாதக சுகப்பிரம்மரிஷி வாக்கியம் என்னும் ஜாதக சுகர் வாக்கியம். இது சி. ஜி. ராஜன் அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதம்-120 பக்கம்.

விலை ரூ. 0-6-0. போஸ்டேஜ் 0-6-0

---

கிடைக்குமிடம் :—

சி. சுப்பிரமணியம் B. A., (Honours) ஆப்

சி. சுப்பிரமணியம் அண்டு பிரதர்ஸ்,

(சி. ஜி. யூரேனியா பிரஸ்)

36. ஆயலூர் முத்தையா முதலி தெரு,

சௌகார்பேட்டை போஸ்டு, மதருஸ்.